# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

கௌரவ ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—ரு] பிரஜோற்பத்தி௵ புரட்டாசி, ஐப்பசி௴ [பகுதி—௬, ௭

SEP 193[illegible]

## கடவுள் வாழ்த்து

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தெண்ணீரே
உகந்த தெண்ணீரிடை மலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
வாடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேயென் னலங்க லணிந்தருளே.

(திருவருட்பா)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மகாத்மாவும் செங்குந்தரும்

காந்தியடிகளார் ஓர் ஒப்பற்றபேரவதார புருஷர், எல்லா அருங்குணங்களும் நிரம்பித் ததும்பும் தூய மனமுடைய புருஷோத்தமர், பொது நலத்துக்காக எல்லா நலன்களையும் அறவே துறந்து ஆண்டியாய்த் திகழும் மகாத்மா எனக் கண்டு, இந்தியர் மட்டுமன்றி உலகத்திலுள்ள பல தேசத்தாரும் அவரைப் பெரிதும் போற்றி அவரது உபதேசங்களைக் கையாண்டு பெரு நன்மை துய்க்கின்றனர். பொதுவாக உலக மக்கள் நன்னெறியைக் கடைப்பிடித்து உய்ய வேண்டி அவர் பாடுபடுகிறாரெனினும், சிறப்பாக அவரது அரிய தொண்டெல்லாம், அடிமைப் படுகுழியி வீழ்ந்து வறுமை முதலிய பெருங் காயங்களுற்றுக் கவலுறும் நமது இந்தியத் தாயைப் பண்டை மேனிலைமைக்கு மீட்டு விடுவதற்காகவே ஆற்றப்படுகின்றது.

இந்திய மக்களெல்லாம் இம்மகானது பரோபகார உழைப்பினால் சாலவும் நன்மையடைகின்றன ரெனின், அம்மக்களுள் ஒரு பெரும் பகுதியினராகிய நங்குல மக்களுக்கும் அந்நன்மையி லொரு பாகம் கிடைக்கின்றதெனக் கூறவேண்டா. ஆழ்ந்து யோசிக்கின், அவரது உழைப்பினால் மற்ற ஜாதியாரினும் நாமே அதிகமாகப் பய னடைபவரும் பய னடையக்கூடியவருமா யுள்ளோம்.

நமது தாய் நாட்டை அந்நிய நாட்டாரது கொடிய பிடியினின்றும் விலக்கவும், நம்தேசத்தினரனைவரையும் சீர்திருத்தவும் அவர் செய்யும் யுத்தத்தில் அந்நிய ஆடை பகிஷ்காரத்தையும் கதர் இயக்கத்தையுமே அவர் முதன்மையான ஆயுதங்களாக உபயோகிக்கிறார். இவ்விரண்டு ஆயுதங்களையும் நன்கு பலப்படுத்தவும் அவற்றைக் கொண்டு புரியப்படும் போரினாலுண்டாகும் நன்மையை அதிகமாக அனுபவிக்கவும் கூடியவர் நங்குலத்தவரேயன்றோ? இந்தியா முழுமையுமே இதனாலுண்டாகும் பயனை அனுபவிக்குமாயினும், நெசவையே குலத்தொழிலாகக் கொண்டுள்ள நாமே இதனால் சிறப்பாக நன்மையடைவோம்.

“காந்தியடிகளார் ஆரம்பித்த கதரியக்கத்தினாற்றான் எங்கள் தொழிலும் வியாபாரமும் கீழ் நோக்கிச் செல்லுகின்றன. அதனாற்றான் எங்கள் வயிற்றில் மண் விழுகிறது” என நம்மவரிடை ஒரு பக்கம் எழும்புங் கூக்குரல் எமது காதுகளைத் துளைக்கின்றது. ஆனால், நிதான யோசனை இக்கூற்றினைப் பொய்ப்பிக்கின்றது. தப்பு காந்தியாரதுமல்ல, அவரது கதர் இயக்கத்ததுமல்ல; நம்முடையதே. கதரியக்கம் பலப்பட்டு வருகிறது; கதராடைக்குக் கிராக்கி அதிகப்பட்டு வருகிறது; அந்நிய நாட்டு ஆடைகட்கு அழிவு தோன்றியிருக்கிறது என்பது உண்மையே. இந்த நிலையினால் நம்மவரது கைத்தொழில் க்ஷீணிக்கிறது என்று சிலர் ஓலமிடுவதும் ஒரு விதத்தில் உண்மையே. ஆனால் அத்தகைய க்ஷீணிப்புக்குக் காரணஸ்தர்கள் நாமே. நம்முடைய நிலையை உயர்த்திக் கொண்டு நாம் பழைய அந்தஸ்தையடைவதற்கு ஒரு சரியான சந்தர்ப்பம் இப்பொழுதுதான் வாய்த்திருக்கிறது. ஆனால் அச்சந்தர்ப்பமோ, கோழிக்குக் குப்பையிலகப்பட்ட வைரக்கல் போன்றிருக்கிறது. அந்த வைரம் பெரு மதிப்புடையதென உணராது கோழி அதை விழுங்குமாயின் கோழியின் குடல் அறுபடலாம்; அதனால் கோழி மடிந்தாலும் மடியலாம். கதரியக்கத்தை நமது நன்மைக்காக எவ்வளவோ உபயோகித்துக் கொள்ளலாம். அதை நமக்கொரு ஆதாரமாக்கிக்கொள்ளலாம். ஆனால் அந்தோ! நமது தொழில் விருத்திக்கு முட்டுக் கட்டையாயுள்ளவற்றை வெட்டி விலக்கி, நமது கைத்தொழிலைக் காத்துக்கொள்வதற்கு உபயோகமாகக் கூடிய அவ்வொள்ளிய வாளை நமது தொழிலையே வெட்டும்படி நாம் செய்துகொள்ளுகிறோம்.

இன்னமும் நாம் கண்மூடிக் கிடக்கிறோம். உலகப் போக்கு நமது கண்களிற் படுகிறதில்லை. உலகத்திலெழும் முன்னேற்ற முழக்கம் நமது காதுகளிற் புகுகிறதில்லை. அர்த்தமற்ற, பிரயோசனமற்ற, பொல்லாங்கு விளைக்கும், குருட்டுப் பழக்கங்களொரு பக்கம்; கல்வியில்லாப் பெருங்குறையொரு பக்கம்; விதண்டாவாதமொரு பக்கம்; ஒத்துழைப்பில்லாமையொரு பக்கம். இவ்வாறு நாம் எல்லாப் பக்கங்களிலும் வீணான மதில்களாற் சூழப்பட்டுள்ளோம். அவையே உலக நன்மைகள் நம்மை வந்தடைவதைத் தடுக்கின்றன. மற்ற மக்கள் ‘எந்த மலரில் ஒரு துளி தேனிருக்கும்?’ எனத் தேடிப் போடும் தேனீக்களைப் போல் ‘எந்த வழியிற் சிறிது நன்மையாவது கிடைக்கும்?’ என்னும் நாட்டத்தில் முனைந்து நிற்கின்றனர். நாமோ, “தண்டாமரையின் கீழிருந்தும் தண்டேனுகரா மண்டூக”ங்களாயுள்ளோம். நமது கைத்தொழிற் திறமையை குறுக்கான வழியில் உபயோகிக்கிறோம். நமது வியாபாரத் திறமையை ஏழைக் கூலியாட்களது வயிற்றையடிப்பதில் வெகு சாமர்த்தியமாக உபயோகிக்கிறோம். நமக்குள்ளிருக்கும் ஒரு வித அபிமானத்தையும், கட்டுப்பாட்டையும், வன்மையையும் நம்மையழித்துக்கொள்வதற்கே உபயோகிக்கிறோம். நம்மிடமிருந்த கட்டுப்பாடெல்லாம் மறைந்தொழிந்தது. “ஒற்றுமையில்லையே” எனக் கூவுவோர் கூவ “ஐயோ, 1008 சிரங்களை முக மலர்ச்சியுடன் ஒரே மனதாய் அறுத்து வழங்கிய காலமெல்லாம் போயிற்றே” என்று முறையிடுவோர் முறையிட, நாம் கக்ஷியென்னும் கொடிய வாளை நமக்குள்ளேயே வீசிக் கொண்டு மாண்டு மடிகிறோம். இந்நிலையில் நாமெங்ஙனம் உலகப் போக்கில் தலையிடுவது? நமது தேசத்துக்குக் கிடைக்கும் நன்மைகளில் பங்கெடுத்துக் கொள்வது?

காலப் போக்கையறிந்து நமது முறைகளை மாற்ற வேண்டுமென்பது நமக்குக் கனவிலும் தோன்றுவதில்லை. பழைய வழக்கங்களையே உடும்பு பிடியாய்ப் பிடித்துள்ளோம். “எங்கள் பாட்டன் முரட்டுத் துப்பட்டி நெய்தான்; எங்கள் பாட்டன் வெள்ளைத் துணியே நெய்தான். நானும் அப்படித்தான் நெய்வேன்” என்று வீண்வார்த்தை பேசுகிறோம். ஐயோ! நமது பாட்டனும் பாட்



டனுக்குப் பாட்டனும் வாழ்ந்தது 18-ஆம் நூற்றாண்டு; இல்லை, திரேதா யுகம். நாம் வாழ்வது 20-ஆம் நூற்றாண்டாயிற்றே. வருடத்துக்கு வருடம், நாளுக்கு நாள், ஏன்—நிமிஷத்திற்கு நிமிஷம் உலகம் மாறுதலடையும் காலமாயிற்றே இது. பத்து வருடங்கட்கு முன் ஆகாயத்திற் பறப்பதென்றால் “பைத்தியம்” என்று எள்ளி நகையாடியிருப்போம். இப்போது ஆகாய விமானங்கள் மட்டுமா? ஆகாயம், கடல், பூமி எல்லாவிடங்களிலும் செல்லக்கூடிய விமானங்களும் சகஜமாகிவிட்டன. இது ஒரு துறை. எல்லாத் துறைகளிலும் இவ்வாறே நடக்கின்றது. மேனாட்டார் ஒவ்வொரு விநாடியையும் சாஸ்திர ஆராய்ச்சியிற் பயன்படுத்துவதை யறியாது நாம் வருடங்களை, யுகங்களை வீணாக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம். “இறந்தவரையும் உயிர்ப்பிப்போம். கற்பாறையிலிருந்தும், இறந்தொழிந்த பிராணிகளின் எலும்பிலிருந்தும் உயிர்களை—மனிதனையுங்கூட—தோற்றுவிப்போம்” என மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் மார்பைத் தட்டுகிறார்கள்.

சோதரர்களே! கண்ணைத் திறவுங்கள். துணிக் கடைகளைப் போய்ப் பாருங்கள். ஒரு நாளைக்குப் பத்துக் கணக்கான புதிய ரகங்கள் வந்து குவிகின்றன. எத்தகைய ஆடைகள் இந்திய மக்களது மனத்தைக் கவரும் என ஆராய்ந்த வண்ணமே இருக்கின்றனர் மேனாட்டார். நாம் என்ன புதிதாகக் கண்டு பிடித்தோம்? நமக்குக் கூரை நாட்டுப் புடவை தெரியும்; முரட்டுத் துப்படி தெரியும்; வெள்ளை வேஷ்டிகள் தெரியும், குட்டைகள் தெரியும். அவற்றிற்குமேல் வாயைப் பூட்டிக்கொள்ள வேண்டியதுதான். இவைகளெல்லாம் எக்காலத்தவை? இக்காலத்து மக்கள் விரும்பக் கூடியவையா? மேலும் சொற்ப விலைக்குக் கிடைக்கும் அழகான, புது மாதிரியான ஆடைகளை விட்டு, அதிக விலைகொடுத்து எவனாவது நமது கர்னாடக ஆடையை வாங்குவானா? ஏன்? நம் குலத்தவரே நமது ஆடையை அணிகின்றனரா? ஆ! இதைவிடக் கேவலமான நிலைமையுண்டா? நாம் தாழ்ந்து கொண்டே போகிறோமென்பதில் ஆச்சரியமென்னே?

நமது நாடு நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்றது. பண்டைக் காலத்திலே ஆயிரக் கணக்கான மைல்களுக் கப்பாலுள்ள நாட் போட்டியிட்டனர். இங்கிலாந்து மன்னர் ஏழாம் எட்வர்டின் பட்டாபிஷேக ஆசனத்தை அலங்கரித்தது நம் நாட்டு டாக்கா மஸ்லினே. சில வருஷங்கட்கு முன்னேயுங்கூட ஒரு மோதிரத்தில் நூற்றுக்கணக்கான கஜமுள்ள ஆடையை அடக்கம்செய்யக் கூடிய அவ்வளவு மெல்லிய ஆடைகள் நமது நாட்டில் தயாரிக்கப்பட்டன. அத்தகைய காலமெல்லாம் அஸ்தமித்து விட்டது. நமது அத்தியாவசியமான பொருள்கட்காகவும் நாம் மேனாடுகளை நோக்கி வாய் திறந்து காத்திருக்குங் காலம் சம்பவித்தது. நாளைக்கு மேனாட்டிலிருந்து ஆடைகள் வரவில்லையென்று வைத்துக்கொள்வோம். நம்மில் எத்தனை பேர் அம்மணமாவார்கள் தெரியுமா?

இந்தப் பரிதாபகரமான நிலைமையை நீக்கத்தான் அடிகளார் புறப்பட்டுள்ளார். நெசவுத் தொழிலில் நாம் அடைந்திருந்த திறனை மீண்டும் புதுப்பிக்கத்தான், நம்மை நாமே ஆடையால் மூடிக்கொள்ளத்தான் அவர் கதர் இயக்கத்தை ஆரம்பித்தார். நமது கடமையென்ன? அவ்வியக்கத்தில் மற்றோரினும் அதிகமாகத் தலையிட்டு அதைப் பலப்படுத்துதற்காக உழைப்பதே. அத்தகைய உழைப்பே நமது வறுமையை வாட்டியோட்டிடும்; நமது அடிமை வாழ்வை அகற்றிடும். அவ்வாறுழைப்பதை விட்டு நாமின்னும் அன்னிய நூல்களையே நெய்துகொண்டிருப்போமாயின் நமக்கென்றும் விமோசன மேற்படாது. காலப் போக்கிற் கலந்து நடவாதவான் மிதியுண்டு மாய்வான் என்னும் நமது தலைவரது உபதேசம் உங்கள் காதுகளில் ஒலிக்கவில்லையா? சகோதரர்களே! கதரியக்கம் நமது விரோதியல்ல; நமது நண்பனே, நமது ஆதரவாளியே. காங்கிரஸின் முறையீட்டைக் கவனியுங்கள். “மில் துணிகளை யொழியுங்கள். அதுவே கைத்தறியாளனது உணவைப் பிடுங்குகிறது. அனைவரும் கைத்தறியை ஆதரியுங்கள்.” என்றுதான் அதன் பிரதிநிதிகள் ஓலமிட்டு வருகிறார்கள். அந்நிய நூலைப் பகிஷ்காரம் செய்து இந்திய நூலை நாம் உபயோகிப்போமாயின் நாம் செல்வத்திற் செழித்திடுவோமென்பது திண்ணம். கதர் நெய்வதால் முன்பு கஞ்சியில்லாது கதறிய செங்குந்தர்களும் சொந்த வீடுகளுடன் சுகமாக வாழ்கின்றனரென்னும் செய்தி நமக்குப் பல மூலைகளிலிருந்து எட்டுகிறது. கோயம்புத்தூர் ஜில்லா இதற்கு உதாரணமாக நிற்

இன்னென்று. கதர் நூலை (கையால் சர்க்காவில் நூற்கப்படும் நூலை) நெய்து பலனடையக் கூடியவர் அதை நெய்யுங்கள். மற்றையோர் இந்திய மில் நூலை உபயோகிக்கலாமெனக் காங்கிரஸ் அனுமதிக்கிறது. ஆனல் அப்படி நெய்வதில் 40-ஆம் நம்பருக்குக் கீழ்ப்பட்ட நூலையும் 20-ஆம் நம்பருக்கு மேற்பட்டதையுமே உபயோகிக்க வேண்டும். இதைப்பற்றி திரு. இராஜகோபாலாச்சாரியர் கூறும் உபதேசத்தை வேருெரு பக்கத்தில் பிரசுரித்துள்ளோம்.

செங்குந்தர்களே! நமது வறுமை யொழியுங் காலம் வந்து விட்டது. "உலகத்துக்கு ஆடை கொடுத்து மானங் காத்திடும் மேன்மையான தொழிலாளர்" என்று நாம் பாராட்டிக் கொள்வதை உண்மையிலேயே நிரூபித்துக் காட்டும் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. அதைப் பிரயோசனப் படுத்துவோமா? வீணுகக் குதர்க்கம் பேசிக் காலங்கழித்துக் கஷ்டப்படுவோமா?

இதுதான் நமது அடிகளார் மேற்கொண்டுள்ள தொண்டின் முக்கிய அம்சம். இரண்டாவதாக அவர் பாடுபடுவது குடியையொழிப்பதற்காக. அத்துறையில் நமது சங்கம் பெரும்பாடு பட்டு வருகிறது. சர்க்காரரும் குடியை யொழிப்பதற்காக ஒரு தொகையை ஒதுக்கியுள்ளன ரென்பதே அதனு லுண்டாகும் அபரிமிதமான தீமையை விளக்கும். இவற்றுடன் அடிகளார் பல அருங்குணங்களையும் போதிக்கிருர். அவர் போதித்து வரும் ஒற்றுமை நமக்கு எவ்வளவு அவசியமென்பது நம்மவரிடையுள்ள கக்ஷிபேதங்களை உணர்ந்தோர்க்கு விளங்காதிராது. இவ்வாறு அரிய உபதேசம் செய்து அருந்தொண்டாற்றி வரும் மகாத்மாவால் நாம் பெரும்பய னடையக் கிடக்கிறேம் என்பதை நாம் உணரவேண்டும். அவரே நமக்குத் தக்க சந்தர்ப்பத்தை உண்டாக்கியுள்ளார். காங்கிரஸின் நோக்கத்தை யுணர்ந்து அதனுடன் நாம் ஒத்துழைப்போமேயாயின் காங்கிரஸ், மகாத்மா, ஏன்-இந்தியாவே நமது கைத்தரித் தொழிலுக்குப் பேராதரவளிக்கும். நாமும் நமது நிலையை உயர்த்திக் கொள்வதுடன் நமது தாய் நாட்டின் விடுதலைக்கும் உயர்வுக்கும் பாடுபட்டவர்களாவோம்.

---

## அசனமாபேட்டை செங்குந்த அபிவிருத்தி சங்க முதலாவது ஆண்டு நிறைவு விழா

நிகழும் பிரஜோத்பத்தி யாண்டு ஐப்பசித் திங்கள் 15, 16 தேதிகளில் (31st Oct. & 1st Nov.) ஷை ஆண்டு விழா உயர் திருவாளர் ம. சண்முக சுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். அது சமயம் உயர் திருவாளர் வீ. ரத்தின முதலியார் B. A., B. L. அவர்களும், உயர் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும், நமது இரண்டாவது மகாநாட்டுத் தலைவர் உயர் திருவாளர். கா. சபாபதி வள்ளலார் அவர்களும், நமது தலைச்சங்கப் பிரசாரகர் உயர் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்களும் உபந்யசிக்க இசைந்துள்ளார்கள். செய்யாறு தாலூகா போர்டு பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ தொ. மு. ஆதிகேசவலு நாயுடு அவர்கள் திறப்பு விழா ஆற்றவும், திருவத்திபுரம் யூனியன் போர்டு பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ மா. லோகநாத முதலியார் அவர்கள் கொடியேற்றுவிழா ஆற்றவும் இசைந்துள்ளார்கள். இன்னும் பல பெரியோர்களும் உபந்யசிக்க எதிர்பார்க்கப்படுகிறபடியால் நிகழ்ச்சி முறை பின்னும் வெளிவரும். செங்குந்த குலாபிமானிகள் அனைவரும் ஷை விழாவிற்கு விஜயஞ் செய்து சிறப்புற நடத்திவைக்குமாறு வேண்டுகிறேம்.

இங்ஙனம்,
மே. ச. நடேச முதலியார்,
கோ. குள்ளப்ப முதலியார்,
காரியதரிசிகள்.



# அரசியல் பகுதி

## இந்தியாவின் தற்கால ஆட்சிமுறை

[திரு. ச. சு.]

நம்மவரிற் பலர் நாம் யாரால் எப்படி ஆளப்படுகிறேம் என்பதனையே தெளிவாக உணராதிருக்கிருர்கள். ஆட்சி முறையைப் பற்றிய விவகாரங்கள் மும்முரமாகத் தற்போது நடைபெறுகின்றன வாகலானும், அம்முறையிற் பல மாறுதல்கள் ஏற்படக் கூடுமாகலானும் அனைவரும் தற்போதைய அரசாங்க நிலையை நன்குணரவேண்டி நமது தேசத்தின் ஆட்சி முறையைப்பற்றி எளிய நடையி லெழுத முன் வந்தேன்.

**சுதேச துரைத்தனங்கள்:** நமது தேசம் இப்போது ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது. அது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒரு கூருகும். ஆங்கிலேய அரசர் இந்தியாவுக்குச் சக்ரவர்த்தி ஆகையால் இந்தியா அவராலேயே ஆளப்படுகிறது. ஆனல், இப்பெரிய தேசமுழுவதையும் ஒருவரே ஆள்வது சாத்தியமா? அதனல் இந்தியா பல பாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. ஆகவே, பல சிறு இராஜ்ஜியங்கள் இந்தியாவில் இருக்கின்றன. சில இராஜ்ஜியங்கள் ஆங்கில இராஜ்ஜியங்கள். சில சுதேச மன்னரது இராஜ்ஜியங்கள். மைசூர், திருவாங்கூர், புதுக்கோட்டை, ஹைதராபாத் முதலியவை சுதேச மன்னரால் ஆளப்படுபவை. ஆனல் சுதேச இராஜ்ஜியங்களும் ஆங்லேயே அரசாட்சிக்கு உட்பட்டவையே. சுதேச மன்னர்களும் ஆங்கிலேய அரசருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**பிரிட்டிஷ் துரைத்தனம்:** இந்தியாவில் சுதேச மன்னர்களாலன்றி, ஆங்கிலேயராலேயே ஆளப்படும் பாகத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்திருக்கிருர்கள். ஒவ்வொரு மாகாணமும் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சில தாலுக்காக்கள் சேர்ந்து ஒரு ஜில்லா ஆகிறது. ஒரு தாலுக்காவில் பல கிராமங்கள் அடங்கியுள்ளன. இப்பிரிவுகளுள் ஒவ்வொன்றின் விவகாரங்களும் தனித் தனியாகக் கவனிக்கப்படுகின்றன. அவைகளைக் கவனிப்பவை அப்பிரிவுகளிலுள்ள ஆட்சிச் சபைகளே. இவ்வாறு தனித் தனி கவனம் செலுத்தப்படுவதால் தேசமுழுவதும் காரியங்கள் சரியாக நடக்கின்றன. தேசமும் க்ஷேமமாக இருக்கிறது.

**உள்ளூர்ச் சுய ஆட்சி:** நாம் கிராமங்களில் சாதாரணமாகக் காண்பது பஞ்சாயத்து என்னும் சபை. இதன் அங்கத்தினர் ஒரு கிராமத்திலுள்ள பிரபலமான முக்கியஸ்தர்கள். இந்தச் சபை பண்டைக்கால முதலே நமது தேசத்தி லிருந்திருக்கிறது. கிராமத்தின் பொது நன்மையைக் கவனிப்பதே இதன் வேலை. கிராமத்தார்களுள் ஏற்படும் சண்டை சச்சரவுகள் இதில் தீர்க்கப்படும். கிராமத்துக்குக் கெடுதி விளைப்பவர் இதன்மூலம் தண்டனை யடைவர்.

ஒரு கிராமத்தின் காரியங்கள் பஞ்சாயத்துச் சபையால் கவனிக்கப்படும். பல கிராமங்களின் விவகாரங்களைக் கவனிக்க வேருெரு சபையுண்டு. சில கிராமங்கள் சேர்ந்தது ஒரு தாலுக்கா அல்லவா? ஒரு தாலுக்காவிலுள்ள கிராமங்க ளனைத்துக்கும் பொதுவான காரியங்களை நடத்துவது தாலுக்கா போர்டு என்னும் தாலுக்கா சபை, பல தாலுக்காக்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா. அத்தாலுக்காக்களுக் கெல்லாம் பொதுவான விஷயங்களைக் கவனிக்கும் சபைக்கு ஜில்லா போர்டு என்று பெயர். இச்சபைகளெல்லாம் உள்ளூர் விவகாரங்களைக் கவனிப்பவை ஆகையால் இவைகளை உள்ளூர் ஆட்சிச் சபைகள் (Local boards) என்பர்.

கிராமங்களல்லாத பெரிய ஊர்கள் அல்லது நகரங்களின் விவகாரங்களைக் கவனிக்க வேறு சபைகளுண்டு. இத்தகைய சபை ஒவ்வொரு நகரத்துக்கும் உண்டு. நகரத்தின் நன்மையைக் கோருவதாலும், நகரத்தைப் பரிபாலிப்பதாலும் அது நகர பரிபாலன சபை (Municipal council) எனப் பெயர் பெறும். ஒரு

நகரத்தின் சுகாதாரத்தைக் கவனித்தலும், கடைகளை மேற்பார்வை யிடுதலும், வைத்திய சாலைகளை ஏற்படுத்தலும், தொத்து நோய்களைத் தடுத்தலும் அந்நகரத்திலுள்ள நகர பரிபாலன சபையின் வேலைகள். பின்னும் அந்நகரத்தின் குடிநீர் வசதியைக் கவனித்தல், சாலைகளைச் சீர்திருத்தல், தெருக்களுக்கு விளக்குப் போடல், அதில் போக்கு வரவு சாதனங்கள் ஏற்படுத்தல் ஆகியவையும் அதன் வேலைகளே. அச்சபையார் நகரத்தில் பாடசாலைகளை ஏற்படுத்தி அவற்றை நடத்தி வரவும் வேண்டும். இவற்றிற்கெல்லா மாகும் செலவுகளுக்கு வேண்டிய பணத்துக்காக நகரவாசிகளிடமிருந்து வீட்டு வரி, நீர் வரி முதலிய வசூலிக்க அச்சபையாருக்கு அதிகாரமுண்டு. தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு இவைகளின் வேலைகளும் இவை போன்றவையே.

ஊர்க்குடிகளின் நன்மையைக் கருதி யுழைப்பதற்காக இச்சபைகளுள்ளன. ஆகையால் அவ்வவ்வூர்க் குடிகளே இவற்றின் அங்கத்தினர்களாக உள்ளார்கள். அங்கத்தினர்களுள் ஒரு பகுதியாரை ஊர்க்குடிகளே தேர்ந்தெடுப்பார்கள். அங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுபவர் திறமையுள்ளவராகவே இருப்பார்கள். இவ்வாறு, அவ்வவ்வூர் அல்லது நகரத்தின் விவகாரங்களை அததன் குடிகள் தாமே கவனித்து அதனை அவரவரே ஆளுதலால் இந்த ஆட்சிக்கு உள்ளூர்ச் சுய ஆட்சி (Local self Government) எனப் பெயர்.

மகாண துரைத்தனம்: இவ்வாறு பல நகரங்களும் ஜில்லாக்களும் அடங்கியது ஒரு மாகாணம். இதை ஆள்பவர் மாகாணத் தலைவர். இவருக்கு கவர்னர் என்பது பெயர். இவர் தமது காரிய நிருவாக சபையினுலும் (Executive Council) சட்டசபையினுலும் (Legislative Council) தமது மாகாணத்தை ஆள்கிறார். கவர்னரது நிருவாக சபையின் அங்கத்தினர் இரு விதமானவர்கள். ஒரு வகை அங்கத்தினர் அரசாங்க சேவையில் நெடுநாளாக இருந்து பண்புட்டவர்கள். மற்றொரு வகை அங்கத்தினர் அப்போதைக்கப்போது சட்டசபை அங்கத்தினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் அமைச்சர்கள் (மந்திரிகள்). நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சன வசதி உண்டாக்கல், நிலவரி தண்டுதல், நியாய விசாரணை செய்தல், திருடு கலகம் முதலியவைகளை யொழித்தல் (போலீஸ் வேலை)-இவ் விவகாரங்களை முதல் வகையினர் கவனிப்பார்கள். கல்வி, சுகாதாரம், கைத்தொழில் விருத்தி, உள்ளூர்ச் சுய ஆட்சியை மேற் பார்வையிடல் முதலியவைகளை அமைச்சர்கள் (மந்திரிகள்) கவனிப்பார்கள். சட்ட சபை அங்கத்தினரில் முக்கால் பகுதியினரை நகரங்களிலும், பல ஜில்லாக்கள், கிராமங்களிலும் தக்க நிலைமையுள்ள குடிகள் தேர்ந்தெடுப்பார்கள். இச்சபையார் ராஜாங்க நிர்வாகத்துக்கேற்ற சட்டங்களை ஏற்படுத்துவார்கள். மாகாண வரவு செலவு திட்டத்தையும் கவனிப்பார்கள். ஆனால் இவர்கள் தீர்மானங்களும் சட்டங்களும் அமுலுக்கு வருவதற்கு கவர்னர், இராஜப் பிரதிநிதி இவ்விருவரது அனுமதியும் வேண்டும். கவர்னரும் நிர்வாக சபையாரும் சட்டசபையின் நோக்கத்தையும் அபிப்பிராயத்தையும் அறிந்து சமயத்துக்கேற்ப நடப்பார்கள். ஆனால் மந்திரிகள் சட்டசபைக்கு அடங்கி நடக்க வேண்டும். மந்திரிகளைத் தள்ளிவிடும் அதிகாரமும் கவர்னருக்கு உண்டு. இவ்வாறு அரசியல் நிருவாகத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துச் செலுத்தப்படும் ஆட்சிக்கு இரட்டை ஆட்சி (Diarchy) என்று பெயர்.

சாம்ராச்சிய துரைத்தனம்: இத்தகைய மாகாணங்கள் பல அடங்கியது சாம்ராச்சியம் (Empire). இதன் துரைத்தனம் சாம்ராச்சிய துரைத்தனம் (Imperial Government) எனப்படும். இந்திய சாம்ராஜ்யத்தைக் குறித்த பொதுக் காரியங்கள் யாவும் இந்த சாம்ராஜ்ய துரைத்தனத்தாரால் கவனிக்கப்படும். அவையாவன: வெளி நாடுகளோடிருக்க வேண்டிய சம்பந்தங்களைக் கவனித்தல்; மாகாணங்களின் ஆட்சியை மேற்பார்வையிடல்; இந்தியாவுக்குப் பொதுவான வரிகளை நிர்ணயித்தல்; இந்தியாவுக்குப் பொதுவான விவசாயம், வியாபாரம், கைத்தொழில்கள், தபால், தந்தி, இருப்புப்பாதை, நிலப்படை, கப்பல் படை முதலியவற்றைக் கவனித்தல்; பொதுவான சட்டங்களை அமைத்தல், மாற்றல் முதலியவையாம். சாம்ராஜ்ய துரைத்தனத்தில் தலைமையாக இருப்பவர் வைஸ்ராய் (Viceroy) என்னும் இராஜப் பிரதிநிதி. இவருக்குச் சுதேச மன்னர்கள்மீது முழு அதிகார முண்டு. அரசரைப்போல இவர் சட்டசபைத் தீர்மானங்களைத் தள்ளக்கூடும். இவருக்கு அரசாங்க நிருவாகத்தில் உதவி புரிய ஒரு நிர்வாக சபையுண்டு. அதில் அரசாங்கத்தின் பல இலாகாக்களின் அதிகாரிகள் அங்கத்தினராக இருப்பர். அவர்களுள் மூவர் இந்தியர். இராஜப் பிரதிநிதி இச்சபையின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டுமென்னும் அவசியமில்லை.



வைஸ்ராயுக்கு ஆலோசனை கூறவும் நாட்டிற்குரிய சட்டங்களை யியற்றவும் லெஜிஸ்லெடிவ் அசெம்ப்ளி (Legislative Assembly), கவுன்சில் ஆப் ஸ்டேட் (Council of State) என்னும் இரண்டு சட்ட சபைகள் உண்டு. இவைகளால் சாம்ராஜ்யத்துக்கு வேண்டிய சட்டங்களும் வரவு செலவு திட்டமும் நிர்ணயிக்கப்பெறும். ஆனால் அச் சட்டங்களை ஒத்துக்கொண்டு அனுமதிக்கவோ, நிறுத்தி வைக்கவோ, அடியோடு தடுக்கவோ இராஜப் பிரதிநிதிக்கு அதிகாரமுண்டு. இவ்விரு சபையாரும் அரசாங்க விவகாரங்களைத் தனித் தனியாகவும், அவசியமாயின், சேர்ந்தும் கவனிப்பார்கள்.

இச்சபைகளேயன்றிச் சுதேச மன்னர் சபையும் (The Chamber of Princes) ஒன்றுண்டு. இதில் சுதேச மன்னர்களைப் பொதுவாகக் குறிக்கும் விவகாரங்கள் ஆலோசிக்கப்படும். இச்சபைகள் எல்லாம் கூடும் இடம் டில்லி. இது இந்தியாவின் தலைநகரம்.

உள்ளூராட்சி மாகாண துரைத்தனத்துக் குட்பட்டது. மாகாண துரைத்தனம் சாம்ராஜ்யத்துக் குட்பட்டது. கவர்னர் இராஜப் பிரதிநிதிக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இராஜப்பிரதிநிதியும், அவரது நிர்வாக சபையும், அவருக்கு ஆலோசனை கூறும் சட்ட நிர்மாண சபைகளும் சேர்ந்து நடத்துவது இந்திய சாம்ராஜ்ய துரைத்தனம். இது இந்தியாவுக்குள் ஏற்பட்டிருக்கும் துரைத்தன அமைப்பு.

பிரிட்டிஷ்மேற்பார்வை: இந்தியா பிரிட்டிஷ் ராஜ்யத்தின் ஒரு கூறென்று முன்னமே சொன்னோமல்லவா? ஆகவே, இங்கிலாந்திலிருந்து இந்திய துரைத்தனக் காரியதரிசி (Secretary of State for India) அவர்களால் இந்திய சாம்ராஜ்ய ஆட்சி மேற்பார்வை யிடப்படுகின்றது. அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தை நடத்தும் மந்திரிகளுள் ஒருவர். அவருக்கு இந்திய சபை என ஒரு ஆலோசனைச் சபை யுண்டு. இராஜப் பிரதிநிதி அவருக்கு அடங்கியவர். அவரும் இங்கிலாந்திலுள்ள இந்திய சபையாரும் சேர்ந்து இந்தியாவின் விவகாரங்களை நடத்துவார்கள். இச்சபையில் மூன்று இந்தியர்கள் இருக்கிறார்கள். இந்திய துரைத்தன மந்திரி இங்கிலாந்திலுள்ள பார்லமெண்ட் (The Parliament) என்னும் மகா சட்டசபைக்கு உத்திரவாதியாய் இருக்க வேண்டும். ஆகையால் அம் மகா சட்டசபையின் ஆலோசனையையும், அபிப்பிராயத்தையும், சட்ட திட்டங்களையும் ஒட்டி இந்திய சாம்ராஜ்ய துரைத்தனம் நடைபெறுகிறது. ஆகவே, இந்தியா அச்சபையாராலேயே ஆளப்படுகிறது என்று சொல்ல வேண்டும். அந்தச் சபையே இந்திய ஆட்சியில் மட்டுமன்றி பிரிட்டிஷ் அரசாங்கத்திலடங்கிய இதைப் போன்ற தேசங்கள் எல்லாவற்றின் ஆட்சிகளிலும் மகோன்னத நிலைமையைப் பெற்றுள்ளது. அச்சபையின் அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இங்கிலாந்தின் குடிகளில் 21- வயதுக்கு மேற்பட்டவர் அனைவர்க்கும் (ஆண் பெண் இருபாலார்க்கும்) உண்டு.

இந்த அமைப்பில் சில சீர்திருத்தங்களைச் செய்து இந்தியரது உரிமைகளையும் அந்தஸ்தினையும் அதிகப்படுத்துவதற்காகத் தேசாபிமானிகள் தீவிரமாய் உழைக்கின்றார்கள். அதன் பொருட்டே தற்போது லண்டனில் வட்டமேஜை மகாநாடு கூடித் தீவிர முயற்சிகள் செய்துகொண்டு வருகிறது.

---

உனது தாய்நாட்டைச் சீர்திருத்த வேண்டுமென்பது உன்னுடைய உண்மையான, மனப்பூர்வமான நோக்கமா? அப்படியாயின் உன்னை நீ சீர்திருத்திக்கொள். நாடு தானே சீரடையும்.

மன்னர்க்கழகு செங்கோல் முறைமை

# ஒழுக்கப் பகுதி

## பிரார்த்தனையின் பயனும் அவசியமும்

(காந்தியடிகளார்)

ராஜபுதானா கப்பலில் மகாத்மாவை ஒரு மகமதிய இளைஞர் 'பிரார்த்தனை செய்வதில் தங்கள் சொந்த அனுபவமென்ன? அடைந்த பலனென்ன?' என்று கேட்டார். அதற்கு மகாத்மா பின்வருமாறு பதிலளித்துள்ளார் :—

பிரார்த்தனை தான் என்னைக் காப்பாற்றி வருகின்றது. அது இல்லாமலிருந்தால் பல வருடங்களுக்கு முன்னமேயே எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும். 'எனது சத்திய சோதனை'யைப் படித்தால் அது உங்களுக்குத் தெரியவரும். சொந்த முறையிலும், பொதுஜன ஊழியன் என்ற முறையிலும் நான் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டதை நீங்கள் அறியலாம். அவ்வப்போது திடீர் திடீரென்று ஏக்கம் பிடிக்கும். அப்போதெல்லாம் பிரார்த்தனை செய்வேன். ஏக்கம் மாறிவிடும். ஆனால் சத்தியத்தை நான் எவ்வளவு எனது வாழ்க்கையில் கொண்டிருக்கிறேனோ அவ்வளவு தூரம் பிரார்த்தனையை நான் கொள்ளவில்லை. பிரார்த்தனை செய்வது ஓர் அவசியமாக எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

பிரார்த்தனை செய்யச் செய்யக் கடவுள் பக்தி அதிகமாயிற்று. ஆதலால் பிரார்த்தனை மீது அன்பும் அதிகமாயிற்று. அது இல்லாதபோது உயிர் வாழ்வதே ஒரு பாலைவனம் போல் தோன்றிற்று. தென்னாப்பிரிக்காவில் கிறிஸ்துவக் கோயில்களின் பிரார்த்தனைகளுக்கு நான் சென்றிருக்கிறேன். ஆனால் எனக்கு அப்போது அதில் பிடித்தமேற்படவில்லை. பிரார்த்தனையில் நான் கலந்துகொள்ளவில்லை. கடவுளை அவர்கள் வளைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது என்னால் முடியாத காரியமாயிருந்தது.

கடவுள், அவரைக் குறித்த பிரார்த்தனை, முதலியவைகளில் நான் அவநம்பிக்கை கொண்டிருந்தவன். ஆதலால்தான் நான் தோற்றுப் போனேன். ஏதோ வாழ்வில் ருசி யில்லாமலே இருந்தது.

பிறகு தான் அறிந்துகொண்டேன். உடலுக்கு எவ்வாறு உணவு அவசியமோ, அவ்வாறே ஆத்மாவுக்குப் பிரார்த்தனை அவசியமென அறிந்தேன். ஆனால் உடலுக்கு உணவை விட, ஆத்மாவுக்குப் பிரார்த்தனை கட்டாயம் வேண்டும் என்பது இப்போது தெரிகிறது. தேகத்தை ஆரோக்யமாக வைத்திருப்பதற்குப் பட்டினி போட வேண்டியது அவசியம். அதே மாதிரி ஆத்மாவை ஒருக்காலும் பட்டினி போடக்கூடாது என்பது விளங்குகின்றது. புத்தர், ஏசுநாதர், முகம்மது நபி முதலிய பெரியோர் பிரார்த்தனையினால் தான் முன்னேறியதாகக் கூறியிருக்கிறார்கள். பிரார்த்தனையின்றி உயிர் வாழ முடியாதெனவும் கூறியிருக்கிறார்கள்.

இப்போது கோடிக் கணக்கான ஹிந்துக்களும், முஸல்மான்களும், கிறிஸ்துவர்களும் பிரார்த்தனை செய்தே கவலையை நீக்கிக்கொள்கிறார்கள். அவர்களைப் பொய்யர்களென்றும், ஏமாறியவர்களென்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்தப் 'பொய்' தான் எனது உயிருக்கு இன்றியமையாததாக இருக்கிறது.

ராஜீய வானத்தில் ஏக்கமென்னும் மேகம் சூழும் போதெல்லாம் எனது மனச் சமாதானத்தை நான் இழப்பதில்லை. எனது சமாதானத்தைக் கண்டு அநேகர் வியந்ததுண்டு. அந்தச் சமாதானம் எங்கிருந்து வருகிறது? பிரார்த்தனையிலிருந்து தான். நான் படித்தவனல்ல; நான் வெறும் பிரார்த்தனைக்காரனென்று தாழ்மையாகச் சொல்லிக் கொள்கின்றேன். அவரவர் மனோதர்மப்படி பிரார்த்தனை நடத்தலாம் என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நமது பழைய பாதையில் நடந்து செல்வது சுலபமெனத் தோன்றுகிறது.

அதில் செல்வதற்கு முதலில் நாம் கற்றுக்கொண்டுள்ள தற்காலிகப் படிப்பை மறந்துவிட வேண்டும். அதுதான் நம்மை மூடிவிடுகின்றது. நாம் இந்த அகண்டமான ஜகத்தில் பரமாணுக்களிலும் கேவலமாக வசித்து வருகின்றோம். அணுவாவது அதற்கிடப்பட்டுள்ள சட்டப்படி நடக்கும். நாம் இயற்கையை எதிர்ப்பவர்களாதலால் இன்னும் கேவலமானவர்களாக வாழ்கின்றோம். ஆனால் நம்பிக்கை இழந்தவர்களுக்கு நான் ஒன்றும் சொல்ல முயல வில்லை.

கடவுளை நம்புவோர் பிரார்த்தனை செய்ய வேண்டும். பிரார்த்தனை அத்யாவசியம். நமது வாழ்க்கை முழுவதுமே பிரார்த்தனை. அவ்வப்போது பகவத் பக்தியை அதிகமாக்கிக்கொள்வதற்காகவே குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட விதத்தில் பெரியோர்கள் பிரார்த்தனை செய்து வந்தனர். பிரார்த்தனையினால் நமது வாழ்வில் ஏற்படும் கஷ்டம் என்னும் மாயையினின்று, மனக் கற்பனையினின்று நாம் விடுபடுவோமென நான் உறுதி கூறுகின்றேன். ("சு. சங்கு")






## குணபூஷணி

### கணவனுக் கேற்ற கற்பரசி

[திருவாளர் சிறு. முனி. நடேச முதலியார் அவர்கள்]

குணசேகரன் என்னும் குணவானும் அவன் மனைவி குணபூஷணி என்பவளும் ஒரு மலைச்சாரலில் குடியிருந்து வந்தார்கள். குணசேகரன் என்பவன் பயிர்த்தொழில்செய்பவன். தனக்கென உரிமையிலிருந்த கொஞ்ச நிலத்தை வைத்துக்கொண்டு பிறரிடம் ஊழியம் புரியாது தக்க காலத்தில் எருவிட்டு உழுது களை களைந்து பயிரிட்டு நல்வாழ்க்கையோடு காலங் கடத்தி வந்தான். அவனுடைய நற்குண நற்செய்கை முதலியவற்றைக் கண்டவர்கள் யாவரும் அவனை உயர்வாக மதித்து வந்தனர். அவனுடைய மனையாட்டி தன்னுடைய பெயருக்கேற்ற ஒழுக்கமுடையவள். கணவனுடைய பேச்சுக்குக் குறுக்குப் பேசி அறியாள். கணவன் குறிப்பறிந்து நடப்பாள். அவன் இட்ட வேலையை முக மலர்ச்சியுடன் செய்வாள். அவன் துக்கப்பட்டால் தானுந் துக்கப்படுவாள். அவன் மகிழ்ச்சியடைந்தால் தானும் களிப்படைவாள். எந்த நேரமும் உள்ளத்தில் அவனை வழிபடுவதே அவளது கடமையாகக் கொண்டாள். அவன் இணையடிகளே கடவுளது திருவடிகளெனப் பூசிப்பாள். அவனையே கடவுளாக வணங்குவாள். இப்படிப்பட்ட அரிய குணங்களமைந்த மனைவியும் அவள் கணவனும் துன்பமென்பதே இன்னதென்றறியாதபடி இன்ப வாழ்க்கை பொருந்திச் சிறப்புற்றிருந்தனர். வயது சென்றவர்களே யாயினும் ஒருவர்க்கொருவர் அன்பில் குறைந்தவர்களல்லர்.

இவர்கள் இருவரும் ஒரு நாள் மாலை வீட்டு வேலைகளெல்லாம் முடிந்த பிறகு ஒருவரோடு ஒருவர் இனிமையாகப் பேசிக்கொண்டிருக்கையில் கணவனை நோக்கி, 'என் அன்பரே, தங்களிடத்தில் அறிவித்துக்கொள்ள வேண்டுமென்று எனக்கொரு எண்ணமுண்டு; அதைத் தாங்கள் அறிய விரும்பினால் கட்டளையை எதிர்பார்க்கிறேன்.' என்றாள் அவன் மனைவி. குணசேகரன், "என் உயிரே, என் உள்ளம் விரும்பத் தகாதவற்றை நீ அறிவிக்கத் துணிந்தது இதுவரையில் இல்லையே! நீ விரும்பிய ஒன்றை நான் மறுத்ததும் உண்டோ? உன் உள்ளத்தை அறிந்து மகிழக் கூறு" என்றான். அவன் மனைவி இதைக் கேட்டு உளம் பூரித்து 'ஐயனே, நம்மிடத்தில் இரண்டு பசுக்கள் இருக்கின்றன. நமக்கென்ன குழந்தையா, குட்டியா? ஒரு பசுவே போதுமானது. ஒன்றின் பாலே நமக்கு வேண்டிய பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவற்றிற்குப் போதியதாகின்றது. நமக்கோ தள்ளாத காலமாய்விட்டது. என்னுடைய கிழத்தனத்தில் வீட்டு வேலையைச் செய்து முடிப்பதே கஷ்டமா யிருக்கிறது. அதோடு இரண்டு பசுக்களுக்கும் பாடுபட என்னால் முடியவில்லை. தங்களுக்கோ, நிலங்களை எருவிட்டுப் பண்படுத்தவும் உழுது பாடுபடவுமே தள்ளாமையா யிருக்கும்போது பசுக்களைத் தாங்கள் போஷிப்பது கூடாமை. ஆகையால் ஒன்றை விற்றுவிடலா மென்பது என் விருப்பம். நாம் ஏன் வீணாகத் தொந்தரவு படவேண்டும்?" என்றாள்.

குணசேகரனுக்குத் தன் மனைவி கூறியது தக்கதே என்று பட்டது. அடுத்த நாளே காலையி லெழுந்திருந்ததும் ஒரு பசுவை அவிழ்த்துக் கையிற் பிடித்துக் கொண்டு மனைவியிடத்தில் விடைபெற்று அடுத்த பட்டினமொன்றுக்குப் புறப்பட்டுவிட்டான். அவன்

பட்டினம் சென்ற அன்று அங்குச் சந்தை கூடுகிற நாளல்ல. ஆதலால் அவன் வெகு நேரம் காத்திருந்தும் பசு விலை போகவில்லை. கிழவனும் சந்தை "கூடுகிற மற்றொரு நாளைக்குப் பார்த்துக்கொள்வோம். அதற்குள் இதற்கென்ன நம் வீட்டில் புல்லும் வைக்கோலுமா இல்லாமற்போயின; வந்த வழியே திரும்பிவிடுவோம்" என்று தீர்மானித்து வீட்டுக்குத் திரும்பினான்.

கொஞ்ச தூரம் போவதற்குள் கிழவனுக்கு இளைப்பும் களைப்பும் மேலிட்டன. அப்போது வேறொருவன் பட்டினத்தில் விற்பதற்காகச் சேனங் கடிவாளம் முதலியவற்றோடு கூடிய உரமான குதிரை யொன்றை ஓட்டிக்கொண்டு எதிர் நோக்கி வந்துகொண்டிருந்தான். அதைக் கண்ட கிழவன், "வழியோ வெகு தூரம் இருக்கிறது. பொழுதும் சீக்கிரமாகக் கழிகிறது. இப்பொழுதுள்ள களைப்போடு இப் பசுவையும் நகர்த்திக்கொண்டு வீடு சேர்வதற்குள் பாதி ராத்திரியாய்விடும்போ லிருக்கிறது. இந்தக் குதிரை கிடைக்குமானால் நாம் நடக்கவேண்டிய கஷ்டமின்றிக் குதிரையின்மீ தேறிக் கொண்டு விரைவில் வீடு போய்ச் சேரலாம். குதிரையேறிக்கொண்டு ஒரு போர் வீரனைப் போல் நாம் வருவதைக் கண்டால் நம் மனைவியும் மகிழ்ச்சி யடைவாள்." என்று யோசித்து அந்தக் குதிரைக்காரனை நிறுத்தி "இந்தப் பசு குடம் நிறையப் பால் கறக்கும்; இதை உனக்குக் கொடுக்கிறேன் நீ உன் குதிரையைக் கொடுக்கிறாயா?" என்றான். அந்தக் குதிரைக்காரனும் அதற்கு ஒப்புக்கொண்டான். கிழவன் பசுவை அவனிடத்தில் விட்டு விட்டுக் குதிரைமேல் ஏறிக்கொண்டு போனான். குதிரை நல்ல கட்டமைந்து இளமையாயிருந்ததால் படபடவென்று நடந்தது. கிழவனால் தாள முடியவில்லை. அரை நாழிகை நேரத்தில் கிழவன் பாடு அலுத்து ஆசை தீர்ந்துவிட்டது. அப்புறம் "ஐயையோ! என்ன புத்தி கெட்ட வேலை செய்துவிட்டேன்" என்று எண்ணிக் கீழிறங்கிக் கையில் பிடித்துக்கொண்டு நடந்தான். கொஞ்ச தூரத்தில் எதிரில் ஒருவன் விற்பனைக்கு வான்கோழி ஒன்றைக் கொண்டு வரக் கண்டு அவனிடத்தில் குதிரையைக் கொடுத்துப் பதிலுக்கு வான்கோழியைப் பெற்றுக்கொண்டு நடந்தான்.

கொஞ்ச தூரம் போவதற்குள் அதைச் சுமந்து செல்ல அக்கிழவனால் முடியவில்லை. அதுவும் அவனுக்குக் கஷ்டமாய்த் தோன்றிற்று. அப்போது அருகாமையில் ஒருவன் வெள்ளாடு ஓட்டிவரக் கண்டு மகிழ்ந்து 'இதைக் கட்டிக்கொண்டு அழுவதைக் காட்டிலும் ஆடே மேல்' லென நினைத்து வான்கோழிக்குப் பதிலாக வெள்ளாட்டை மாற்றிக்கொண்டான். அந்த வெள்ளாடு மேட்டிலும் பள்ளத்திலும் கல்லிலும் காட்டிலும் பரபரவென்று அவனை இழுத்துக் கொண்டே ஓடிற்று. கொஞ்சதூரம் வரையில் அதனோடு மகிழ்ச்சியாகவே ஓடினான். கிழவனானபடியால் எவ்வளவு தூரம் அதன் இஷ்டப்படி ஓட முடியும்? களைத்துவிட்டான். அங்கு ஆட்டு மந்தை மடக்கிக்கொண்டிருந்த இடையனிடத்தில் அந்த வெள்ளாட்டைத் தொலைத்து ஒரு செம்மறியாட்டைப் பிடித்துக்கொண்டு நடந்தான். "இது கறக்கிறபால் நமக்குப் போதும். இது குதிக்காது, துள்ளாது, ஓடாது. அடக்கமாக இருக்கும். நமக்குக் கஷ்டமில்லை" என்று எண்ணினான். அவன் அப்படி எண்ணினதில் தப்பு ஒன்றுமில்லை. அந்த ஆடு இழுக்கவுமில்லை முட்டவுமில்லை. ஆனால் முன்னுக்கு மட்டும் போக மாட்டேன்; மந்தைக்கே போவேன் என்று பின்னுக்காகவே வலித்தது. "இதென்ன இழவு! வருவதெல்லாம் இப்படித்தானா! 'பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழி போலிருக்கிறதே. என் அண்டை வீட்டுக்காரன் பெண்டாட்டி நீலியைப்போல் 'அம்மே, மே' என்று சிணுங்கிச் சிணுங்கி அழுகிறதே. இதைத் தொலைத்தால் நம்முடைய துன்பம் ஒழியும்." என்று அதனோடு முட்டி முரண்டிக்கொண்டிருக்கையில் அவ்வழியே போய்க்கொண்டிருந்த ஒருவன் "ஐயா பெரியவரே! ஏன் இப்படி அழுகிறீர்? இந்த வாத்தை எடுத்துக்கொண்டு அந்த ஆட்டைக் கொடும்" என்றான். இதைக் கேட்ட கிழவன் "அப்பா! இந்த மட்டில் என்னைப் பிடித்த சனி கழிவடையாயிற்று" என்று சொல்லிக்கொண்டே அந்த வாத்தை வாங்கி அக்குளில் இறுக்கி வைத்துக்கொண்டு போனான். அதுவும் "போதாத குறைச்சலுக்குப் பொன்னியம்மன் குறை" என்பதாக மூக்கால் குத்துவதும் சிறகைப் படபடவென்று தட்டுவதுமாகத் தொந்தரவு செய்தது. ஒரு நாளும் சிரிக்காதவன் திருநாளிலே சிரிக்கத் திருநாளும் வெறுநா ளாயினாற்போல, கிழவனும் அந்தமட்டில் பசுவை விற்க வந்த கொள்ளை போதும் என்று வருந்தி அந்த வாத்தையும் ஒருவன் கையில் கொடுத்துவிட்டு ஒரு



கோழியை வாங்கிக்கொண்டான். அந்தக் கோழி மிக அழகியதாய் யாதொரு சேஷ்டையுமின்றி அமைதியாயிருந்தமையால் மனக் கலக்க மில்லாமல் வழி நடந்தான். கொஞ்ச தூரம் போவதற்குள் பொழுது சாய்ந்தது. அதிகாலையில் புறப்பட்டவனாயிற்றே, முழுங் கால் பூட்டு விட்டுப் போகிறாற்போ லிருந்தது. காதடைத்துக் கண்ணிருட்டிக்கொண்டு பசியினால் தள்ளாடினான். அதனால் வழியில் ஒருவனிடத்து அக்கோழியை மூன்றணாவுக்கு விற்றுவிட்டு அதை ஒரு சத்திரத்தில் கொடுத்து "நான் பசியினால் உயிரை இழந்தால் ஒரு கோழியால் ஆவதென்ன?" என்று வயிற்றுப் பாட்டைப் பார்த்துக்கொண்டு மிகுதி வழியையும் கடந்தான். வீட்டினருகில் வரும்போது அன்று தான் நடந்துகொண்டதை எண்ணி யெண்ணி எதிரில் வந்த அண்டை வீட்டுக்காரனிடம் யாவும் கூறினான்.

அண்டை வீட்டுக்காரன் இதையெல்லாம் கேட்டு "ஆ! ஆ! நீ செய்ததெல்லாம் நன்றாயிருக்கிறது! உன் மனைவியிடத்தில் இதையெல்லாம் என்னவென்று எடுத்துச் சொல்வாய்? என்ன வருவதானாலும் நானால் இப்படிப்பட்ட வேலை செய்துவிட்டுப் பெண்டாட்டி எதிரில் போகத் துணியமாட்டேன்" என்று கூறினான். அதற்குக் குணசேகரன் "நான் செய்தது தப்பாயிருக்கட்டும், ஒப்பாயிருக்கட்டும். என் வீட்டுக்காரி என்னவோ அதைப்பற்றிப் படுக்கென்று ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டாள் என்றான். அண்டை வீட்டுக்காரன் 'நீ செய்ததெல்லாம் என்ன அருமையான வேலை! ஐயோ! ஒரு பைத்தியக்காரன் கூட இப்படிப்பட்ட வேலை செய்ய மாட்டானே! இதை யெல்லாம் கேட்டு உன் மனைவி சும்மா இருப்பாள் என்று நான் நம்பவேமாட்டேன்" என்றான். அதற்குக் கிழவன் "வேண்டுமானால் பந்தயம் வை; நான் ஐம்பது ரூபா வைக்கிறேன்; நீயும் வைக்கிறாயா?" என்றான். அவனும் அதற்கு ஒப்புக்கொள்ள, இருவரும் கிழவன் வீட்டை யடைந்தனர். கிழவன் அண்டை வீட்டுக்காரனை வெளியில் வாயிற்படியண்டை நிறுத்திவிட்டு உள்ளே போனான்.

கணவன் வரவைக்கண்ட அவன் மனைவி "வாருங்கள். என்ன செய்தி? காயா பழமா?" என்று கேட்டாள். கணவன் காயுமில்லை, பழமுமில்லை. பசுவை எவரும் வாங்குவாரில்லை. அதனால் அதை ஒரு குதிரைக்கு மாற்றிக்கொண்டேன்.

மனைவி:—குதிரைக்கா மாற்றினீர்! பேஷ்! நல்ல வேலை. எனக்கு மிக்க மகிழ்ச்சி. நமக்கென்ன குறைச்சல்? ஒரு குதிரையை வைத்துக்கொள்ள நிலைமை யில்லாமலா போயிற்று? துரை போல் தாங்கள் ஏறிக்கொண்டு சவாரி போகலாம். குதிரை எங்கே? அதைக் கொண்டு போய்க் கொட்டகையில் கட்டலாம்.

கணவன்:—நான் அந்தக் குதிரையைக் கொண்டு வரவில்லை. வழியில் என் உள்ளம் மாறிவிட்டது. அதை ஒரு வான்கோழிக்கு மாற்றிக்கொண்டேன்.

மனைவி:—பார்த்தீரா! நான்கூட அங்கிருந்தால் அம்மாதிரிதான் செய்திருப்பேன். தாங்கள் இப்படிச் செய்ததற்காக ஆயிரம் கும்பிடு. குதிரையினால் ஆவதென்ன? யாரேனும் விருந்தினர் வந்தால் இந்த வான்கோழியைக் கறியாக்கி வைத்து மகிழ்ச்சியோடு உண்ணும்படிச் செய்வேன். குதிரை வைத்திருந்தால் அண்டை யயலார் "அடேயப்பா! காடு வா வா என்கிறது; வீடு போ போ என்கிறது. இருந்த நாளெல்லாம் இருந்து இந்த நாளையில் குதிரைதானா குறைச்சல் இந்தக் கிழப் பிணங்களுக்கு!" என்று வசை கூறுவார்கள். வான்கோழி எங்கே? கூண்டில் அடைப்போம்.

கணவன்:—அந்த வான்கோழியைக் கூடக் கொண்டு வரவில்லை. வழியில் அதை ஒரு வெள்ளாட்டுக்கு மாற்றிக்கொண்டேன்.

மனைவி:—சரி, மிக நல்ல வேலை. தாங்கள் மிக்க அறிவாளி யல்லவா? நாமென்ன பெருமைக்கு வான்கோழி வளர்க்கிறவர்களா? அது கெட்டது. வெள்ளாடாகுமா? பாலுமுண்டு பாற்கட்டியுமுண்டு. குட்டிகளும் பெருகிக் கொண்டே யிருக்கும். எதோ அந்த வெள்ளாடு? பட்டியில் கொண்டு போய் விடுவோம்.

கணவன் :— அந்த வெள்ளாட்டையும் கூடக் கொண்டுவர வில்லை. வழியில் அதைக் கொடுத்துவிட்டு ஒரு செம்மறியாடு வாங்கினேன்.

மனைவி :—நீங்கள் இப்படிச் செய்தது என்னுடைய நன்மைக்காகவே அல்லவா? வெள்ளாட்டின் பின்னே காடு மேடெல்லாம் ஓடித் திரிய நான் என்ன வயது பெண்ணா? சின்னஞ் சிறுக்கியா? செம்மறி யாட்டின் மயிர்

சீலை நெய்வதற்கு உதவும். எங்கே அது? தொழுவத்தில் கட்டுவோம்.

கணவன் :—ஆனால் நான் அந்த ஆட்டைக் கொண்டுவர வில்லை. அதைக் கொடுத்து ஒரு வாத்தைக் கொண்டேன்.

மனைவி :—அதுதான் சரி. எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஆட்டினாலாவ தென்ன? அதன் மயிரை நெய்வதற்குத் தறி கூட இல்லை. இந்தக் காலத்தில் அது என்னால் செய்யக்கூடிய வேலையல்ல. வாத்து நல்ல கொழுத்த வாத்து. எனக்கு எப்பொழுதும் அதன் மேல்தான் விருப்பம். அதைக் கறி செய்து உண்ண எனக்கு ஆசை. எதோ, அதைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

கணவன் :—அந்த வாத்தைக் கொண்டுவர வில்லை. அதை ஒரு சேவலுக்கு மாற்றிக் கொண்டேன்.

மனைவி :—அன்புடையவரே, தாங்கள் இப்படிச் செய்தது சரியே. இந்தச் சேவல் இரவில் ஜாமத்தை அறிவிக்கும். கோழி கூவப் பொழுது விடியும் அல்லவா? நாமும் அதையறிந்து அதிகாலையில் எழுந்து காலைக்கடன் முடித்துக் கடவுளை வழிபட்டு வீட்டு வேலைகளைத் தொடங்கலாம்.

கணவன் :—என் ஆருயிரே, நான் அந்தச் சேவல் தானும் கொண்டுவர வில்லையே. நான் வரும்போது வழியிலே பொழுது போய்விட்டது. பசி பொறுக்க முடியவில்லை. உடனே அதை மூன்றணாவுக்கு விற்று உணவுண்டேன். இல்லையானால் இந்நேரம் பசியால் இறந்திருப்பேன்.

மனைவி :—நல்ல காலமாகக் கடவுள் அந்த வேளையில் அந்த யோசனை கொடுத்தாரே. அதுவே போதுமானது. அதுவே எனக்குப் பதினாயிரம்பொன். எப்பொழுதும் நீங்கள் செய்கிறதெல்லாம் சரியென்றே எனக்குப் படுகிறதுண்டு. நானும் பார்த்து வருகிறேன், தப்புகிறதே யில்லை. நமக்கென்ன, சேவல் அத்தனை முக்கியமானதா? நமக்கு நாமே தலைவர். நம்மை எவர் கேள்வி கேட்கப் போகிறார்கள்? நாம் வேண்டியபோது காலையில் எழுந்திருக்கலாம், ஒன்றும் முழுகிப் போவதில்லை. நீங்கள் வந்து முகத்தைக் காண்பித்ததே போதும். அதுவே எனக்குக் கோடி. தாங்கள் நடந்துவந்த நோய் தீரக் காலுக்கு வெந்நீர் வைத்துக் கொண்டு வருகிறேன் என்று அடுப்பண்டைச் சென்றாள்.

கிழவன் உடனே வெளியே வந்து அண்டை வீட்டுக்காரனை நோக்கி "எங்கே நீ வைத்த பந்தயம்?" என்றான். அண்டை வீட்டுக்காரனும் இவர்கள் பேசியதையெல்லாம் உற்றுக் கேட்டவனாதலால் பந்தயம் தர ஒப்புக்கொண்டு வியப்போடு சென்றான். குணசேகரனும் கற்பரசியான குணபூஷணியும்,

"காத லிருவர் கருத் தொருமித்
தாதரவு பட்டதே இன்பம்"

என்ற மூதுரைக்கு இலக்கியமாய்த் தம்முள் அன்பு மாறாது நெடுநாள் வாழ்ந்து பின் கடவுளருளால் கற்பக நாடுற்று என்றும் இன்பந் துய்ப்பவ ராயினர்.

———

நீ குபேரனா யிருக்கலாம், பிச்சைக்காரனா யிருக்கலாம்; பிரகஸ்பதியா யிருக்கலாம், நிரக்ஷரகுக்ஷியா யிருக்கலாம்; மன்மதனா யிருக்கலாம், குரூபியா யிருக்கலாம். எப்படி யிருந்தாலும் உன் மனைவியைத் திருப்தி செய்வது· நீ அவளிடத்துக் காட்டும் அன்பே; அவளை நடத்தும் விதமே. உனது அன்பு மொழிகளும் தூய செயல்களுமே அவளுக்கு எல்லா இன்பமுமாகும்.



# அறிவியல் பகுதி

## மின்சாரம்

[திரு. மா. ப. தியாகராஜன்]

எச்செய்கையைச் செய்வதற்கும் ஒரு சக்தி அவசியம் என்பது உண்மை. செய்கைகள் பல்வேறு படுவன போன்று அவ்வச் செய்கைகளுக் கேற்பச் சக்திகளும் பல்வேறு தன்மையின் பாற் படுகின்றன. ஒரு வண்டியைத் தள்ளவேண்டுமாயின் தன் சுய சக்தியைக் கொண்டு தள்ளலாம்; அல்லது ஒரு குதிரையின் சக்தியைக் கொண்டு தள்ளுவிக்கலாம். சுய சக்தியும் குதிரையின் சக்தியும் போதுமான உதவி புரியாவிடத்து இயந்திரங்களின் சக்தியை நாடுகின்றோம். இயந்திரங்களுக்குச் சுயமாக ஒரு சக்தி யுண்டா? அவைகளையும் ஓட்டுவதற்கு ஒரு சக்தி வேண்டுவது தானே? எல்லோரும் தற்காலத்தில் அறிந்திருக்கும் புகை வண்டிகள் எவ்வாறு தள்ளப்படுகின்றன? நீராவியின் சக்தியைக் கொண்டல்லவோ தள்ளப்படுகின்றன?

ஆகவே, தள்ளுதலாகிய ஒரு செய்கைக்கே மூன்று வித சக்திகள் வேண்டியிருப்பதாகத் தெரியவந்தது. இவைமட்டு மல்லாமல் இன்னும் பல்வேறு சக்திகளைக் கொண்டும் தள்ளும் செய்கையைச் செய்யலாம். அதே விதமாக இழுக்கும் செய்கைக்கும் பல்வேறு சக்திகளை உபயோகிக்கலாம். அப் பல சக்திகளுள் மின்சார சக்தியும் ஒன்று. நீராவியின் சக்திக்குக் காரணமாயுள்ள நீராவியை நாம் காண முடிகிறது. ஆனால் மின்சார சக்தி என்று சொல்லக்கூடிய ஒன்றின் காரணமாயுள்ளது எது? நாம் அதைப் பார்க்க முடியுமா? முடியாது. ஆனால், மின்சாரம் என்பது தள்ளும் சக்தி, இழுக்கும் சக்தியாகிய இன்னவையன்ன பலசக்திகளுக்கு ஒரு வித ஹேதுவாக உள்ளது என்பது மட்டும் சொல்ல முடியும். உலகில் நடைபெறும் பல வித அற்புதச் செய்கைகளுக்கும் மூலகாரணமாயுள்ள ஒரு சக்தியிருக்கவேண்டு மென்றும், அச்சக்திதான் கடவுள் என்றும் சொல்லுகிறோம். அதுபோலவே மின்சாரத்தின் செய்கைகளைக் கொண்டு மின்சாரம் என்பதை நிர்ணயிக்கின்றோம்.

எனவே, மறை பொருளாயுள்ள மின்சாரத்தை ஆராய்ந்து அறியவேண்டின் மின்சார சக்திகளின் தன்மைகளையும் அவைகளின் உபயோகங்களையும் கவனித்தல் இன்றியமையாதது.

மின்சார சக்தியைக் கொண்டு ஒளியை உண்டாக்குகின்றனர். பௌதிக சாஸ்திரத்தின் பலனை தினந்தோறும் அனுபவித்துக்கொண் டிருக்கும் இக்காலத்தில் மின்சார ஒளியை அறியாதிருக்க இயலாது. புகைபடியாமலும், எண்ணெய் முதலான பசைகளால் மாசுபடாமலும் துல்லிதமாய்ப் பல வீடுகளில் ஒளிரும் மின்சார விளக்கை நாம் காண்கிறோம். எண்ணெய் விளக்கினிடத்துக் காணும் தீய குணம் மின்சார விளக்கினிடத்து இல்லை யென்பதை உன்னுந்தோறும் மின்சாரத்தைக் கடவுளுக்கு ஒப்புமைப் படுத்தியது சாலவும் பொருத்தமுடைத்தெனவே தெரியவருகிறது. தம் ஒளியைக் கண்டு புஷ்பமென மயங்கித் தம்மிடத்து ஆசையாக ஓடிவரும் விட்டில் பூச்சிகளை எண்ணெய் விளக்குகள் கூசாமல் கொல்லுகின்றன. மின்சார விளக்குகள் ஆசையால் ஓடிவரும் அப்பூச்சிகளைக் கொல்லுகிறதில்லை; அவைகளை முத்தமிடுவது போல் காண்கின்றன. எனவே, எண்ணெய் விளக்கை விடுத்து மின்சார விளக்கை உபயோகிப்பது ஜீவகாருண்ய நெறிக்கும் ஒரு ஹேதுவாக இருக்கிறது என்றும் சொல்லலாம். எண்ணெய் விளக்கை ஏற்றவேண்டிய அவகாசம் மின்சார விளக்கைப் பிரகாசிக்கச் செய்வதற்கு வேண்டுவதில்லை. ஆகவே மனிதனுடைய பொன் போன்ற அவகாசத்தையும் இது மிகுத்திக் கொடுக்கின்றது. இன்னும் பலவிதத்திலும் மின்சார விளக்கு மேன்மை யுடைத்தாயிருக்கிறபடியால் பல விடத்தும் இது உபயோகப் படுத்தப்படுகிறது.

மின்சார சக்தியைக் கொண்டு ஒளியையே அல்லாது ஒலியையும் உண்டாக்குகின்றனர். ஆனால் ஒலியை யுண்டாக்குவது மின்சாரத்தினுடைய இழுக்கும் சக்தியைக் கொண்டே நடைபெறுகிறது. அந்தத் தன்மையில் மின்சார ரயில் வண்டிகளை ஓட்டவும் மின்சாரத்தை உபயோகிக்கின்றார்கள். மின்சாரம் உலோகக் கம்பிகளின் மூலம் செல்ல வல்லது. அப்படிச் செல்லும்போது அக்கம்பியின் பக்கம் ஒரு ஊசியை வைப்போமானால் அவ்வூசி அசைகிறது. காந்தத்திற்கும் உலோகக் கம்பிகளின் மூலம் ஓடும் மின்சாரத்திற்கும் உள்ள ஒரு சம்பந்தத்தைக் கொண்டே ஒலி ஏற்படுத்தப்படுவதும், மின்சார விசிறி சுற்றுவதும், இன்னும் பல இயந்திரங்கள் ஓட்டப்படுவதும் நிகழ்கின்றன. இத்துறையில் மின்சார உபயோகத்தை என்னென்று கூறுவது!

மின்சார சக்தி சூட்டை உண்டாக்கவும் உபயோகப்படுகிறது· மின்சார அடுப்பில் தண்ணீரை

வெகு சீக்கிரத்தில் கொதிக்க வைத்துவிடலாம். மிகுந்த சூட்டைக் குறைந்த அவகாசத்தில் மின்சார அடுப்பில் பெறலாம். ஆனால் அவ்வித அடுப்பு பணச் செலவு அதிகம் கொள்வதால் எல்லோராலும் உபயோகிக்கக் கூடிய நிலைமையில்லை.

சில பொருள்களைப் பாகுபடுத்துவதிலும் மின்சார சக்தி உபயோகப்படுகிறது. உதாரணமாக தண்ணீரைப் பிராண வாயுவாகவும், ஜல வாயுவாகவும் பிரித்துவிடக் கூடிய சக்தி மின்சாரத்திற்கு மட்டுமே உரியது. இச்சக்தியைக் கொண்டு மின்சாரத்தை பௌதிக சாஸ்திர ஆராய்ச்சித் துறைகளில் எவ்வளவோ உபயோகப் படுத்துகின்றனர்.

மின்சார சக்தி பொதுவாக உலக முன்னேற்றத்திற்கு இன்றியமையாததே எனினும் அதை வைத்திய முறைகளிலும் நுழைத்து ஆட்கொல்லி யாக்குகின்றனர் என்பதைக் கவனிக்க எவருக்கும் மனம் சகியாது. மின்சார வைத்தியம் நோயாளியின் நரம்புகளைப் பாழ்படுத்துகின்றதே ஒழிய நோயாளிக்குச் சிறிதும் நன்மையை யுண்டாக்குவதில்லை. தாகவிடாய் தீர்க்க இளந் தேங்காய் வெட்டிக் கொடுக்கும் கத்தியைக் கழுத்தை வெட்டிக்கொள்ள உபயோகித்தால் அது கத்தியின் தோஷமாகுமா? அதுபோல் மின்சார சக்தியால் நன்மையைப் பெறக் கிடக்க, அதை மனிதன் தீய வழியில் உபயோகிப்பது மனிதனது மதியிலாக் குறையே யாகும்.

இன்றியமையாத பல நன்மைகளையும் தரக்கூடிய மின்சார சக்தியின் பெருமையைக் கூறி அது என்று இவ்வுலகில் பிறந்தது, எவ்வாறு வளர்ந்து வருகிறது என்று சிறிது கவனியா தொழிவது இயல்பாமோ? அதனுடைய வளர்ச்சியைக் கூற வேண்டுமெனில் அது கி.மு. 600-ம் வருடந் தொடங்கியே வளர்ந்து வருகின்றது எனல் வேண்டும். அக்காலத்திருந்த தேல்ஸ் (Thales) என்பவன் ஆம்பர் (Amber) என்னும் வஸ்துவைப் பட்டின் மேல் தேய்த்தால் அது இலேசான பண்டங்களை யிழுப்பதாகக் கண்டு பிடித்தான். அப்பொருளின் பெயரைக் கொண்டுதான் மின்சாரத்திற்கு ஆங்கிலத்தில் எலெக்ட்ரிசிடி (Electricity) என்று பெயர் வழங்கி வருகிறது. அப்படி நாமகரணம் பெற்ற மின்சாரம் 16-ம் நூற்றூண்டு வரைக்கும் பிறந்த வண்ணமாகவே இருந்ததேயொழிய அதன் லீலைகள் ஒன்றும் நடைபெறவில்லை. பிறகு பௌதிக ஆராய்ச்சி பல துறைகளிலும் பரவிய எலிஸபெத் (Elezabeth) இராணியார் காலத்து, அவ்வம்மைக்குப் பிரதம வைத்தியராயிருந்த டாக்டர் கில்பெர்ட் (Dr. Gilbert) என்பவர் இலேசான பொருள்களை மேற்படி குறித்த வண்ணம் இழுக்குந்தன்மை ஆம்பருக்கு (Amber) மட்டுமே யல்லாது கந்தகம், கண்ணாடி, அரக்கு, ரெசின் (Resin) முதலிய பல பண்டங்களுக்கும் உரியது எனக் கண்டு பிடித்தார். உலோகங்களுக்கு இத்தன்மை யில்லையானாலும் ஆம்பர், ரெசின் முதலிய பொருள்களுடன் சேர்த்துப் பட்டின்மேல் தேய்க்கப்படுங் காலத்து அவை அச்சக்தியைப் பெறுகின்றன. இதைக் கொண்டு பிற்காலத்தில் உலோகக் கம்பிகளின் வழியே மின்சாரம் செல்லுகின்றது என்று கண்டுபிடித்தார்கள். அக்காலம் தொட்டு மின்சார சக்தியின் ஆராய்ச்சி முதிர முதிர, அதன் தன்மைகளும் உபயோகங்களும் பெரிதும் பரவப் பரவ, அதை எல்லோருடைய வீட்டிற்கும் வரவேற்பதே யல்லாது, மேலும் மேலும் வளர்த்துத் தன்னுடை அற்புதச் செய்கைகளைப் புதிது புதிதாக நிகழ்த்துமாறு பலரும் அதைப் பெரிதும் பாராட்டி வருகின்றனர்.

## ஒரு நிமிஷம்!

சற்று நின்று கேளுங்கள்! நமது பத்திரிகையைப் பற்றி எந்தச் சமாசாரம் எழுதினாலும் தயவுசெய்து தெளிவாகக் கீழ்க்காணும் விலாசத்துக்கே எழுதுங்கள். புதிதாகச் சந்தாதாரராகச் சேரவேண்டுமானாலும் சரி, சந்தா விலாசத்தை மாற்றவேண்டுமானாலும் சரி, வேறு எந்த விஷயமா யிருந்தாலும் சரி, தயவு செய்து தங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவுபட எழுதவும். பழைய சந்தாதாரராயின் மறவாது சந்தா நெம்பரைக் குறிக்கவும். இதையெல்லாம் மறந்துவிட்டு, "எவ்வளவு நாட்களாயின நான் கடிதமெழுதி? எவ்வளவு முக்கியமான விஷயம்? ஏன் இன்னும் பதிலெழுதவில்லை?" என்று சீறி விழுந்தால் மானேஜர் என்ன செய்வார்? திருப்பித் திருப்பிப் பார்த்தாலும் சில கடிதங்களில் விலாசம் அகப்படுவதில்லை. சிலர் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டு மென்பதை அடியோடு மறந்துவிடுகிறார்கள். யாருக்குப் பதிலெழுதுவது?

மித்திரனுக்கு வியாசமாயின் ஆங்கிலமாத முதல் தேதிக்குள்ளும், விலாசம் மாற்றல் முதலியவையாயின் 10-ந் தேதிக்குள்ளும் தெரிவித்துவிட வேண்டும்.

**சந்தா நெம்பர்! கவன மிருக்கிறதா?**

"செங்குந்த மித்திரன்" காரியாலயம், பவழக்காரத் தெரு, சென்னை.






## வேரை வைத்துக்கொண்டு கிளையை வெட்டாதீர்

### காளையருக் கொரு கனிமொழி

தாம் "நவஜீவன்" பத்திரிகையில் 'வைத்தியம்" எனத் தலைப்பிட்டு எழுதிய வியாசத்தைக் கண்டித்தும், பெர்குசான் காலேஜில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தை ஆதரித்தும் ஒருவர் தமக்கெழுதிய கடிதத்தைக் கண்டிக்கு முகத்தானே காந்தியார் வீராவேச மிகுந்த இளங் காளையருக்குக் கீழ் வருமாறு ஒரு இன்னுபதேசம் செய்துள்ளார்:

"கடிதமெழுதிய நண்பர் பெரும்பான்மையான மாணவரது மனப்பான்மையையே எடுத்துக்காட்டுகிறா ரென்பது பயத்துக்கிடந்தருகிறது. அத்தகைய அபிப்பிராயம் உண்மையாகவே கொள்ளப்படுகிற தென்பது அதனைப் பின்னும் விஷமாக்குகிறது. மனவெழுச்சி மிகுந்த வாலிபன் தான் காணும் சம்பவத்தால் தூண்டப்பட்டுத் தன் சூழல் முதலிய எதையுங் கவனியாது திடீரென்று ஒரு காரியத்தைச் செய்கிறான் என்பதை நாம் அனுபவத்திற் கண்டதில்லை. தங்கள் செயலின் விளைவையும் முடிவையும் அவர்கள் சட்டை செய்வதில்லை என்பது உண்மையே. ஆனால், புகழ்ச்சி இகழ்ச்சி எதையும் கவனியாது நடக்கும் அவ்வளவு பெருந்தன்மையான நோக்கம் அவர்களுக்கு உண்டென்பதை யான் நம்பவே மாட்டேன். தங்கள் செய்கைகள் கண்டிக்கப்படுமென அவர்கள் உணர்வார்களே யானால் தங்கள் அருமையான உயிர்களை விழலுக் கிறைத்த நீராக்கவே மாட்டார்களென்பது எனது மனப்பூர்வமான அபிப்பிராயம். ஆகவே, அத்தகைய உதாசினமான செய்கைகளால் விளையும் பெருமிதமான தீங்கை உணர்பவர்கள் அவற்றைக் கட்டாயம் சிறிதும் தயக்கமின்றிக் கண்டிக்க வேண்டுமென்பதிற் சந்தேகமே யில்லை.

"ஷோலாப்பூரில் விதிக்கப்பட்ட ராணுவச் சட்டத்துக்கும் அந்தச் சாக்கில் புரியப்பட்ட கொடுமைகட்கும் அப்பொழுது வேலை பார்த்து வந்த கவர்னரைக் காரணராய்க் கொள்வது மிகவும் தவறு: தவறுதலாக இருப்பது ஆட்சிமுறையே. இந்த முக்கியமான உண்மையை உணர்ந்து தான் காங்கிரஸ், அந்த முறையை அழிக்க முயலுகையில், வேறு வழியற்றவர்களாகிய அதை நடத்தும் உத்தியோகஸ்தர்களை வாளா விட்டிருக்கிறது. ஒரு வலிமையான கூட்டம் இந்தியா போன்ற ஒரு பெரிய தேசத்தை அக்கிரமத்துக் குட்படுத்துவதையே அம்முறை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்தகைய முறையை நடத்த ஒரு தேவதையையே நியமித்தாலும், அதுவும் "வேறு வழி யில்லையே. என்னாலென்ன விருக்கிறது?" என்றுதான் இரக்கப் பாட்டுப் பாடும். அத்தேவதையும் சமயம் நேரும்பொழுது அந்த கவர்னர் செய்ததைத் தான் செய்யும். பத்துத் தலை இராவணன் உண்மையிலேயே ஒரு இராக்ஷசன் என்றெண்ணுகிறீர்களா? ஒரு ஆட்சி முறைதான் அவன் மூலமாக உருவகப் படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு தலை அறுபட்டால் அவ்விடத்தில் மற்றொன்று கிளைத்தது. அவ்வாறு புதுத் தலை கிளைப்பதற்கு மூலாதாரத்தைக் கண்டறிந்த பின்னர் தான் இராமர் இராவணனை எளிதாக வெல்ல முடிந்தது. ஒன்றல்ல, பல கொலைகள் நடந்தன. கண்ட பலனென்ன? கொலை செய்யப்பட்ட ஒரு உத்தியோகஸ்தரது இடத்தில் மற்றொருவர் உட்கார்ந்துகொண்டார். முறையோ, முன் போலவே சுகமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. துஷ்டத் தனத்துக்கு அடிப்

படையாயுள்ள வேரைக் களைவதில் மட்டும் நாம் வெற்றி பெறுவமே யானல் ஷோலாப்பூரில் நடந்தது போன்ற சம்பவங்களும் நடவா; தூக்குமேடை யேறவேண்டிய கதியும் நேராது.

"ஆகவே, வீரமிகுந்த காளையரது மனக் கொதிப்பை எழுப்பும் அக்கிரமங்களைக் கண்டிப்பதில் நானும் அவர்களைப் போலவே கடினமாகவும் மும்முரமாகவும் இருப்பேன். ஆனல், வீண் வார்த்தையையும், விதண்டாவாதத்தையும் விட்டு முறையை அழிப்பதில் அவர்கள் காங்கிரஸுடன் சேர்ந்துழைக்கட்டும். ஆட்களைக் கொலை செய்வது அம்முறைக்குப் புத்துயிரையே யளிக்கிறது. சாத்வீகமோ அதன் ஆயுளைக் குறைக்கிறது. சாத்வீகம் மட்டும் சரியாகக் கையாளப்படுமே யாயின் அந்த அக்கிரமமான முறை அழிந்துபடுவது திண்ணம். கொலை செய்யும் வழக்கமானது தக்கபடி தடுக்கப்படாவிடில் அது நமது தலைக்கே கொள்ளியாய் முடியு மென்பதையும், அப்பொழுது நாம் தேளை விட்டுப் பாம்பைப் பிடித்த நிலைக்கே வருமோ மென்பதையும் கடிதமெழுதிய நண்பர் போன்று வாதிப்பவர் உணரட்டும். அதே முறையைப் புதிய உருவத்துடன் மீண்டும் ஏற்படுத்துவதினு லுண்டாகக்கூடிய தீமைகளை யுணர்ந்து அதனை விலக்க நாம் பாடுபட வேண்டும். அதே ஆட்சி முறை வெள்ளையருக்குப் பதிலாகக் கருப்பு மனிதரால் நடத்தப்படினும் மக்கள் இப்பொழுது செய்யும் தீங்குகளினும் கேடானவற்றைச் செய்யாவிடினும் அவற்றையே யாவது செய்வரென்பதில் ஐயமில்லை".

தீமைக்குச் சரியான ஆதாரத்தைக் கண்டுபிடித்து அதனை யழிக்காது, வீணில் திக்கற்ற உத்தியோகஸ்தர்களுக்குக் கொலை முதலிய தீங்குக ளிழைத்துப் பழிச்சொல் லேற்கும் காளையரையும், அத்தகையோரை வானுற உயர்த்திப் பாடிப் பாடிப் பொங்கிடுவோரையும் இவ்வரிய உபதேசம் தவருன வழியினின்றும் தடுத்துச் செம்மையான நெறியிற் புகுத்துமாக.

---

# நம் குலத்தவரிடையுள்ள கக்ஷி பேதங்களும் அவற்றை யொழிக்கும் விதங்களும்

[திரு. N. P. தணிகைராயன்.]

கைலாய பரம்பரையினரென்றும், பண்டைக்காலத்து அரசர்களாகவும், அமைச்சர்களாகவும், சேனதிபதிகளாகவும், கவிச்சக்ரவர்த்திகளாகவும் விளங்கினவர்களென்றும் சொல்லிக்கொள்ளும் நமது குலமாகிய செங்குந்த குலம் தற்போழ்து மிகவும் பிற்போக்கான நிலைமை யடைந்திருக்கிறது என்பதை எவரும் மறுக்க முன்வரார் என்பதே எனது தாழ்ந்த அபிப்பிராயம். இதற்குக் காரணமாகக் கல்வியின்மை, பழைய பழக்கவழக்கங்களையே குரங்கு பிடியாகப் பிடித்துக்கொண் டிருத்தல், ஆகியவும் இன்னோரன்ன பிறவும் எனலாம். இவற்றுள் ஒற்றுமையின்மையும் ஒன்றெனக் கொள்ளுதல் மிகையாகாது.

'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே யன்றி
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்குந் தாழ்வே'

என ஸ்ரீமான் பாரதியார் கூறினர். அதன் உண்மை ஆழ்ந்து யோசிக்கும் யாருக்கும் தெள்ளிதின் விளங்காமற் போகாது. ஒற்றுமையினல் பெரிய நன்மைகளையும் எளிதிற் கைகூடிவரப் பெறலாம். சிறந்த பல வஸ்துக்களும் ஒன்றுசேர்ந்து ஓர் அரும் பெரும் நன்மையை உலகுக்கு அளிக்கின்றன. வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு ஆகிய மூன்றும் அதனதன் அளவில் அவ்வளவு சிறந்ததா யிராவிடினும், ஒன்றுசேர்த்து மெல்லப்படின் ஒரு வித ஆரோக்கியத்தையும் அழகையும் தம்மை யுபயோகிப்பவருக்குத் தருகின்றன. தனி வைக்கோலானது ஒரு பலமற்ற சாதாரண வஸ்து. ஆனல் பல எடுத்து ஒருங்கு சேர்த்துக் கயிருகத் திரிக்கப்பட்டால் அவ்விதத்தாலான கயிற்றைக் கொண்டு ஒரு யானையையுங் கட்டலாமன்ருே? ஒற்றுமையி னுயர்வை விளக்குவதற்கான பல கதைகள் நம்மிடை வழங்கிவரல் நம்மனைவருக்குந் தெரிந்ததே. விறகு சுமை ஒன்றைக் கட்டியிருந்தபோது அதை அப்படியே உடைக்க முடியாது தனது குமாரர்கள் விட, தகப்பன் கட்டவிழ்த்து விறகுகளைத் தனித்தனி யெடுத்து ஒடித்துவிட்டான் என்றும்; ஓர் வனத்தின்கண் நான்கு பலத்த எருதுகள் மிகுந்த ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்ததைச் சிங்கமொன்று கண்டு மனம் பொருது ஓர் நரியின் உதவியினல் அந்நான்கு காளைகளையும் தனித்தனிப் பிரித்துப் பிறகு கொன்று தின்றுவிட்டது என்றும் வழங்கிவரும் கதைகள் ஒற்றுமையி னுயர்வை உள்ளவாறு விளக்குகின்றன.



மேலும் ஒற்றுமை யின்மையினு லுண்டாகும் கேடுகளும் விவரிக்கற்பாலன வன்ருகத் தான் முடியும். 'தனக்குத் தானே பிரிந்திருக்கும் எந்த இராஜ்யமும் நிலை நிற்காது' என்று கிறிஸ்து சொல்லிப் போந்தார். தனக்குத் தானே பிரிந்துள்ள ஓர் குடும்பத்துக்கும் அக்கதியே என்றும் அன்னர் கூறியுள்ளார். ஓர் ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் இரண்டு மூன்று அல்லது இன்னும் அதிக எண்ணிக்கையை யுடைய பிரிவினைகளை யுடையவர்களா யிருந்தால் அவ்வரசாங்கம் சரிவர நடைபெருது. எவ்வாறெனில், ஒரு கக்ஷியினர் யாதாவதொரு காரியத்தைச் செய்தே தீரவேண்டும் எனச் சொல்லலாம். அது தேயத்துக்கும் பொது ஜனங்களுக்கும் அவசியமாயு மிருக்கலாம். ஆனல் எதிர்க் கக்ஷியினர் கொண்டுள்ள பிடிவாத குணத்தினலும் அவர்களது அதிகப்பட்ட எண்ணிக்கையாலும் அது செய்யப்படாமலே நிறுத்தப்படுகிறது. அதனல் பாவம் ஒன்று மறியாத பாமர மக்கள் பரிதவிக்க நேரிடுகின்றது. அதுவு மன்றி, எப்பொழுது இருவருக்குள் பேதஞானம் ஏற்பட்டதோ, அந் நிமிடம் தொடங்கியே ஒருவனை யொருவன் வெறுக்கிருன். அவன் என்ன சொன்னலும் அதற்கு மறுப்புக் கூற இவன் எப்பொழுதும் தயாராக விருக்கிருன். கடைசியில் இருவரும் அடையும் பயன் என்னவென்று பார்க்கின் இருசாரார்க்கும் நஷ்டமே யன்றி வேறிராது.

செங்குந்தர்களாகிய நாம் மிகுந்த கட்டுப்பாடும் ஒற்றுமையும் உடையவர்களா யிருந்தோம் என்பதில் ஐயமில்லை. இல்லையேல் ஆயிரத்தெட்டு தலைப் பிள்ளைகளின் சிரங்களை வெட்டி ஈந்து அச்சிரங்களினலாய சிம்மாதனத்தில் வீற்றிருக்கச் செய்து கவிச்சக்ரவர்த்தி கூத்தர் பெருமானை 'ஈட்டி யெழுபது' என்னும் அரிய பிரபந்தத்தைப் பாடச் செய்திருக்க முடியுமா? அந்த ஒற்றுமையானது நமக்கு நம் முன்னேர்களால் கொடுக்கப்பட்ட பிதுரார்ஜித சொத்தாகும். அறியாமையுள்ள மகன் எவ்வாறு தன் தந்தை தனக்கு வைத்துப் போன நிதியைப் பல்வகையினும் செலவிட்டு எதற்கு முதவா நித்திய தரித்திரனகி வருத்தத்தை அடைந்து கஷ்டப்படுகின்ருனே, அத்தன்மை போன்று நம்மவரும் ஒற்றுமை என்பதை அறவே ஒழித்துக் கக்ஷிப் பிரதி கக்ஷிகளை ஆங்காங்குக் கொண்டு அவைகளினு லுண்டாகும் பிரதிகூலங்களைத் தேளால் கொட்டப்பெற்ற திருடனைப் போன்று வெளியிடாது அனுபவித்து வருகிருர்கள். பெரும்பாலும் நம்மவ ரிருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் கக்ஷிகள் இருக்கின்றன வென்றும், அவை இல்லாத நம்மவர் உள்ள கிராமத்தைக் காணுவது மரிது என்றும் வெளியில் சுற்றுப் பிரயாணஞ் செய்யும் அனுபவ ஞானமுள்ளோர் சொல்லக் கேட்டுள்ளேன்.

நம்மவரிடையுள்ள கக்ஷிகளுக்கும் பிறரிடத்துள்ள கக்ஷி பேதங்களுக்கும் சில விசேஷ வித்தியாசங்க ளுண்டு. அவற்றுள் முக்கியமான சிலவற்றை ஈண்டு குறிப்பிட்டு மேற் செல்லுதும். முதலாவதாக நமக்குள் இருக்கும் கக்ஷி அநேகமாய் நமக்காகவே யிராது. பிற ஜாதியாருக்காகவோ பிற மதத்தினருக்காகவோ நாம் சண்டையிட்டு நமக்குள் கக்ஷி யுண்டாக்கிக்கொள்ளுகிருேம். நாம் வதியும் சில கிராமங்களில் வழங்கிவரும், வண்ணன் கக்ஷி, அம்பட்டன் கக்ஷி, பணி செய்வோன் கக்ஷி ஆகிய இவ்வித பேச்சுக்களே இதற்குப் போதிய சான்ருகும்.

வேலை செய்யுந் தொழிலாளிக்குக் கூலி முதலானவை அப்போதைக்கப்போது கொடுத்துவிடாது நிறுத்திவைக்க, அதை ஒரு சாரார் கொடுத்துவிட வேண்டுமென, எடுத்தோத அவ்விருப்பத்திற் கிணங்காத மற்றையோரெல்லாம் இவர்களோடு ஒத்துழையாமை இயக்கதை ஆரம்பத்துவிடுகிருர்கள். அதன் பயனய் ஊர் இரண்டாய்ப் பிரிந்துவிடுகிறது.

சில அறியாமைகளும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் கக்ஷிகளை உண்டுபண்ணுகின்றன. இன்றைக்கும் சில கிராமங்களில் கூட்டம் கூடுவது நாகரீகமுள்ள ஒவ்வொருவருக்கும் வேடிக்கையாகவும் விந்தையாகவுந் தான் தோன்றும். காலையில் (மணி ஆறுக்கு) ஆரம்பித்தாலும் கூட்டம் சரியாய் நடைபெற மாலை மணி 6 ஆகும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் பிரதிநிதியாக (representative) அதனதன் "பெரியவர்கள்" தான் விஜயஞ் செய்

வார்கள். இவ்வித கூட்டத்தில் சிறிது நாகரிக முடையவர் தற்கால பழக்க வழக்கங்களை யொட்டி நடந்துகொள்வரேல் அவரை யனைவரும் வெறுக்கத் தலைப்படுவர். யான் ஒரு சமயம் ஒரு கூட்டத்தை வேடிக்கைப் பார்க்க நேரிட்ட போது கீழ்க்கண்ட சம்பவம் நிகழ்ந்ததைக் கண்டேன்:—

கூட்டத்திற்குத் தலைவர் ஒரு பொது விஷயத்தை எடுத்து விட்டு "இதற்கென்ன செய்யலாம்?" என்று கேட்டனர். சுமார் 35 வயதுள்ள ஒருவர் எழுந்து ஏதோ ஒரு முறையை எடுத்துச் சொன்னார். ஆனால், அதை அவர் யாரோடும் இரகசியமாய்க் கலந்தாலோசியாது தன் சுபேச்சையாய்ச் சொன்னதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அனைவருடைய கோபாக்கினிக்கும் இலக்கானார். அவ்வித செயலுக்கு அம்மனிதர் மாத்திரம் சிறிது செல்வ முடையோராக இருந்திருப்பரேல் தன்னுடன் நான்கைந்து வீட்டினரைச் சேர்த்துக் கொண்டு தனிக் கக்ஷி யுண்டுபண்ணி யிருப்ப ரென்றே எண்ணுகிறேன்.

மற்றொரு முக்கிய காரணம் கோயில் சம்பந்தமானது. இதற்குதாரணமாக ஓர் கிராமமிருப்பதைச் சென்ற மே௴ 16, 17உ-களில் நடைபெற்ற நமது இரண்டாவது சமூக மகாநாட்டில் சபாநாயகர் ஸ்தானத்தை வகித்த உயர் திருவாளர். தி. நா. சபாபதி வள்ளலாரவர்கள் சொல்லியுள்ளார்கள். பதினைந்து வருடங்களாகப் பகவானுக்குப் பூஜை நிறுத்தியதோ டமையாது வட்டிக்கு விடக்கூடிய பணத்தையும் புதுப்பானையில் வைத்து ஐந்து பூட்டுக்களால் பூட்டியுள்ளார்கள் எனச் சொல்லியுள்ளதும் கவனிக்கற்பாலதே.

இக்காரணங்களாலும் இன்னும் இவ்விதமான வேறு காரணங்களாலும் கக்ஷிப்பிரதி கக்ஷிகள் ஏற்பட, அவைகளினால் மிகுந்த நஷ்டத்தையும் பிரதிகூலத்தையும் அடைந்து வருகிறோம். கக்ஷிக்காரர்களையும் அவர்கள் தலைவர்களையும் எந்நாளிலும் நியாயஸ்தலத்தின் கண்ணும் வழக்கறிஞர் வீட்டுப் புறத் திண்ணைகளிலும் காணலாம். நாலு கை வக்கீல் ஐயாக்களுக்கு நங்குலத்தவரால் கொடுக்கப்படும் பணமும் அளவிடற்பாலதன்று. அப்படி வீணில் செலவிடும் பணத்தை நமது கல்விநிதிக்கு அளிப்பின் உயர்தரக் கல்வியைநாடிச் செலவுக்குச் செல்வமில்லாது வாடி வருந்தி நிற்கும் நங்குல ஏழை மாணவர்கள் பலர் படித்து உன்னத நிலைக்கு வருமாறு அவர்களுக்குக் கொடுத்துதவலாமன்றோ? அந்தந்த ஊரில் கக்ஷிகளுக்காகச் செலவிடும் பணத்தைக் கல்விக்காகச் செலவிட்டால் நம்மவர் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் செங்குந்தர் ஆண்பாடசாலையும், ஓர் பெண்பாடசாலையும் நிருமாணிக்கப்பட்டு, அவற்றால் நங்குல ஆண் பெண் மக்களனைவரும் கல்வி, சமயம் ஜாதி ஆகியவற்றில் போதிய ஞானமுள்ளவர்களாய்த் திகழுவார்க ளென்பதில் ஐயமுண்டோ? அல்லது அப்பணமானது ஊர்ப் பொதுப் பணமாக வைக்கப்பட்டுக் கூட்டுறவு வியாபாரம் முதலியவற்றில் உபயோகிக்கப்பட்டால் கிராமவாசிகள் பலருக்கும் இலாபத்தைத் தந்து நம்மவர் பொருளாதார நிலையையும் உயர்த்துமல்லவா? கிராமச் சீர்திருத்தத்திற்காகவும் செலவிடப்படாது பணத்தை வீணாக்குவதுடன் செல்வப் பொருளினால் நாமடையக் கூடிய பற்பல இன்பங்களையும் இக் கக்ஷி யென்னும் பேயானது விலக்கி விடுகின்றதென்பது வெள்ளிடைமலை.

செங்குந்த குலமாகிய மரத்திற்கே வேர்ப்புழுவெனச் சொல்லத்தகும் இக்கக்ஷிகளானவை ஒழியும்நா ளெந்நாளோ அந்நாளே நம்மவர் சீர்படுங் காலமுமாம். ஆகையான், நம் குலத்துதித்த அறிவாற்ற லமைந்த ஒவ்வொருவரும் நம்மவரிடையுள்ள கக்ஷிகளை யொழித்தல், தமது கடமைகளுள் முக்கியமானதொன்றெனக் கருதல் வேண்டும். அதற்கு வேண்டுவது தியாக சிந்தையும் அரிய சேவையும். பாடு படுபவரன்றோ பலனை யடைவர்? (No pains no gains). வேண்டிய உதவி செய்யக்கூடிய தியாக சிந்தையும் தைரியமும் உடைய வாலிப வீரர்கள் நமது குலத்தி லில்லாமற் போகவில்லை. பல்காலம் உறங்கிக் கிடந்த நம்மை எழுப்பி நமக்குப் பல நன்மைகளையுஞ் செய்துவரும் நங்குலத் தலைவர்கள் மனது வைப்பின் முடியாத காரிய மிராதென்றே சொல்லலாம். ஆனாலும், 'சுடர் விளக்காயினும் நன்றா யெரிந்திடத் தூண்டுகோ லொன்று வேண்டு' மன்றோ? ஆதலின், செல்வவான்களும் தங்களாலான திரவிய உதவி செய்ய முன்வர வேண்டும். இவ்வித உதவி தற்சமயம் இருப்பதைவிட மிகுதியாகக் கிடைக்குமாறு வெற்றிவேலன் உற்றதுணை புரிவானாக!



செங்குந்த குலப் பெரியோர்களே!

சகோதர சகோதரிகளே!

'முடியாது என்னும் பதம் முட்டாள்கள் அகராதியில்தான் காணப்படும்' என்று ஓர் வீரசிகாமணி கூறியுள்ளார். மேலும், பொது மறையாம் திருக்குறளும் 'முயற்சி திருவினை யாக்கும்' என்றல்லவோ ஓலமிடுகின்றது? அதனால் 'முயன்றால் முடியாத தொன்றுமில்லை' என்ற ஆன்றோர் வாக்கைக் கொண்டு முயல்வோமாக! ஆனால் அதற்குமொரு ஒழுங்கு வேண்டுமாதலால் அதைப்பற்றிக் கவனிப்பதும் பொருத்தமானதே.

நம்மவர் வதியும் இடங்களில் ஏராளமாகச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அவைகள் தங்களுக்கு உறுப்புக்களாக, விடாமுயற்சியோடும் பொது நோக்கத்தோடும் உழைக்கத்தகுந்த இளஞ்சிறார்களையும் அனுபவமும் அறிவும் மிகுந்த ஆன்றோர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். 'எனக்கு வயது இருபதுதான் ஆகிறது. யான் ஓர் இளைஞன். என்னால் ஒன்றுஞ் செய்ய வியலாது' என்று எந்தச் செங்குந்த வாலிபனும் சொல்லாது, 'நான் மற்றவர்களுக்கோர் வழிகாட்டியாக விருப்பேன். என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று தன்னுள் கொண்டு இவ்வித சங்கங்களில் சேர்ந்து பொதுஜன ஊழியஞ்செய்ய வேண்டும். ஆங்காங்குக் கூட்டங்கள் கூட்டி, நம்மவர்களுக்குக் கக்ஷிப்பிளவுகளினால் உண்டாகும் எண்ணிக்கையற்ற தீமைகளையும் அவற்றை ஒழித்தலினால் நாமடையக்கூடிய நன்மைகளையும் அவர்கள் மனத்தில் பசுமரத்தாணிபோற் பதியுமாறு செய்தல்வேண்டும். நியாயஸ்தல மேறி வழக்காடுவதனா லேற்படும் கஷ்டங்களைப் பன்முறையும் எடுத்துச் சொல்லி வேண்ட வேண்டும். இவ்விதஞ் செய்வதனால் கக்ஷிகள் தோன்றாதிருக்குமாறு செய்யலாம் என்பதே எனது துணிபு.

மற்றொரு விதமுங் கையாளப்படலாமென்று தோன்றுகிறது. நமதுகுலப் பெரியார்களில் பக்ஷபாதமற்ற சிலர் ஆங்காங்குச் சென்று அவ்வவ்விடங்களில் நங்குலத்தவரிடையுள்ள கக்ஷிகளை யொழிக்க வேண்டும். இவ்விதம், நங்குலத் தலைவரும் ஈரோடில் கூடிய நமது முதல் மகாநாட்டில் கொடியேற்றுவிழா வாற்றியவரும், இரண்டாவது மகாநாட்டில் வரவேற்புக் கழகத்தலைவராயிருந்து காஞ்சீபுரத்தில் மகாநாட்டை நடத்துவித்தவருமாகிய திருவாளர் ம. த. சாமிநாத முதலியாரவர்களும் இன்னும் சிலரும் செய்து வருகிறார்கள். இன்னும் இவைபோன்ற பிற முறைகளையும் அறிந்த பெரியோர் கையாண்டு குலமுன்னேற்ற முண்டாக்குவாராக!

நம்மவர் ஒற்றுமை பூண்டு சகல நலனும் பெற்றுய்யுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாம் அறுமுகப் பெருமான் அருள் புரியுமாறு அவன்றன் பாதத் தாமரைகளைப் பல்காலும் போற்றிப் பணிவாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## ஒரே தம்பிடியில் ஒப்பற்ற தருமம்!

கோயில் கட்டுகிறார்கள், குளம் வெட்டுகிறார்கள், சத்திரம் நிர்மாணிக்கிறார்கள், அன்னதான ஏற்பாடு செய்கிறார்கள், லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கிறார்கள். ஆனால் கல்வி தானத்திலும் சிறந்த தான முண்டா? குருடனுக்குப் பார்வை யளிப்பதைக் காட்டிலும் தரும முண்டா? எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகு மல்லவா? "உண்மைதான், அத்தகைய பெருந் தருமத்தை ஏழைகள் எப்படிச் செய்ய முடியும்?" என்கிறீரா? சுலபமாகச் செய்யலாம். தினம் ஒரு தம்பிடி அதற்கென்று எடுத்து வையுங்கள். மாதம் 0-2-6 ஆகிறது. அதுவே ஒரு வருஷத்தில் ரூ. 1-14-0-ஆகப் பெருகுகிறது. அதில் ரூ. 1-8-0 "செங்குந்த மித்திர"னுக்குக் கொடுங்கள். அச்செல்வன் என்ன செய்கிறான்? தன்னை வரவேற்போருக் கெல்லாம் அறிவுச் சுடர் கொளுத்துகிறான். இது மட்டுமா? தன் செலவு போக மிகுந்த பணத்தை ஏழை மாணவர்கள் கல்விக்காக உதவுகிறான். பார்த்தீர்களா? உங்கள் ஒரு தம்பிடியால் எத்தனைபேரது அறிவுக் கண்ணைத் திறக்கின்றான்? ஐயா! பல துளி பெரு வெள்ளம்! எவரும் இந்தப் பெருந் தருமஞ் செய்ய முன்வருவார்க ளல்லவா? நீங்களும் இன்றைக்கே தம்பிடி எடுத்து வைப்பீரல்லவா?

தினம் ஒரு தம்பிடி! வருடம் ஒன்றரை ரூபாய்!!

எவ்வளவு சிறிய தொகை! எவ்வளவு பெரிய தருமம்!!

## பா மாலை

### "வா!"

கண்ணே மணியே கற்பகக் கனியே கருத்தினு ளமர்ந்திட வா !
எண்ணே எழுத்தே எழிலறிவொளியே இதயத் தமர்ந்திட வா !
மண்ணே நீரே ஒளி வளி வானே மனத்திடை யமர்ந்திட வா !
பண்ணே பாகே பெண்ணே ஆணே புந்தியி லமர்ந்திட வா !

கதிரே மதியே கவினுறு மீனே கரங்களி லமர்ந்திட வா !
எதிரே புறமே அருகே அயலே என்சிர மமர்ந்திட வா !
விதியே வினையே விளைவே பயனே விழிகளி லமர்ந்திட வா !
பதியே பசுவே பரம பிதாவே போற்றியு ளமர்ந்திட வா !

நிதியார் தமக்கும் நிதியிலர் தமக்கும் நினைவருள் நிமலா வா !
மதியார் தமக்கும் மதிப்பவர் தமக்கும் மதியருள் மதியே வா !
துதியார் தமக்கும் துதிப்பவர் தமக்கும் துணையருள் தூய்மைய வா !
கதியுளர் தமக்கும் கதியிலர் தமக்கும் கதியே கயவனுள் வா !

ஜே. தங்கவேல்.

---

## செங்குந்த சாதியின் சீர்

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்.]

ஆதிச்சிவ ஞர்விழியி லன்றுதித்த சாதி
அம்பிகையின் காற்சிலம்பி லவதரித்த சாதி
சோதிச்சர வணமதிலே தோன்றுமவன் சாதி
சூழுமறு மங்கையரின் பால்சுவைத்த சாதி
நீதிநிறை நந்திகணத் தலைவர்நெடுஞ் சாதி
நித்தியகல் யாணிபரை நிமலைதருஞ் சாதி
தீதுசெயுஞ் சூர்க்குழுவைச் செயித்தபெருஞ் சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி.

பங்கயனை வன்சிறையிற் றளைபடுத்துஞ் சாதி
பார்வதியாள் தருங்குந்தம் பரிசுபெற்ற சாதி
துங்கநவ வீரர்வழித் தோன்றிமிளிர் சாதி
தொல்லாண்மைச் சூரனிடந் தூதுசெலுஞ் சாதி
கங்கைமடித் தவழ்ந்துவிளை யாடுகின்ற சாதி
கைலாய பரம்பரையா ரென்றகவின் சாதி
திங்கணதிக் கொன்றையணி சிவனளித்த சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி.

அக்கமணித் திருநீறு மணிகின்ற சாதி
ஆறுமுகன் குலமுதலா யமைந்தபெருஞ் சாதி
கைக்கோள ரென்றுலகோர் கழறுகின்ற சாதி
காலனுக்கு மோலைவிட்ட கருணைநெடுஞ் சாதி



தக்கபுகழ்க் கவியொட்டக் கூத்தன்வருஞ் சாதி
தானவர்கள் குலமழிய வந்துதித்த சாதி
திக்கனைத்தும் போற்றுகின்ற திறலுடைய சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (3)

ஆவலுடன் நவமணியி லவதரித்த சாதி
அமரர்துயர் மாற்றியருஞ் சிறைவிடுத்த சாதி
மாவடிவாய் நின்றவனை மாய்த்த பெருஞ் சாதி
மாவல்லானை வென்றவிறல் மாண்புடைய சாதி
பாவடியில் செய்யுளுக்கா யுயிர்கொடுத்த சாதி
பாவாணர்க் கின்புதவும் பரிவுடைய சாதி
சேவல்புலிக் கொடிவிருது சின்னமுள சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (4)

வீரமயேந் திரபுரியின் மேன்மையடர் சாதி
வெகுண்டுவரும் வச்சிரவா குயிர்வீட்டுஞ் சாதி
சோரவவன் முதுகெலும்பைக் கம்பஞ்செயுஞ் சாதி
சீருடனே யேறிவிளை யாடுந்திறல் சாதி
வாரணமா முகத்தவுண னுயிர்மாய்த்த சாதி
வான்றடவுங் கிரவுஞ்ச மலைபொடித்த சாதி
தீரமுடன் சிங்கனையுஞ் செயித்தவிறற் சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (5)

அண்ணலறு முகன்பணியே யநுதினங்கொள் சாதி
அக்னிமுக சூரனையு மடல்கொண்ட சாதி
நண்ணுமவன் றனைகாளி பற்றகர்நற் சாதி
நாடியவள் கைத்தாளம் பறித்தநறுஞ் சாதி
எண்ணுமுசு குந்தனிட மிருந்தபெருஞ் சாதி
இரணியனை யுதநியிடை யிருவென்ற சாதி
திண்ணியபொற் கோயிலின்மெய்க் காவல்செயுஞ் சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (6)

பேர்படைத்த விரட்டையர்கள் பிறந்தவெழிற் சாதி
பிணவனெற்றி யூரன்கச்சித் தனியன்பெருஞ் சாதி
நார்படைத்த பழுவூர்வீர நாருயணன் சாதி
நற்களந்தை யரசனுக்கல் நாகப்பன் சாதி
கூர்படைத்த வேற்புலியூர்ப் பள்ளிகொண்டான் சாதி
கோளாந்தன் புற்றிடங்கொண் டானுடைய சாதி
சீர்படைத்த முதுகுன்ற மணியன்றிருச் சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (7)

வீராணத் தேரிவல்லான் கோட்டைவெல்லுஞ் சாதி
வெற்றிமிகு கண்டியூரான் றஞ்சைவேம்பன் சாதி
பேரான மங்கலநாண் பிச்சைதருஞ் சாதி
பெருமையுறு முதலியார்க ளென்றபெருஞ் சாதி
தீராத வல்வழக்கைத் தீர்த்துமிளிர் சாதி
தில்லைதனிற் கொடியேற்றுந் திறலுடைய சாதி
சீரான வேற்குந்தஞ் செறியுங்கைச் சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (8)

ஒட்டக்கூத் தன்கவிக்கு உயிர்வழங்குஞ் சாதி
ஓராயிரத் தெண்மர்சிர முவந்தளித்த சாதி
கட்டநறுந் துகிலுலகோர்க் கருளுங்கைச் சாதி
கடப்பமலர் மாலைபுனை கைக்கோளச் சாதி
இட்டமுடன் பசித்தோருக் கன்னமிடுஞ் சாதி
எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுகின்ற சாதி
சிட்டரெல்லாம் போற்றுகின்ற செயவீர சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (9)

அயனைமறைப் பொருள்வினவு மறிவுடைய சாதி
அன்புடனே சம்பாதிக் கமுதூட்டுஞ் சாதி
மயனைவல்லான் பொய்த்தலையை வகுத்திடுநற் சாதி
மன்னெதிரில் மெய்த்தலையும் வழங்கியமேற் சாதி
வயமுளபத் தொன்பதுநா றுனவர்கள் சாதி
வான்கதிரின் பகைவனுயிர் மாய்த்தவிறல் சாதி
செயமுடையேழ் பானிரண்டு நாடுடைய சாதி
செங்குந்த மன்னரெனச் சிறந்திடுநஞ் சாதி. (10)

(தொடரும்)

---

# செங்குந்த யாத்திரைவாசி

எனது அன்பின் மிக்க சகோதரர்களே! உங்கள் மத்தியிலிருந்து அளவளாவி, யான் எனது புனித யாத்திரையின் அனுபவத்தைக் கூறிச் சந்தோஷிக்கும் பாக்கியத்தை இழந்து சுமார் நாலைந்து மாதங்கள் ஆய்விட்டன. யான் கடைசியாக யாத்திரை வரலாற்றை விட்டது, நமது முருகவேள் சந்நிதானத்தில் நடந்துவந்த சித்திரகுப்தன் விசாரணையில் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென்றே நம்புகிறேன். அதை நான் இப்போது தொடர்ந்து கூற ஆரம்பிக்கு முன் யான் இத்தனை மாதங்கள் இருந்த இடம் தெரியாமல் இருந்ததற்குத் தக்க சமாதானத்தை முதலாவதாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கூறாது விடுவேனாயின் உங்கள் மனதும் சமாதானம் அடையாதென்று யான் பூரணமாக நம்புகிறேன். ஒரு சமயம் அதைப்பற்றிக் கேட்க உங்களுக்குப் பிரியமிருக்கிறதோ இல்லையோ என்றாலும், அதைச் சொல்ல வேண்டுமென்னும் விருப்பம் எனக்கு மிகுதியும் இருக்கிறது. ஆகையால் சகோதரர்களே! யான் வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் சாற்றுமிதனைச் சிறிது செவி சாய்த்துப் போற்றிக் கேண்மின் என்பதாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

சென்ற மார்கழி மாதம் நமது முழுமுதற் கடவுளாகிய கந்தவேள் சகோதரர்கள் வாழும் திவ்ய க்ஷேத்திரங்கள் தோறும் யாத்திரை செய்துகொண்டே போய்க்கொண்டிருந்த காலத்தில் எனது சற்குரு ஆச்சிரமத்திலிருந்து ஒரு தந்தி திடீரென எனக்கு வந்தது. பிரித்துப் பார்த்தேன். 'உடனே ஆச்சிரமத்திற்கு வரவேண்டியது' (Start Ashram immediately) என்று உத்திரவிட்டிருந்தது. சற்குருமூர்த்தியின் ஆணையை மறுக்க இயலுமா? உடனே புறப்பட்டு ஆச்சிரமத்தையடைந்து குருமூர்த்தியின் ஆணையினை எதிர்பார்த்து நின்றேன். பார்த்தார்கள் குருமூர்த்திகள். இரவும், பகலும், ஓய்வின்றி, ஊணின்றி, உறக்கமின்றி, நாலைந்து மாதங்கள் வரையில் உழைக்கவேண்டிய ஒரு வேலையைப் பணித்தார்கள். அது என்ன வேலை யென்று தெரிந்துகொள்ள நீங்கள் ஆசைப்படலாம். அப்படி ஆசைப்படுவீர்களாயின் ஏமாற்றத்தைத்தான் அடைவீர்கள். ஏனெனில், எனது குருமூர்த்திகளுக்கும் எனக்கும் மாத்திரம் தெரிந்துள்ள அந்த அந்தரங்கமான விஷயத்தை யான் ஒருபோதும் வெளியிட மனமிசையேன். அவ்வேலையின் தன்மையைப் பற்றி மாத்திரம் ஒருவாறு கூறுவேன்.

மொத்தமாகக் கூறவேண்டுமாயின் அது மிகக் கடுமையான தென்று தான் சொல்லு



வேன். ஒரு சமயம், இத்தகைய கடும்பணியை எனக்கு இரக்கமின்றிப் பணித்த பெரியாரது மனம் கல்லோ என்றும் நினைத்தேன். இவ்வாறு நினைப்பது பெரும் பாவமும், குருத் துரோகமும் ஆகுமென அஞ்சி மறுக்ஷணமே அதை மாற்றிக்கொண்டேன். ஏனெனில் அந்தச் சமயத்தில்,

"மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்
இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிது என்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு"

என்ற நமது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த அரிய பாசுரமானது என் முன்னே வந்து நின்றது. அப்பணியை என்னைத் தவிர ஏனையோரால் ஒரு சிறிதும் ஆற்ற இயலாதென்பதே எனது முடிவான அபிப்பிராயமாகும். அப்பணியின் தன்மையை அறியாத எனது அரும்பெறற் சகோதரர்களாகிய நீங்களும் எனது அபிப்பிராயத்தை மறுக்கவே கூடாது. வெயிலென்றும், பனியென்றும், பகலென்றும், இரவென்றும், உணவென்றும், பசியென்றும், ஓய்வென்றும், உறக்கமென்றும் ஏதாவது உண்டா? சந்திக்கும் நண்பர் வாக்கினின்று உற்சாகமான வார்த்தைதானுண்டா? பிறர் உதவிதானுண்டா? கிடையவே கிடையாது. இரண்டொரு சமயங்களில் இத்தகைய பணியாற்றுவதை விட்டுவிட்டு ஓடி விடலாமா என்றும் யான் நினைத்ததுண்டு. மேலும் விரிப்பானேன்?

இத்தகைய கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு பெரியோரிட்ட பணியை ஆற்றி வரும் காலத்தில், யான் எங்ஙனம் உங்களிடையே வந்து அளவளாவி இருத்தல்கூடும்? இதனாலன்றோ யான் இத்தனை மாதங்களாகத் தலை காட்டாமல் இருந்தேன்? ஆகையால் என்னால் தடுக்க முடியாத அசந்தர்ப்பத்தால் 'செங்குந்த யாத்திரைவாசி' தொடர்ச்சியாக எழுத இயலாமற் போனதற்காக மன்னிக்குமாறு பல தடவையும் உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

## நீலகண்ட படலம்

**வீரவாகுதேவர்:**—சித்திரகுப்த! ஒவ்வொரு ஊருக்கும் நாட்டாண்மைக்காரர்கள் உண்டல்லவா? எல்லோரும் இச்சோணாசலத்தைப் போலவா இருப்பார்கள்?

சித்திரகுப்தன் :—ஸ்வாமி! எல்லோரும் இப்படிப்பட்டவர்கள் என்று சொல்ல என் நா வெழாது. உண்மையிலேயே பெருந்தன்மையும், பெரு நோக்கமும், குலாபிமானமும், வைதீக ஆசாரமும் உள்ள பெரியோர்கள் பலரிருக்கின்றனர். இவர்களுள் சிலர் தம் ஊரை விட்டு வெளியே போக நேருங்கால் தங்களைச் செங்குந்தர்கள் என்று காட்டிக் கொள்ளாது, பிற இனத்தவரெனக் கருதுமாறு நடித்து வருகின்றனர்.

வீர:—சரி, அப்படியானால் இன்னும் இரண்டொரு நாட்டாண்மைக்காரர்களைப் பார்க்கலாமா?

சித்:—ஸ்வாமிகள் சித்தப்படியே. (என்று சொல்லிக்கொண்டே சபாமண்டபத்திற்கு வெளியே நின்ற ஒரு தூதனைப் பார்த்து ஜாடை காட்டினான்.)

உடனே வாயிலுக்கப்புரம் ஒரு கோர ரூபம் தோன்றிற்று. அவ்வுருவத்தின் தோற்றத்தைக் கண்ணால் பார்க்கவும் சப்தத்தைக் காதால் கேட்கவும் சகியாதவனாகி, முருகா வென்று கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டேன். சற்று நேரம் பொறுத்துத் திறந்தேன். பின்னர் கண்டதைக் கூற என் நா வெழவில்லை. ஒருவாறு கூறுகிறேன் கேளுங்கள். அவ்வுருவத்தின் கைகளிலும் கால்களிலும் விலங்கிட்டுச் சங்கிலிகள் பூட்டி, நான்கு தூதர்கள் அவற்றைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். கண்டோர் பயந்து நடுங்கக்கூடிய கோரத் தந்தங்களையும், அக்கினிப் பந்து போன்ற பெரிய கண்களையும், நீண்ட மீசையையும் உடையவர்களாய் ஈட்டி முதலிய கொடிய கூரிய ஆயுதங்களைத் தாங்கிக் கண்களை உருட்டி விழித்துக்கொண்டு நின்றார்கள். இன்னவர்க்கிடையே நின்ற உருவத்தின் தலையில் உதிரம் தோய்ந்து முட்செடி போன்றிருந்த மயிர்கள் அடர்ந்திருந்தன. கண்கள் மூடப்பட்டும், உடல் காயங்கள் நிறைந்தும் இருந்தன. இதற்குமேல் யான் சொல்லமாட்டேன். பின்னர் நிகழ்ந்தவை கீழ் வருமாறு:

சித்:—ஸ்வாமி! (அக்கோர உருவத்தைக் காட்டி) இதோ நிற்கின்றவர் நாட்டு நீலகண்ட முதலியார் என்ற ஒரு பெரிய நாட்டுத் தலைவர். 42 கிராமங்களுக்கு அதிகாரி. இவர் செய்த அக்கிரமங்கள் அளவற்றனவாகும். இவர் இட்டதே சட்டம். யாரும் மறுத்துப் பேசக்கூடாது; பேசுவதும் இல்லை; பேசினாலும் பயனிராது; பெரும்பாலும் தீமையே

நேர்ந்தாலும் நேரும். பேச்சில் முன்னும் பின்னுமாக இழுப்பார். நியாயத்திற்கு ஒரு போதும் கட்டுப்படார். யாராவது அறியாத் தன்மையால் துணிந்து இவரை எதிர்த்து நியாயத்தை எடுத்துக்காட்ட வந்தால் அவர் சொல்லில் ஏதாவது குற்றம் கண்டுபிடித்து நாட்டுத்தலைவர் என்ற ஹோதாவில் தண்டனை விதித்துவிடுவார். ஆகையால் இவர் வாக்கிலிருந்து என்ன பிறந்தாலும் ஆம் ஆம் என்று சொல்லுவதைத் தவிர அல்ல என்று சொல்லுவோர் ஒருவருமே கிடையாது. ஆனால் பின்னால் கூடிக்கூடிப் பேசிக்கொள்வார்கள். ஆளைக் கண்டால் ஆம் என்ற சொல்லேதான் வரும். ஆண்களும், பெண்களும், சிறியோரும், பெரியோரும், பண்டிதரும், பாமரரும் மனம் நொந்து இவருக்கிட்ட சாபத்திற் களவே இல்லை. இவர் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் பலவற்றுள், தேவரீர் திருவுளம் பற்றுவீர்களாயின், இரண்டொன்றை மாத்திரம் சொல்லுகிறேன்.

இந்நீலகண்ட முதலியார் நிறைந்த செல்வமுள்ளவர். ஆயினும் ‘அல்கா நல்குறவு அவாவெனப்படுமே’ என்ற உண்மை வாக்கியத்திற் கிணங்க, செல்வந்தர் என்பதற்கு அறிகுறியாகச் சிந்தையின் நிறைவின்றிச் செல்வத்தை எவ்வழியிலாயினும் மேன் மேலும் பெருக்கவேண்டுமென்ற பேரவாக் கொண்டு இருந்தபடியால் ‘தீவினை விட்டு ஈட்டல் அறம்’ என்பதையும், ‘அறம், பொருள், இன்பம் ஆன அறநெறிவழாமற் புல்க’ என்பதையும் அடியோடு மறந்து, யோக்கியதையும், குலாபிமானமும், இரக்கமும் எள்ளளவுமின்றித் தம்மினத்து ஏழைகளையே பலவாறு வதைத்துத் துன்புறுத்தலாயினர். உள்ளூரிலும் சுற்றுப்பட்டூர் கிராமங்களிலும் உள்ள அல்கா நல்குறவையே தங்கள் பிறவிச் சுதந்தரமாகப்பெற்ற செங்குந்தர்கள் பலவகையிலும் இவரது உதவியை நாட வேண்டி யிருந்தது. இதுவே இவரது ஆணைச் சக்கரம் தடையின்றி ஓடுவதற்கு ஒரு முக்கிய காரணமா யிருந்தது. இதை விரித்துரைப்பதென்றால் காலம் போதாது. குறிப்பாகச் சுருக்கியே சொல்லுகிறேன். சுற்றுப் பக்கங்களிலுள்ள கள்ளுக்கடைகளும் சாராயக்கடைகளும் இவருக்கே சொந்தமானவை. அச்சூழலிலுள்ள செங்குந்தர்களுள் பெரும்பாலார் இவரிடத்துப் பணம் கொடுக்கல் வாங்கலிலாவது, வியாபார சம்பந்தத்திலாவது கட்டுப்பட்டவர்களா யிருந்தார்கள். கள் சாராயயங்கட்குக் காசில்லாத காலத்திலும் கடனாகக் கொடுத்து வரவு செலவுக் கணக்கில் வைத்துக்கொண்டு குடிகளுக்குப் பேருதவி செய்வதாகவும் விளம்பரம் செய்தார். சிவ! சிவ!! அம்மட்டோ! இவ்வளவு குடிப்பவர்களுக்கு இன்னின்னவை (மதுபானத்திற்குத் துணையாகக் கொள்ளும் சில பண்டங்கள்) இலவசமாக வழங்கப்படும் என்று துண்டுப் பத்திரிகைகள் அச்சிட்டுச் செங்குந்தர்கள் வீடுகள்தோறும் வழங்கிக் குடிக்காதவர்களைக் குடிக்கும்படியும், குடிப்பவர்களை அபரிமிதமாகக் குடிக்கும்படியும் தூண்டித் தமது ஆட்சிக்குட்பட்ட குடிகளின் குடியை விருத்தி செய்துவந்த புண்ணியசீலர் இவரேயாவர்!

இவர் நாட்டுச் சம்பந்தமாக நிகழ்த்திய அக்கிரமங்களைக் குறித்து அவ்வூரிலுள்ள ஒரு சிறுவன் ஒரு தினசரிப் பத்திரிகைக்கு ஒரு வியாசம் எழுதியிருந்தான். அதை உணர்ந்த இந் நீலகண்ட முதலியார் உடனே நாட்டுக் கூட்டத்தைக் கூட்டினார். இவரது நாட்டுக்கூட்டத்தில் தீர்மானங்கள் எவ்வாறு செய்யப்படும் என்பதைப்பற்றித் தான் முன்னரே கூறியுள்ளேனல்லவா? ஆனால் ஒரு சிறு பகுதியினர் மாத்திரம் திடசித்தத்தோடு கூட்டத்தில் நியாயம் கிடைக்காவிடில் துணிந்து எதிர்ப்பதென்றே தீர்மானித்திருந்தார்கள். குறித்த தேதியில் 42-கிராமங்களிலுமிருந்து கிராமாதிகாரிகளும், மற்றுமுள்ள முக்கியஸ்தர்களுமாகச் சுமார் 200-பேர் வரையில் வந்து கூடினார்கள். பிரஸ்தாபச் சிறுவன் குற்றவாளியெனக் கூட்டம் முடிவு கட்டுமாயின் கூட்டத்தில் விதிக்கப் படும் அபராதத்தையும் கூட்டத்திற்கான செலவையும் அவனே கொடுக்கவேண்டும் என்கிற விஷயந்தான் தெரிந்திருக்கிறதே—கூட்டத்தில் நிகழ்ந்தவை பின்வருமாறு.

நாட்டு நீலகண்ட முதலியார்:—(பேரூர் தலைவரைப் பார்த்து) ஐயா சொக்கூர் பெரியதனம் சோமசுந்திர முதலியாரே! விஷயம் உங்களுக்குத் தெரியுமல்லவா?

சோ. சோமசுந்திர முதலியார்:—என்ன விஷயம்? நீங்கள்தான் சொல்லுங்களேன், எல்லாருக்கும் தெரியட்டுமே!

ஆக்கூர் ஆறுமுகத்தா முதலியார்:—ஐயா! இந்தப் பூமண்டலத்திலே செங்குந்தர்கள் உண்டானது முதல் இதுவரை நாட்டைக் குறை கூறிப் பத்திரிகைகளில் யாராவது எழுதினதுண்டா?



சாலம்பட்டு சண்முக முதலியார்:—என்ன எழும்பியிருக்கு?

ஆ. ஆறு:—அதிருக்கட்டும். இதுவரையில் யாராவது எழுதினதுண்டா? இரண்டு மாதங்களுக்கு முன் சில மொட்டைகள் சேர்ந்து இவ்வூரில் ஏற்படுத்தியுள்ள வாசகசாலைக்கு வந்த கடந்த திங்கட்கிழமை பத்திரிகையைப் பாருங்கள்.

சா. சண்:—விஷயந்தான் சொல்லுமே!

நா. நீல:—விஷய மிருக்கட்டும். இதுவரையில் நம் நாட்டைக்குறித்து யாராவது பத்திரிகையில் எழுதியதுண்டா?

சிக்கம்பாடி சின்னகுழந்தை முதலியார்:—ஐயா, இப்பூமண்டலத்தில் செங்குந்தர்கள் உண்டானதுமுதல் சமாசாரப் பத்திரிகைகள் அச்சிட்டு வெளிவந்ததுண்டா? இதுவரையிலில்லாமல் சென்ற ஆறு மாதங்களாகத்தானே இத்தகைய பத்திரிகை வெளிகிளம்புகிறது?

நா. நீல:—ஐயா மோடிவாக்கத்தாரே! இது குற்றந்தானே? (இரண்டு முழந்தாள்களுக்கும் மத்தியில் தலையை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தவர் திடுக்கிட்டெழுந்து விழித்தார்).

நா. நீல:—மோடிவாக்கத்தாரே! ஏன், இது குற்றந்தானே?

மோடி வா:—ஆமாம், குற்றந்தான். உங்களுக்குத் தெரியாதா?

நா. நீல:—நல்லதாங்கல் நாகலிங்க முதலியாரே! இது குற்றந்தானே?

ந. நாக:—ஆமாம், குற்றந்தான். என்னை கேட்கிறீங்களே; நாகல்வாடியாரைக் கேளுங்கோ. அவுங்க சொன்னா சர்தான், எதுவாயிருந்தாலும்.

நா. நீல:—ஏனையா நாகல்வாடியாரே! என்ன சொல்றீர்?

நாகல்:-ஆமாம், குற்றந்தான். அறியாதவன்.

நா. நீல:—ஆமாம். சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடன்தான். சிறியோர் பெரும்பிழை செய்தனராயின் பெரியோர் அதை எப்படிப் பொறுக்க முடியும்? அது உமக்குத் தெரியிலையா?

நாகல்:—ஆமா ஆமா, நீங்கதா நாட்டார் சொல்றீங்களே, அதுவேதா சரி. அதெத்தானுஞ் சொன்னே.

நா. நீல:—என்னப்பா குண்டலூர் கோதண்டு! குற்றந்தானே?

பின்னலூர் பேரம்பல முதலியார்:—(எழுந்து நின்று கைகூப்பி வணங்கி) மாட்சிமை தங்கிய நாட்டார் அவர்களுக்கும் மற்றைய கிராமப் பெரியோர்களுக்கும் ஒரு விண்ணப்பம். இப்போது நமது நாட்டைச் சேர்ந்த 42 கிராமங்களிலுமிருந்து சுமார் 200 பேர் வரையில் வந்து கூடி யிருக்கிறோம். எதற்காக? ஏதோ இச்சிறுவன் நாட்டை இகழ்ந்து அதன் பெருமைக்குப் பங்கம் நேரும்படியாக ஏதோ ஒரு பத்திரிகையில் எழுதி யிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைப் படித்துப் பார்த்து விஷயத்தை உய்த்துணர்ந்து சரியா தப்பா என்று தீர்மானித்துத் தப்பாயிருக்குமாயின் நமது இன வழக்கப்படித் தக்க தண்டனை விதிக்கவேண்டும். அதற்காகத்தான் இப்போது கூடி யிருக்கிறோம். நாட்டாண்மைக்காரர், ‘நாட்டைப்பற்றி எழுதியது குற்றந்தானே, குற்றந்தானே’ என்று கேட்டுக் கொண்டே வந்தார். அவர்களும் ‘குற்றந்தான் குற்றந்தான்’ என்று சொல்லிக் கொண்டே வந்தார்கள். இப்படியே மற்றவர்களும் சொல்லி இச்சிறுவனைக் குற்றவாளி எனத் தீர்மானித்துத் தண்டிப்பதுதானா நாமெல்லாம் ஒன்று கூடிச் செய்யும் நியாயம்? இதுவரையில் ‘குற்றம் குற்றம்’ என்று சொல்லிக் கொண்டே வந்த பெரியதனக்காரர்களுக்காவது, இனியும் குற்றந்தான் என்று சொல்லத் தயாராக இருப்பவர்களுக்காவது பத்திரிகையில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியுமா? அது எவ்வாறு குற்றம் என்பதை அறிந்து கொண்டார்களா? நாட்டு ஆட்சியும் நீதியும் நன்றாயிருக்கிறது! இந்த நாட்டைப்பற்றி எழுதினது குற்றந்தான். ஐயா நல்லதாங்கல் நாகலிங்க முதலியாரே! குற்றமென்று சொன்னீர்களே, பத்திரிகையில் என்ன எழுதி யிருக்கிறதென்று உமக்குத் தெரியுமா? அதில் என்ன குற்றம் கண்டுபிடித்தீர்கள்? நாட்டைப் புகழ்ந்து எழுதியிருக்கிறதா, இகழ்ந்து எழுதி யிருக்கிறதா தெரியுமா?

ந. நா:—படித்துக் காட்டினால் தானே தெரியும்?

பி. பே:—மோடிவாக்கத்தாரே! உங்களுக்காவது விஷயம் தெரியுமா, குற்றந்தான் என்றீர்களே?

மோ:—அதை யார் படிச்சி பாத்தா? நாட்

டார் சொன்னால் சரிதான். அவுங்க தப்பா சொல்லுவாங்க ?

**நா. நீல:**—(பி. பேரம்பல முதலியாரைப் பார்த்து) இது என்ன நாட்டுக் கூட்டமா? பிள்ளைகள் பள்ளிக்கூடமா ? இத்தனை பேர் குற்றமென்று ஒத்துக் கொண்டபோது உனக்கு மாத்திர மென்ன? நீதான் இந்தக் கூட்டத்தில் மேதாவிபோ லிருக்கிறது!

**பி. பே:**—நாட்டார் பார்த்து அரை வீசைப் புளியை 'ஒரு வீசைதான் இது' என்று சொன்னாலும், தட்டு மேலே இருந்தபோதிலும், சமமாகத்தான் இருக்கிறது என்று சொன்னாலும் நாங்கள் எல்லோரும் அதைச் சரி என்று தான் ஏற்றுக் கொள்ள வேண்டியதுபோ லிருக்கிறது!

**நா. நீல:**—ஐயா எல்லா கிராமத்தாரையுந் தான் கேட்கிறேன், இவன் செய்தது குற்றந் தானே ?

**பெரும்பாலோர்:**—குற்றந்தான். குற்றந் தான்.

**சிறுபான்மையோர்:**—படித்துப் பார்க்க வேண்டும்.

**நா. நீல:**—ஓஹோ ! பின்னவூரிலிருந்து வந்த மூன்று பேர்தான் படித்துப் பார்க்க வேண்டுமா? நீங்களெல்லாம் நிரம்பப் படித்தவர்கள் ! இனி யார் மறுத்துப் பேசினாலும் அதுவும் குற்றமாகக் கருதப்படும். தீர்மானம் சொல்லுகிறேன், கேளுங்கள். இந்தக் கூட்டத்திற்காக ரூபாய் 250 செலவாகி யிருக்கிறது. குற்றத்திற்காக ரூபாய் 50 அபராதம் விதிக்கப்பட் டிருக்கிறது. ஆக மொத்தம் ரூபாய் 300 இப்போதே கட்டிவிடவேண்டும்.

**குற்றம் சாற்றப்பட்ட சிறுவன்:**—நமது மாட்சிமை தங்கிய நாட்டாண்மையும் நீடூழி வாழுமாக! முருகப்பெருமான் உங்களுக்கு என்றும் துணை இருப்பாராக. அந்தோ பரிதாபம்! என்னைத் தண்டித்ததற்காக யான் ஒரு சிறிதும் அஞ்சவில்லை. நமது நாட்டின் பெருமையை இன்றுதான் நன்குணர்ந்துகொண்டேன். இத்தனைபேர் கூடியிருந்தும் குற்றம் சாட்டப்பட்ட எனது வாய்மொழியைக் கேட்க உங்களில் ஒருவருக்காவது தோன்றவே இல்லை. விசாரித்துக் குற்றம் சாற்றுவீர்களாயின், அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். அதிகம் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆயினும் நீங்கள் செய்த தீர்மானத்தையும் விதித்த அபராதத்தையும் பிறவற்றையும் யான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். உங்கள் நாட்டுக் கட்டுப்பாட்டையும் நான் நிராகரிக்கிறேன்.

இதற்குள் கூட்டத்தில் பலர் பலபடியாகப் பேச ஆரம்பித்துப் பெருங் கூச்சலாயிற்று. கூட்டம் கலைந்துவிட்டது. சிறுவனைச் சேர்ந்தவர்கள் ஒரு கக்ஷியானார்கள். நாளடைவில் அந்நாட்டைச் சேர்ந்த 42-கிராமங்களும் இரு கக்ஷிகளாகப் பிரிந்தன.

(தொடரும்)

---

# மதுரை திருவாப்புடையார் கோயில் செங்குந்தர் யாவர்க்கு மொரு விஞ்ஞாபனம்

தற்காலத்தில் நமது இந்திய நாட்டில் ஒவ்வொரு வகுப்பினரும் முன்னேற்ற மடைவதற்கான வழிகளில் மிகவும் முனைந்து வேலைசெய்து வருவது யாவரு மறிந்ததே யாகும். நம் சென்னை மாகாணத்துள்ள செங்குந்த மக்களும் தாமிருக்கும் மிகக் கேவல நிலையைக் கருதித் தம் சமூகமும் ஏனைய வகுப்பினரை யொத்துச் சீர்திருத்தமுற வேண்டுமென ஆங்காங்குப் பல செங்குந்த பிரபலஸ்தர்கள் சென்ற ஐந்து, ஆறு ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகின்றனர். அதன் பயனாக நம் குல மக்கள் மிகுதியாகவுள்ள பல இடங்களில் அவர்கள் கைக்கொண்டிருந்த பல அநாகரீகச் செயல்கள் கைவிடப்பட்டன. உதாரணமாக மதுபானஞ் செய்தல், மாமிசமுண்ணல், பழைய குருட்டுப் பழக்க வழக்கங்களை யனுசரித்தல் இவை யெல்லாம் ஒழிக்கப்பட்டுவிட்டன. கல்வி, ஒழுக்கம், ஆசாரம், நாகரிகம் போன்ற துறைகளில் அவர்கள் தினமும் அபிவிருத்தி யடைந்துகொண்டு வருகின்றனர்.

ஆனால் சென்னை மாகாணத்திலேயுள்ள பெரிய நகரங்களில் இரண்டாவதாயுள்ளதும் கல்விக்கே பிறப்பிடமாயுள்ளதும் நாகரிகத்தில் தலைசிறந்து விளங்கும் பட்டணங்களி லொன்றெனச் சொல்லப்படுவதுமான இம்மதுரையம்பதியி லுள்ள செங்குந்த மக்களின் நிலை எவ்வாறுள்ளதென ஒரு விநாடிப் பொழுதேனும் சிந்திக்கின் உண்மை விளங்காமற் போகாது. அந்தோ! என்னென்று சொல்வது! பரிதாபம்! பரிதாபம்! கல்வியிலோ, ஒழுக்கத்திலோ, ஆசாரத்திலோ, அல்லது நாகரிகத்திலோ, வேறு ஏதாவதொன்றிலோ இவர்கள் முற்பட்டிருக்கின்றனர் என்று யாரேனு மொருவர் தைரியத்துடன் முன் வந்து கூற முடியுமாவெனக் கேட்கிறோம்?



கல்வியில் இவர்கள் முன்னேற்றமோ சொல்ல வேண்டுவதில்லை. ஹா ! நாக் கூசுகின்றது. பின் ஒழுக்கம், ஆசாரம், நாகரிகமென்பது இவர்களிடம் முயற்கொம்பாகவே யிருக்கின்றது. பின் எத்துறையில் இவர்கள் முக்கியஸ்தர்களாகப் பாவிக்கப்படுகின்றன ரென்றால் பழைய மூடப் பழக்க வழக்கங்களைக் கிஞ்சித்தும் கைநழுவ விடாது அப்படியே அனுசரித்து வருவதிலேயே யாகும். மதுவருந்துதல் நிற்கவில்லை. மாமிச முண்பது தொலையவில்லை. சுவாமியின் பேரால் வருடமொன்றுக்கு இரண்டு மூன்று ஆடுகளும், நான்கைந்து கோழிகளும் பலி கொடுப்பது தவறவில்லை. இவ்வித அநாசாரங்க ளிருக்கும்பொழுது ஒழுக்கம், நாகரிக மென்பவை தாமே குதித்தோடி வருமா? வாரா; ஒரு நாளும் வரா.

தவிர, நமது செங்குந்த சமூக சம்மந்தமான நூல்கள் யாவற்றினும் இன்னும் கந்தபுராணம் போன்ற காவியங்களிலும் செங்குந்தர்கட்கு முருகன் ஒருவனே வழிபடு தெய்வமெனக் கூறப்பட்டிருக்கின்றது. இதை யொட்டியே இன்றும் நம்மவர்களிற் பெரும்பாலோர் வருடந்தோறும் பழனி, திருப்பரங்குன்றம் போன்ற ஸ்தலங்கட்குக் கூட்டம் கூட்டமாகச் சென்று அவனருள் பெற்று வருகின்றனர். இஃதிங்ஙனமாக, நம்மவர்கள் எவ்வாறு காளி, முனியாண்டி, கொங்கன், சங்கன், மாரிபோன்ற குட்டித்தேவதைகளைக் கைக்கொண்டார்க ளென்பது விளங்கவில்லை. இவைகள் யாவும் இடையில் வந்தவைக ளென்றே தோன்றுகின்றது. இவைகட்கு வருடந்தோறும் கள், சாராயம் வைப்பது, ஆடு கோழி வெட்டுவது போன்றவற்றைச் செய்வதினாலேயே நாமும் இப்பிரசாதங்களை யுண்டு அவற்றை நீக்க முடியாத நிலைமையி லிருக்கின்றோம். இதை யொட்டி வருடமொன்றுக்குச் செலவாகும் ரூ. 200, 250. இம்மாதிரி நம் கிராம தேவதைகளான எம தப்பன் முனியாண்டியும், எமதம்மை காளிகாதேவியும் சென்ற நூறு வருடங்களாக விழுங்கிய பண மெவ்வளவு? ரூ. 20,000 25,000. நாமடைந்த பலனெவ்வளவு? (0) பூஜ்யம். இத்துடனில்லாது பிற வகுப்பினரால் இழிவாகவும் கருதப்படுகின்ற நிலைக்கும் வந்தது தான் கண்ட பலன். என் செய்வது? எல்லாம் கல்வியில்லாக் குறை யென்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வித மோசமான நிலையில் நாமிருந்துகொண்டு யாவராலும் வெறுத்துத் தள்ளக்கூடியதும் எள்ளி நகையாடக் கூடியதும் நாரிகமற்றதுமான காரியமொன்று நம்மவர்களால் சமீபத்தில் நடத்தப்படப்போவதாகக் கேள்விப்படுகின்றோம். இஃது உண்மையா யிருப்பின் நம் சமூகத்தைப் பிணித்துள்ள ஏழரை நாட்டான் இன்னும் விலகவில்லை எனத்தான் கூறவேண்டியிருக்கிறது. இந்தத் தெய்வ கைங்கர்யமான "மூளைக்கொட்டு" போட வேண்டுமென எண்ணியுள்ளவர்கள் யாவரும் மோக்ஷமடைவதற்கான வழிகளில் இது வொன்றெனக் கருதி யிருக்கிறார்களா? என்னவோ அறிகிலோம் இம் மூளைக்கொட்டு நாளில் நம்மவர்கள் யாவரும் காலில் மணிகளைக் கட்டிக்கொண்டு, கழுத்தில் மாலைகளைப் போட்டுக்கொண்டு, தலையில் கூடைகளைப் போன்று பெரும்பாகைகளைக் கவிழ்த்துக் கொண்டு பலவித ஆட்டங்களை ஆடுவதுடன் பாடுவதும் பிறர் பார்த்து நகைப்பதற்கு இடந்தருஞ் செய்கையாகு மென்பது வெளிப்படை. இவ்வநாகரிகம் சென்ற பத்தாண்டுகளாக நம்மை விட்டகன்றிருந்ததென யாங்கள் சந்தோஷித்திருந்தோம். ஆயினும் இவ்வாண்டு வருந்தற்குரியதாகும்.

நம் கிராம தேவதைகளைக் கும்பிடுதற்குத் தலைக்கட்டு ஒன்றுக்கு ரூ. 1—8—0 வசூலித்த ஒரு வாரத்துக்குள் மறுபடியும் தலைக்கட்டு ஒன்றுக்கு 40, 50 ரூ. செலவேற்படுமாறு செய்வது நியாயமற்றதாகும். முதலில் போட்ட வரி ரூ. 1—8—0 யை இன்னும் பாதிப்பேர் கொடுத்தும் கொடுக்காத நிலையிலுமே இருக்கின்றனர். ஏன்? காலநிலையோ மிக மோசமாயுள்ளது. தொழிலோ கிடையாது. வருமானமோ நிறைந்த பாக்கியம்! ஏழை மக்கள் எங்கிருந்து கொடுப்பார்கள்? மிக்க அல்லற்படுகிறார்கள். அவர்களிடும் கூக்குரலும், அவர்கள் கண்களிலிருந்து வழியும் நீரும் இன்னும் நின்றபாடில்லை. பணக்காரர் இரண்டொருவரைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் ஒன்று மறியாதவர்போ லிருக்கலாம். சரி, எவ்வாறே வசூல் பண்ணிய பணத்தைக் கொண்டாவது காரியத்தை முடிக்கிறார்களா வென்றால் அதிலும் சச்சரவு.

இவ்வளவு தொல்லைகளுடன் நமக்கு அதிகச் செலவையும் இழிச் சொல்லையும் கொண்டுள்ளதும ஒரு காரியத்தில் ஏன் ஈடுபடல் வேண்டுமெனத் தான் கேட்கிறோம். ஆகவே, பெரியோர்களே! உங்களை யாங்கள் அதிக பணிவுடன் கேட்டுக்கொள்வது யாதெனில் நமது சமூக முன்னேற்றத்திற்கு ஒரு பெரும் தடைக்கல்லாய் நிற்கும் இக்காரியத்தை இத்துடன் ஒழித்துவிட வேண்டுமென்பதே யாகும்.

**இளைஞர்கட்கோரு வார்த்தை:**

எம தன்பார்ந்த இளைஞர் சிகாமணிகளே! நாகரிக மிகுந்துவரு மிக்காலத்தில் நீங்களும் இதில் ஈடுபட் டிருக்கின்றீர்களெனக் கேட்க எம் மனம் துன்புறுகின்றது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சமூகமும் தமதடிமைத்தனத்தினின்றும் நீங்கிச் சுதந்தர வாழ்வு பெற்றது இளைஞர்களாற்றான் என்பது உலகப் பிரசித்தம். இளைஞருலகம் இவ்வாறிருக்க, நீங்கள் மட்டும் ஏன் அடிமைத் தன்மைக் காதாரமாக விருக்கும் இச்செய்கையி லீடுபட விரும்புகிறீர்கள்? இது உங்கட்கு அநாகரிகமாகத் தோன்றவில்லையா? உங்கள் தாய்மார்களையும் சகோதரிகளையும் கழுத்தில் மாலையிட்டுக் கையில் வலதாடி கொடுத்து ஆட்டமிடச் செய்து தெருத் தெருவாக ஊர்வலம் வருவது உங்கட்கு அவமானமாக வில்லையா? பெரியோர்கள் பழைய

குருட்டு வழக்கங்களைக் கைவிடமாட்டார்கள். அவர்களைப் பின்பற்ருது நாமல்லவோ நமது சமூக முன்னேற்றத்திற்கும் பெண்களின் சீர்திருத்தத்திற்குமான மார்க்கத்தில் பாடுபடவேண்டும்? இது போழ்து நாம் செய்யவேண்டிய வேலை அதுவாயிருக்க, வீணுக நம்மைக் கீழ் நிலைக்குக் கொண்டுவரும் ஒரு காரியத்திற்கு உடற் சிரமத்துடன் பணத்தையும் விரயம் செய்யவேண்டுமோ? ஐயோ! கூடாது! கூடாது!! வாலிபர்களே நீங்கள் மற்றவர்கட்கு அறிவுறுத்த வேண்டியதிருக்க, நீங்களே இதில் ஈடுபடுவதானது 'வேலியே பயிரை மேய்வதுபோ'லாகும்! சிலர் உங்களைத் தூண்டி விடலாம். ஆனால் அவர்களின் அநீதியான செய்கைக்கு இடங்கொடுக்கலாகாது.

எனவே, நீங்கள் இக்காரியத்தில் சிறிதும் ஈடுபடக் கூடாதெனப் பன்முறையும் கேட்டுக்கொள்கிறோம். பின் புறக்கணிப்பீராயின் நம் சமூகத்திற்குப் பிறரால் சூட்டப்பெறும் "பழிச்சொல்மாலை" உங்களைச் சேரக்கூடுமென எச்சரிக்கிறோம்.

இந்த நோட்டீசைக் கண்டவுடன் பல அன்பர்கள் தம் பொறுமை யிழந்து எங்கள் மீது சீறி விழுவதுடன் வசை மாரியும் பொழிவர். அதற்கு யாங்கள் அஞ்சப்போவதில்லை. நாங்கள் சொல்வது உண்மையெனப் பட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையேல் தள்ளி விடுங்கள்.

"பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினனே" என்ற ஆன்றோர் வாக்கைக் கடைப் பிடியுங்கள். விழிமின்! எழுமின்!! மூலைக்கொட்டை ஒழிமின்!!!

இதன் பிரதிகள் பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

தங்கள் சிறுவர்கள்,
ச. மாணிக்கம், வீ. வீரபத்திரன்,
க. சண்முகவேலு.

---

# காமாட்சி யாத்தா! கண்ணைத் திறப்பாயா?

(ஒரு முறையீடு)

புஞ்சைப் புளியம்பட்டியிலுள்ள கைக்கோளர்கள் கஞ்சிக்குச் செத்துக் கடன்காரர்களா யிருந்தார்கள். மகாத்மா காந்தி யடிகளின் உதவியால் நாலைந்து வருஷமாய்க் கதர் நெய்து கஞ்சி குடித்துக் கடனும் கட்டி, இப்போது வில்லை வீடு, மெத்தை வீடு கட்டிச் சுகமாய் இருக்கிறார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் ஐம்பதினாயிரம் நெசவுக்காரர்கள் இன்று கஞ்சியின்றித் தவித்திருக்க, கதர் நெசவு செய்யும் கைக்கோளர்கள் மட்டும் வயிறார உண்டும், சீட்டு நாட்டு போட்டும், சீராகக் கஞ்சி குடித்தும் வருகிறார்கள்.

இக்கைக்கோளர்கள் கஞ்சிக்கில்லாமல் தத்தளித்துக்கொண் டிருந்தபோது அவர்களுக்குக் கந்து வட்டிக்குக் கடன் கொடுத்தும், வீட்டை அடகு எழுதிப் பணம் பறித்தும், பொட்டி நூல் கட்டொன்றுக்கு ஒரு ரூபாய் இலாபம் வைத்து விற்றும் பணக்காரர்களாகி வந்த சில அற்ப மனிதர்களுக்கு நாலைந்து வருஷமாய்ப் பிழைப்பில் மண் விழுந்து விட்டது. இதற்காக அவர்கள் கதர் நெய்வோரிடம் பொறாமைப்பட்டு அவர்கள் மீது கடிபட்ட நாய்போல் சீறி விழுகிறார்கள். அவர்களது சூழ்ச்சியை அறியாத சில காலிகளும் புத்தியில்லாமல் சப்தம் போடுகிறார்கள்.

புளியம்பட்டியிலுள்ள அகில பாரத சர்க்கா சங்கத்தார், ஏழை நெசவுக்காரர்கள் தங்கள் ஓய்ந்த நேரத்திலே தினம் இரண்டொரு மணி நேரம் படித்து முன்னுக்கு வரட்டும் என்ற நல்லெண்ணத்துடனும் பரோபகார சிந்தையுடனும் "மாதம் முப்பது ரூபாய் இனுமாகத் தருகிறோம். ஒரு இலவசப் பள்ளிக்கூடம் வைத்துப் படித்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள்.

காமாட்சி யாத்தா பேரைச் சொல்லி நெடுங்காலமாகக் கூலிக்காரரிடமிருந்து பாவடிக் காசென்றும், புள்ளார் குட்டு ஏலமென்றும், செண்ட் எட்டு ரூபாய்க்கு விற்பதாகச் சத்திய மங்கலம் டிப்டி தாசில்தாரிடம் வாக்களித்துக் காட்டைக் கிரயம் பண்ணி ஐந்து செண்ட் நிலத்தை ஐந்நூறு ரூபாய்க்கு ஏலம்போட்டு 50 ரூபாயுக்குக் கிரயமெழுதிச் சர்க்காரை ஏமாற்றியும், சப் ரிஜிஸ்தரார் ஆபீசு கட்டிட வாடகை வாங்கியும், இன்னும் பல விதத்தும் பலகாலம் வசூலித்த பணங் காசை யாதொரு கணக்கும் வழக்கும் கேட்பாரற்றுத் தம் சொந்தப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும்……… ……………………, ………………… முதலியவர்களை அணுகிக் கதர் நெசவு செய்பவர்கள் "எங்கள் பள்ளிக்கூடத்துக்காக எங்கள் பொதுப் பணத்திலிருந்து எங்கள் பொது இடத்தில் 100 ரூபாயில் ஒரு சாலை போட்டுக் கொடுங்கள். பள்ளிக்கூடச் செலவுக்கு மாதம் முப்பது ரூபாய் அகில பாரத சர்க்கா சங்கக் கதர் கடையிலிருந்து கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்" என்று கேட்டதற்கு ……… ……………………………………………………… முதலானவர்கள், "உங்கள் கதர் கடைக் கவுண்டன் சொல்வதெல்லாம் அக்கிரமம். நீங்கள் கள்ளுக்கடை மறியலுக்குப் போனது முதலாவது தப்பு. இரண்டு கட்டடம் கட்டி எட்டு வாத்தியார் போட்டுச் சர்க்கார் பள்ளிக்கூடம் இருக்கையில் தனிப் பள்ளிக்கூடம் என்னத்துக்கு? இன்று பள்ளிக்கூடம் கட்டச் சொல்வான். [illegible]



# "ஒழுக்க நூல்"

[திரு. எஸ். லக்ஷ்மிரதன் பாரதி எம். ஏ., பி. எல்., அவர்கள்]

(சென்னை கிறிஸ்துவக் கலாசாலைத் தலைவரும், தத்துவ சாஸ்திரத்தில் நிபுணரும், தலைமைப் போதகாசிரியருமான

Dr. A. G. Hogg. M. A., D. Litt.

அவர்களது உபந்யாச முறையைத் தழுவி எழுதப்பட்டது.)

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

14-ம் அதி : 1—(குறள்.)

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

4-ம் அதி : 1—(குறள்.)

## ஒழுக்க நூலை ஆராயு முறை

நாம் ஒழுக்க நூலை ஆராயப் புகுங்கால், எந்த முறையைக் கையாண்டு இத்துறையி லிறங்குதல் பொருத்தமென முதலில் துணிதல் வேண்டும்.

ஒரு நூல் எழுதுங்கால், அந்நூலில் எடுத்தாளப்பட்ட விஷயத்தை (Subject Matter) முதன்மையாக வரையறுத்துக் குறிப்பிடுதல் நூன் மரபு. ஒழுக்கம் என்னும் சொல்லின் பொருளறியாத் தமிழர் இலர். அது ஒழுங்கான, நேர்மையான, நன்னடத்தை எனப் பொருள் தரும். ஆனால், "ஒழுக்கம்" என்ற சொல் குறிப்பிடும் விஷயத்தைப்பற்றிக் கல்வி, அநுபவங்களினாலாகிய அறிவொடு விசாரணை செய்து ஆராய்ந்து மெய்யுணர்ந்த பின்னரே அச்சொல்லை வரையறுத்துக் கூறுதலும், அப்படிக் கூறுவதை மற்றோர் தெரிந்து ஒப்புதலும் இயலும்.

எனவே, நூன் மரபுபற்றிய வழி செல்லாது, நாம் நமது வாழ்க்கையின் அநுபவத்தில் ஒழுக்கத்தைப்பற்றிய விசாரணை இயற்கையாக எழுகின்ற வழி செல்வோம். நம் உலக வாழ்விலே பலகாலும், நமக்கு இடுக்கண்ணுற்ற அல்லது நெருக்கடியான சமயங்களில் "இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்?" "என்ன விதமாக நடத்தல் வேண்டும்?" என்று தீர்மானிக்கும்படி நேரிடுகின்றது. அந்தச் சமயங்களில் நாம் என்ன செய்கின்றோம்? ஏதாவதொரு பொதுப்பட்ட ஆன்றோர் அருளிய அல்லது பழமையான மொழியை (Moral Maxim) விசாரணையின்றிக் கையாண்டு நாம் செய்யப் புகும் காரியம் அதற்கிணங்கி இருக்கின்றதா என்று பார்க்கிறோமா? அப்படி நாம் செய்வோமாயின், 'இது அறம், இதுவே நம் கடமை, இதுவே நம் தர்மம்' என நாம் முடிவுறும் தீர்மானங்களின் உண்மையும், அவைகள் நம்மைக் கட்டுப்படுத்தக் கூடிய தன்மையும், (Validity) நம்மால் விசாரணையின்றி எடுத்துக்கொண்ட ஆன்றோரின் அல்லது பழமையான மொழிகளின் உண்மையைப் பொருத்தும், அவைகள் நம்மைக் கட்டுப்படுத்தக் கூடிய தன்மையைப் பொருத்துமே அமைவதாகும். நமக்கு இந்நீதி மொழிகள் யார் உண்டாக்கித் தருவார்கள்? நீதி நூல் வல்லார்களும் தர்ம சாஸ்திர நிபுணர்களுமா? அப்படியானல் அவர்கள் மனித வர்க்கத்திற்கு ஒழுக்கம் கற்பிக்கும் தலைவர்களாக நிரந்தரமாக இருக்கவேண்டுமே? அப்படி இருக்கின்றார்களா? சாதாரண மனிதர்களாகிய நாம் விசாரணை யின்றி, நமது ஒழுக்கத்திற்கு அறிகுறியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கருதுகிற அறமொழிகளின் உண்மையையும், அவைகள் நம்மைக் கட்டுப்படுத்தும் தன்மையை

---

(252-வது பக்கத் தொடர்ச்சி)

பந்தல் வைக்கச் சொல்வான். அடுத்த நாள் முண்டைகளுக்குக் கல்யாணம் பண்ணச் சொல்வான். அதற்கடுத்த நாள் பள்ளர் பறையரைக் கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சொல்வான். அவனுக்குக் கொஞ்சங்கூட இடம் கொடுக்கக்கூடாது. எல்லோரும் அந்தக் கடையில் கணக்கு முடித்துக் கொண்டு வந்து விடுங்கள்" என்று சொன்னார்களாம்!

இவ்வளவு கட்டைப் புத்தியுள்ள "பெரிய மனிதர்கள்" காமாட்சி யாத்தா கோயில் கட்டப் போகிறார்களாம்! யார் பணத்தில்? கூலிக்காரரை வஞ்சித்துச் சம்பாதித்த பணத்தில்! காமாட்சி யாத்தா நீ சத்தியுள்ள தெய்வமானல், நீ இருப்பது மெ[ய்?]யானல், இவர்களுடைய கண்ணைத் திறப்பாயா?

திரு. ச. அ. ராமசாமி முதலியார்.

யும், நமக்கு இந்தத் தர்ம சாஸ்திரிகள் எவ்வாறு நிரூபிக்கக்கூடும்? அவைகளினும் அரிய நுணுக்கமான அறமொழிகளோடு, அவைகளை இணங்கச் செய்வதினாலா? இப்படியாக ஒரு அறமொழியின் உண்மையை அது அதனினும் அரிய பெரிய அறமொழியொடு இணங்குவதினால் நிரூபித்துக் கொண்டே போவோமானால் எவ்வளவு தூரம்தான் போவது? இதற்கோர் முடிவுண்டோ? எல்லையுண்டோ? அல்லாத வரை வேதாந்த சித்தாந்த துணிவுகள் மூலம் நிரூபிப்பதா? வேதாந்த சித்தாந்த துணிவுகளோ நிலைத்தன நிலையாதன பற்றிய தீர்மானங்களாவன. 'நிலைத்திருப்பது' என்பதிலிருந்து 'இப்படித்தான் செய்யவேண்டும்' என்பதை எப்படி நாம் கிரகித்து நிரூபிக்கக்கூடும்? இவ்வளவும் போதாதென்று ஒழுக்கம் குறிப்பிடும். ஒரு பொதுவான உயிரற்ற (Abstract) அறமொழி, ஒவ்வொரு சமயத்திலும் நாம் இப்படித்தான் நடக்கவேண்டு மென்பதைக் காட்டுவதற்குச் சக்தியுடையதாமா? இன்னும் இத்தகைய அறமொழி நம்மை வற்புறுத்திக் கட்டாயப்படுத்தவாவது அல்லது நிர்ப்பந்தப்படுத்தி ஒன்றைச் செய்யாது தடுக்கவாவது கூடிய வலிமை யுடையதா? அல்லது அது நம்மை ஒரு வழியாக நடப்பதற்கு மதிமட்டும் கொடுப்பதா?

மேற்கண்ட வினாக்கள் சுட்டும் வழி சென்று விசாரிப்போமாயின், நாம் ஒழுக்க நூலை ஆராயும் முறையை உணர்தல் எளிதாகும். ஒழுக்கத்திற்கும் அறிவிற்கும் எவ்வளவு சம்பந்தமுண்டு? ஒழுக்கம் அறிவிற்கு அடிமைப்பட்டதா? அன்றி வேறுபட்டதா? என்பதைத் தெரிந்து தீர்மானிக்க எழும் ஆசையும் ஆவலுமே ஒழுக்க நூலுக்குக் காரண பூதமாக இருக்கின்றன. இந்த அவா பற்றி எழும் முயற்சி இருவழிகளில் செல்லக்கூடும்: (1) ஒருவழியில் அம்முயற்சி தற்பொழுது உலகத்தில் நின்று நிலவும் அறமொழிகளும், செவ்விய குணங்களெனக் கருதப்படுவனவும், எவ்விதத்தாலும் அறிவுக்குப் பொருந்தியனவென்பதை, நிரூபிக்கும் வழியிற் செல்லலாம்; அல்லது (2) பொதுவாக அறம் அல்லது ஒழுக்க மென்பது ஒருவன் தன் நடக்கையில் அறிவுடனொழுகலன்றிப் பிறிதன்று எனக் காட்டுதலாகும். இவைகளில் பின் கண்ட வழிப்போதலே நம் விசாரணையின் நோக்கமாகும்.

நாம் ஒன்றிற்கொன்றுள்ள வேறுபாட்டைத் தெளிவாக உணர்த்துமாறு மேற்கண்ட இருவழிகளில் செல்லக்கூடிய முயற்சியைக் குறிப்பிட்டோமாயினும், 'ஒழுக்கநூலாசிரியர்களில் எவரேனும் வாய் கூசாது, எந்தக் காலத்திலும் அந்தந்தக் காலத்தில் காணப்படும் ஒவ்வொரு அறமொழியும் உண்மையானதென்றும் யாரையும் கட்டுப்படுத்தக் கூடியதென்றும் நிலைநாட்ட முன்வர மாட்டார்கள். பழமையிற் பைத்தியம் கொண்ட அறநூல் அறிஞரும் தம் காலத்தில் நிலவுகின்ற ஒழுக்க நடைகளைப் பேணிக் காத்தலோடு சிறிதளவு அன்புபற்றிக் குறைத்துப் பேசுதலும் காணலாம். எனவே, அவ்வறிஞரும் கூட ஒழுக்கம் என்ற விஷயத்தை விசாரணை செய்துணர்வதின் மூலமாகத் (1) தம் காலத்திய அறமொழிகளை அறிவிற் கியைந்தனவெனப் பாதுகாத்தல், அல்லது (2) அறிவிற்கியைவனவான பாதுகாக்கத் தகுந்த அறமொழிகளைக் கண்டுபிடித்தல். இவைகளே தாங்கள் மேற்கொண்ட கடமையாகக் கூறுவர். இவர்களுள் பழமையே பெரிதெனக் கொண்ட பெரியார், தம் காலத்திய ஒழுக்கத்திற்குச் சிறிதளவே வேறுபட்டதும் அறிவிற்குப் பொருத்தமானதெனச் சொல்லக் கூடியதுமான ஒழுக்கத்தைப் பற்றிய தீர்மானங்களாலாகிய, ஒரு அற முறையைக் கொள்வார்கள். ஆனால் தீவிரமாகச் சிந்திப்பவர்களோ, ஏதாவதொன்றை முதற் கொள்கையாகவோ, முடிவாகவோ பின்பற்ற வேண்டிய மனோரத சிருஷ்டியாகவோ, எடுத்துக்கொண்டு அதிலிருந்து ஒழுக்கத்தைப் பற்றிய தீர்மானங்களாலாகிய தொகுதிகளை (A system of moral Judgment) தர்ம சாஸ்திரக்காரர்களென நிர்ணயிப்பார்கள். மனு முதலிய தர்ம சாஸ்திரக்காரர்கள் செய்த நீதி நூல்கள் இத்தகையன. இவைகள் மனிதருடைய ஒழுக்கத்தைப் பொருத்த அந்தக் காலத்திய கருத்துக்களினின்று பெரிதும் வேறுபாடுடையனவா யிருப்பதைப் பரக்கக் காணலாம். எனவே, பல்வேறு ஒழுக்க ஆராய்ச்சி நிபுணர்கள், அறிவிற் கொத்ததெனத் தாம் நிரூபித்து நிறுவ வந்த ஒழுக்கத்தைப் பற்றிய தீர்மானங்களாலான திரட்டுக்களில் உள்ள கருத்துக்களுள் பெரிய பெரிய வேறுபாடுகள் நிரம்பிக் கிடக்க இடமிருக்கிறது. அறிவிற் கியைந்ததெனக் கூறும், ஒழுக்கத்தைப்பற்றிய தீர்மானங்களின் தொகுதியிலுள்ள கருத்துக்களுள், பிளவுபட்ட வித்தியாச வேறுபாடுகள் எவ்வளவு காணப்படி



னும், மேற்கூறியவாறு முதல் வழியிற் செல்லும் அறிஞர் யாவருள்ளும் ஒரு பொதுவான தன்மையுண்டு. அதாவது அவர்களெல்லோரும், தம் காலத்தில் நிலவி வருகின்றதானதோ அல்லது தாமாகக் கண்டு பிடித்ததால் ஏற்பட்டதானதோ, யாவரு மனுசரிக்கக்கூடியதொரு ஒழுக்கத்தைப் பற்றிய தீர்மானங்களைச் சேர்த்துத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒழுக்க முறையின் உண்மையையும் அது நம்மைக் கட்டுப்படுத்தக் கூடிய தன்மையையும் உலகத்திற்குக் காட்ட முயலுவார்கள் என்பதே.

இத்தகைய ஒழுக்க விசாரணை செய்வதின் கருத்திற்கு மாறுபட்ட மற்றொரு வழியை நாம் காட்டியிருக்கிறோம். ஒழுக்க விசாரணை மேற்கொண்ட மாணாக்கனின் வேலை, ஒழுக்கத்தைப் பற்றிய தீர்மானங்களாலாகிய ஒரு முறையையோ நூலையோ உண்மையானதென்றாவது அறிவிற்குப் பொருத்தமான' தென்றாவது பிறருக்கு நிரூபிப்பதல்ல. ஆனால் ஒழுக்கத்தைப் பற்றித் தீர்மானிப்பது என்னவென்றால், அறிவினால் ஒழுக்க உயர்வு தாழ்வுகளை விசாரிப்பதேயாம். அதாவது அறிவாகிய சீர் தூக்கும் துலாக்கோலில் நிறுப்பதே, நாம் அறம் அல்லது ஒழுக்க சம்பந்தமாகக் கொள்ளும் தீர்மானமாகும். அறிவொன்றே அறன் வலியுறுத்தும் சக்தி என்றாலும் பொருந்தும். பொய்தீர் ஒழுக்க நெறியின் நயன்றாக்குவார் அறிவின் பயன்றெரிவார். அறிவுக்கும் அறனுக்குமுள்ள பிரியா ஒற்றுமை கருதியே கிரேக்க தேச சாக்ரடிஸ் என்பவர் "அறிவே அறன்" ("Knowledge is virtue") என்றார். ஆனால் அறிஞரெல்லாம் எஞ்ஞான்றும் அத்துறையில் சிறிதளவும் வழுவாது நடப்பவர் அன்று கூற நமக்குத் திறனில்லை. ஏனெனில் அறனாக்கம் வேண்டாத ஒழுக்கிலான் கண்ணும் அறிவின் திறத்தை ஒரு வேளை காணலாம். இதனையே வள்ளுவரும்,

**"அரம்போலுங் கூர்மையரேனு மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்." என்றார்.**

ஆனால் அறிவற்ற ஒருவன்பால் அறனாக்கம் மறந்தும் கருதுவதற்கில்லை. இதிலிருந்து உடனே நமக்கு, ஒழுக்கத்தைப் பொருத்த ஒரு உண்மையான தீர்மானத்தை நிராகரித்து நடப்பது அறிவுக்குப் பொருத்தமுடைய தாகாதென்பது நன்றாக விளங்குகிறது. எனினும் மேற்கண்ட இரு வழிகளுக்குமுள்ள வித்தியாசத்தை நாம் எடுத்துக் கூறினும், அவ்வேறுபாடு உற்றுநோக்கின் முதல் வழியைப்போல இரண்டாவது வழியிலும் சிறிது குறைகின்றது. ஒழுக்கம் அறிவினாலாகிய நடத்தையே தவிர வேறல்ல என்பதை நாம் நிரூபித்துவிட்டால், பின் அறிவினாலாயவை, எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் பொதுப்பட்டனவாயும், வழக்கு அல்லது முறை பற்றியதானவையாயு மிருப்பதினால், என்ன ஏற்படுகிறதென்று பார்க்கவேண்டும். நிகழ்கின்ற ஒழுக்கத்தைப்பற்றிய தீர்மானங்கள் எவ்வளவு தூரம் உண்மையான ஒழுக்கத்திற்கு அநுசரணையாக இருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு அவை போகப் போக மேலும் மேலும் அறிவினாற் கண்டுபிடித்து, வரையறுத்துக் குறிப்பிடக்கூடிய விதிகளால் தொகுக்கக்கூடிய முறையிலடங்குகின்றன. எனவே, சட்டதிட்டமாகத் தெரிந்தெடுத்த ஒழுக்க விதிகளையுடைய ஒரு ஒழுக்க முறையின் உண்மையை நிலைநாட்ட முயலுவதைக் கண்டித்து, 'ஒழுக்கமும் அறிவுபற்றிய நடக்கை எதுவும் ஒன்றென' ஸ்தாபனம் செய்வதே தனது வேலை எனக் குறிப்பிடுவதோடு திருப்தி யடைகின்ற அறநூல் அறிஞனும் கூட ஒழுக்க விதிகளடங்கிய ஒரு முறையினை அல்லது தொகுதியினை அறிவிற்கு இயைந்ததென ஆதரித்து விவரிக்குமாறு தூண்டப்படுகிறான்.

ஆரம்ப காலத்தில் கூறிய கருத்துக்களின் வித்தியாசம் நுணுக்கமாக ஆராயுங்கால் இவ்வாறு குன்றிவிட்டால், முதலில் அதனை அழுத்திக் கூறியதில் ஏதாவது பயனுண்டா என்று ஒருவர் கேட்கக்கூடும். எவ்வளவு தூரம் அவசியமோ அவ்வளவிற்குக் குறைத்து இவ்வித்தியாசத்தைப் பாராட்டினாலும் கூட இவ்விரண்டிற்கு மிருக்கும் வேற்றுமை பிரதானமான விசேஷ முக்கியமுடைய தென்பதை, நமது ஆராய்ச்சியின் மூலம் நாம் பெறும் துணிபு நமக்குக் காட்டும். எவ்விதமென்று பர்ப்போம். "உலக நிகழ்ச்சிகளினின்றும் பிரித்தெடுக்கப்பட்ட சர்வ பரிபூரண உலக வியாபகமான விதிகளடங்கிய ஒரு முறையே (A system of abstract Universals) ஒழுக்க உயர்வுடையதாம். பிரித்தெடுத்து முன்னதாகவே ஏற்படுத்தியுள்ள சில பொது விதிகளுண்டு. அவைகள் ஸ்திரமான ஒழுக்கப் பிரமாணங்களென விளங்குகின்றன. திடீரென்றெழும் மனப்பாங்குகளினால் தூண்டப்

பட்டுச் செயக் கருதும் நம் காரியங்களை அவைகளோடு ஒத்திட்டுப் பார்க்கின்றோம். இவ்விதம் ஒத்திட்டு இணங்கச் செய்கின்ற தீர்மானம் மட்டுமே (Subsumptive Judgment) உலகத்தில் சாதாரணமாக நிகழ்கின்றஒழுக்க ஆலோசனைகளில் அறத்தோடியைந்தது. மற்றெல்லாம் புறத்த." இதுவே முதற் கூறிய வகுப்பார் கொள்கையின் கருத்து. எனவே, பிரித்தெடுக்கப்பட்ட இந்தத் தர்ம சாஸ்திரப் பொது விதிகள் யாராலும் உண்டாக்கக் கூடியனவல்ல. ஒழுக்க ஆலோசனையில் கிரமமான மார்க்கமெனக் கருதுகிறார்களே! அதாவது ஒன்றன்கீழ் ஒன்றிணங்குகின்றதா என்று பார்க்கின்ற மார்க்கம்—அதனாலும் அவைகளின் உண்மையை நிர்ணயிக்க முடியாது. பின் எப்படித்தான் அப்பொது விதிகளின் அதிகாரத்தை நிலைநாட்டுவது? ஜர்மானிய தத்துவ சாஸ்திரியான காண்ட் (Kant) சொல்லுகிறபடி, அறன் வழிப்பட்ட அறிவினின்றும் வேறான காரண பூதமொன்றே அவைகளை ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்று ஏற்படுகின்றது. அதாவது அறிவினின்றும் வேறான ஒரு பொருளினின்று பிறப்பது அறம் அல்லது ஒழுக்க மென்று ஏற்படுகிறது.

ஆனால் ஒழுக்க நூல் முயற்சியில் நாம் பின்பற்றிச் செல்லும் மார்க்கமோ எனின், இத்தகைய அறிவிற்கு விரோதமான திண்டாட்டமான நிலைமையில் நம்மைத் தத்தளிக்க விடாது பிரத்யேகமாகப் பிரித்தெடுக்கப்பட்டு, சர்வத்தையும் குறிப்பிடும்படியான தத்வத்திற்கு உயர்வையும் மதிப்பையும், இவ்வழியிற் செல்லும், அறநெறித் தீர்மானம் கொடுக்காது தனிப்படையாக இதுபோன்று மற்றொன்று நிகழா என்று சொல்லக் கூடியவாறு நேரிடுகின்ற ஒவ்வொரு தனித்தனியான சந்தர்ப்பங்களில் செய்கின்ற நமது உயிருடைய சக்தியுள்ள சங்கல்பத்தை அல்லது தீர்மானத்தையே அறநெறியிற் செல்லும் அறிவு நயன்றாக்கி மதிப்பிடுகின்றது. அதாவது அறம் பேணும் அறிவு, பரீக்ஷை செய்து தீர்மானிப்பது, கடமையே தவிர கடமைகள் அல்ல. ஒவ்வொரு சமயத்திலும் இன்னபடி நட, இந்தக் காரியத்தைச் செய் என்ற கட்டளையே தவிர, பொதுவான ஒழுக்க விதிகள் அல்ல. கொடு நோய் பற்றி, சிறிதளவில் இறக்கவிருக்கும் இளங்கன்றின் மரண வேதனையைப் பார்க்கின்ற ஒருவனுடைய அறம் காக்க விரும்பும் அறிவு, அப்பொழுது தான் முடிவு செய்யவேண்டிய காரியம் இன்னும் ஒரு மணி நேரத்தில் உயிர் துறக்கும் அதன் உயிரை அச்சமயமே அதனுடைய சரீரத்தினின்றும் நீக்கி அதனுடைய மரணாவஸ்தையைப் போக்குவதா, அல்லது அக்கன்றை மற்றொரு மணி நேரம் மரணாவஸ்தைப்பட்டு இறக்கும்படி விட்டுவிடுவதா என்று அந்தக் காலத்திலேயே தீர்மானிப்பதாகுமே தவிர, பொதுவாகக் கன்றுகளைக் கொல்வது நீதியா அநீதியா? அறநெறிகள் என்ன சொல்கின்றன? அவைகள் நியாயமானவைதானா என்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகளினின்றும் பிரித்தெடுக்கப்பட்ட பொது விதிகளைப்பற்றி ஆலோசனை செய்துகொண் டிருப்பதல்ல. ஒழுங்கான, எதார்த்தமான அறம் கருதும் ஆலோசனை ஒன்றின் கீழ் ஒன்று இணங்கி வருகின்றதா என்று பார்க்கின்ற நியாயவாதத்தைப் போலானதல்ல. அது நம் மனோரதத்தை ஒரு வித்மாகக் கட்டுவதும் அல்லது பிரித்துத் திரும்பவும் கட்டுவதுமாகிய போக்கை யுடையது. அவ்வாலோசனையின் ஒவ்வொரு பாகமும், ஒழுக்க உணர்ச்சியின் ஆதர்சம் பெறுகிறது. இவ்வாறு அழித்தும், திருத்தியும், புதுப்பித்தும் போவதினால் இப்போக்கு உண்டாக்குகிற நெறிகள், தற்காலத்திற்குச் செய்துகொண்ட ஏற்பாடே தவிர, என்றும் நிலைப்பனவல்ல வென்பது தர்க்க நியாயத்திற்குப் பொருத்தமென்பது வெள்ளிடைமலை. அறம்பற்றிய அறிவும் (Moral volition) சர்வ சுதந்திர சக்தி யுடையதா யிருப்பது இக்காரணம் பற்றியே யாகும். இன்னின்னவை செய்ய வேண்டுமென்று முன்னரே நிர்ணயித்துச் செய்து முடிக்க விரும்பும் ஏதாவதொரு மனோபீஷ்டியாவது, அல்லது ஒழுக்க விதிகளாலும் பிரித்தெடுத்த நெறிகளாலும் தொடுத்துத் தெரிந்தெடுக்கப்பட்ட அறமுறையாவது இவ்வறிவை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தவல்ல சக்தி யுடையதல்லவென நாம் கருதுவதற்குத் தக்க சான்றாகின்றது. எனவே, ஒழுக்கத்தில் பரிபக்குவமடைந்த கர்த்தா யாரெனக் கேட்டால், எவனொருவன் ஒவ்வொரு புதிய ஒழுக்கம் பற்றி எழும் (தர்ம சங்கடமான) சந்தர்ப்பத்திலும் தனக்குத்தானே ஆராய்ந் தறிதலை முழுமுதற் கடனாகக் கருதுகிறானோ, எவனொருவன் தன்னுடைய அறம் செய விரும்பும் அறிவின் சுதந்திரத்தைப் பிற எந்த அதிகாரத்திற்கும் விட்டுக்கொடா திருக்கிறானோ, அவனே அப்பதவிக்கு அருகனாவான். அவன்



தன்னுடைய அறிவுச் சுதந்திரத்தைத் தான் முன் கொண்ட தீர்மானங்களுக்கும் கூட அடிமையாக்க மாட்டான். அவனே, அறிவுச் சுதந்திரத்தை அடிமைப் படுத்துதல் கண்ணிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்கச் செல்கின்ற மடமையென உணர்ந்தவனாவான்.

நாம் ஆராய்ந்தெழுத முற்பட்டிருக்கும் ஒழுக்க இயல்பைப் பற்றி நாம் கூறிய தன்மையை நோக்கவேண்டும்.

நாம் நமது நடத்தையை அறிவு வழிப்படுத்துதலாகிய இன்றியமையாத அவசியமே ஒழுக்கம். இந்த உண்மையை நிரூபிக்க முயலுவதே நமது ஆராய்ச்சியின் முதற்பாகமாக இருக்கவேண்டு மென்பது வெளிப்படை.

ஆழ்ந்து பலாபலன்களைச் சிந்தித்துக் கருதும் இந்தக் காலத்தில் அறவொழுக்கத்தின்பால் நிகழ்கின்ற ஒழுக்க ஆலோசனையின் மனோபாவங்களைக் கவனித்து விசாரிக்க வேண்டும். ஏதாவதொரு சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்வோம். ஒழுக்க ஆலோசனை எத்தகையதா யிருக்கவேண்டும்? நாம் அறிவால் ஒத்துக்கொண்டிருக்கிற ஒரு வகுப்பான (An approved systematic totality of endeavour) செய்கைகள் முழுமைக்குமுள்ள ஆத்ம (Spirit) ஞானம் அல்லது உள்ளெழும் தத்துவம் (Inner principle) அந்தச் சமயத்திற்கேற்ற விளக்கம், நமக்குத் தாப் போதுமானதாக இருப்பதற்கு, எந்த ஒரு குறிப்பிட்ட விசேஷச் செய்கை அவசியமாக இருக்குமோ, அந்த ஒரு செயலை அடையும் ஒரு பிரயத்தனமாகவே இந்த ஒழுக்க ஆலோசனை விளங்குவதைக் காணலாம். அப்படியானால் நடந்தை ஒழுக்கப்படுத்துவதென்றால் அதனை அறிவிற்கியையச் செய்வது என்ற பொருள் பலாபலன்களைக் கருதிச் சிந்திக்கும் ஒழுக்க முறையில் புலப்படும். இன்னும் நடத்தையை முழுவதும் ஒழுக்கப்படுத்துவது, அதனை முழுவதும் அறிவிற்கியையச் செய்வதாகும். ஏனெனில் நடத்தையானது ஒழுக்க உயர்வினாலாய அறிவின் மாட்சி பெறாது, உலக (Worldly) உயர்வுக்கு யுக்தமான, மதியுடையதாய் மட்டு மிருக்கக்கூடும். அப்படி யிருந்தாலும் கூட. நாம் மனோபாவங்களின் பாங்குகளைப் பிரித்து விசாரிப்போமாயின், நாம் பின்வரும் முடிவுக்கே வருவோம். அதாவது பலாபலன்கள் கருதி எழும் ஒழுக்கச் சிந்தனை முறையில் நடத்தையை ஒழுக்கப்படுத்துதல் என்றால் அதனை அறிவிற்கியையச் செய்தல். அதாவது நடத்தையின் ஒரு பாகத்தை மட்டுமல்ல, நடத்தை முழுவதையுமே அறிவிற்கியையச் செய்தலென்பதாம். அப்படியானால் கேவலம் உலக உயர்வுக்கு மட்டும் யுக்தமான மதியுடைய நடத்தை அம்மட்டும் அறிவொளி பெற்றதாகுமேயன்றி, ஒழுக்க விழுப்பமும்,திகழும் அறிவொளி அனைத்தும் கவர்ந்த தாகமாட்டாதென நாம் சொல்லாமலே விளங்கும்.

ஆனால் இவ்வாறு நாம் வகுத்துக் கூறுவதில் ஒரு சங்கை எழலாம். அது என்ன? அதாவது பலாபலன் கருதிச் சிந்திக்கும் ஒழுக்கமுறை என்று கூறுவதை எடுத்துக்கொள்வோம். அதில் எழுகின்ற ஆலோசனை மனோபாவத்தை,நாம் பிரித் தளந்து பெற்ற துணிவை உண்மையென்று வைத்துக்கொள்வோம். இதிலிருந்து நாம் அநுமானிக்கக்கூடிய தென்ன? நடத்தையை ஒழுக்கப் படுத்துவ தென்றால், அதனை அறிவிற் கியையச் செய்வது என்று சொல்வோமேயானால் பலாபலன்கள், அல்லது நமது கஷ்ட நஷ்டங்கள், கருதிச்சிந்திக்கின்ற அளவிலே, ஒழுக்கம் பற்றிய உணர்ச்சிகள் மறைகின்றனவே. நம் நடத்தையில் கேவலம் வெறும் அறிவினாலாகிய உயர்வு தாழ்வுகளையே எண்ணுகின்றோம். இதனை ஒழுக்கம் அல்லது அறம்பற்றியதெனச் சொல்லல் தகுமோவென்ற ஐயமெழலாம். இச்சந்தேகத்தை நிவர்த்திக்குமாறு நாம் அடுத்தபடியாக ஒழுக்கம் பிறந்து, வளர்ந்து சிறந்த விஸ்தாரத்தைச் சிறிது விசாரித்து நோக்கி, பலாபலன்களைக் கருதிச் சிந்திக்கும் அறிவின் பயனாய் அடையும் ஒழுக்க முறையானது, ஆரம்ப காலத்திலே காணப்பட்ட ஆதி ஒழுக்கமெனக் கொள்வதினின்றும் முற்றிலும் வேறுபட்டதன்று. ஆனால் அதினின்றும் தோன்றி வளர்ந்து சிறந்து பழுத்து முதிர்ச்சியடைந்ததே யாகும். இம்முதிர்ச்சிக்கு முற்பட்ட நிலைமைகளினின்றும், அது வளர்ந்து விரிவடைந்ததை உணர்வதின் மூலமாகவே, அதனை நன்கறிதல் கூடும் என்று காட்ட முயலுவோம். பின்னர் நமது விசாரணையின் முதற்பாகத்தின் அநுபந்தமாகத் தற்காலத்தில் மனிதனுடைய மனதில் நிகழ்கின்ற ஒழுக்கத் தீர்மானத்தினுடைய மனோபாவ வளர்ச்சியைச் சற்றே காண்போம்.

இவ்வாறாக நாம் முதற் பாகத்தில், மனிதனுடைய அறிவுத்தன்மையை, உலக நடத்தை

யில்(Realm of conduct)காட்டுவதே ஒழுக்க மென, நமது அனுபவத்தின் மூலமாகவே எடுத்துக் காட்டிய பின்னர் இரண்டாவது பாகத்திற்குப் போவோம். இப்பாகம் நமது உழைப்புக்களேயும் நடத்தைகளேயும் கூடிய அளவு அறிவிற்கியையச் செய்வதில் இது காறும் பயனடைந்த ஒழுக்கமானது எத்தகைய ஒழுங்கை, அடைந்திருக்கிற தென்பதை வரையறுத்துக் கூறுவதாகும். அதாவது ஒழுக்க சம்பந்தமாய்த் தொகுக்கப்பட்டுள்ள வாதங்களில் (Constructive Theories) எழும் வினைக்களேயும் ஆலோசிக்க வேண்டிய அம்சங்களேயும் கவனிப்போம்.

மூன்ரும் பாகத்தில் ஒழுக்கத்தின் தத்துவம் அல்லது வேதாந்த விசாரணை செய்வோம். இப்பாகத்தில், ஏனைய பயன்ராக்கி மதிப்பிடு முறைகளிலும் (Forms of valuation) ஒழுக்க விழுப்பம் ஓம்புதலே சிறப்புடைத்து என்று சொல்வதாவது, அல்லது ஒழுக்க நினைப்புக்களிலும் உழைப்புக்களிலும் காணப்படுகின்ற கருத்துக்களே ஒழுங்குபடுத்துவதாவது நமது கடமையன்று. ஆனல் நம்மைக் கட்டுப்படுத்தும் உயர்வுள்ள தீர்மானங்களின் வாஸ்தவத்தை நிலைநிறுத்தக் கூடிய வேதாந்த மல்லது கடந்தஞான முள்ள சாரங்களே முடிவு செய்து, இன்னும் அறமென்பதும், ஒழுக்கமென்பதும் மினுமினியின் ஒளிபோன்று தோன்றி மறைந்தழியும் தன்மையுடைய நிலையற்ற பொருளன்று. ஆனல் ஆதி அந்தமற்ற பரம்பொருளினுடைய,யாவற்றினும் கடந்த, அழியா உண்மையும், அறிவுத்தன்மையு முடைய சக்தி என்பதை விளக்க முயற்சிப்பதாகும்.

---

# செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

## சங்கரநயினர் கோயில்

(ஒரு வேண்டுகோள்)

**செங்குந்த குலாபிமானிகளே!**

நமது குல முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கம் என ஒரு சங்கம் நிறுவியும் அதன் வாயிலாகச் செங்குந்தமித்திரன் என்னும் பத்திரிகை வெளியிட்டும் நமது மக்கள் கல்வி, கைத்தொழில், வியாபாரம்,செல்வம், அந்தஸ்து அரசியல் துரை முதலியவற்றில் மேன்மை அடையுமாறு தலைவர்கள் இடைவிடாது இராப்பகலாக உழைத்து வருகின்றனர். இதன் கிளையாகச் செங்குந்தர்கள் வசிக்கும் இடங்களிலெல்லாம் நூற்றுக் கணக்கான செங்குந்தர் சங்கங்கள் தோன்றி முன்னேற்றத்திற்கான தொண்டாற்றி வருகின்றன. நமது நகரிலும் சென்னைத் தலைச்சங்கத்தின் கிளையாகத் தோன்றியிருக்கும் நமது செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்திலும் செங்குந்த இரத்தம் பாயும் ஒவ்வொருவரும் அங்கத்தினராகச் சேர்ந்து பொது நலத்திற்கு உழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பதை ஞாபக மூட்டுகிருேம்.

நமது குல ஆண் பெண் மக்கள் யாவரும் தங்களுக்குப் பிரியமான புத்தகங்களைப் படித்துக் கால தேச வர்த்தமானங்களை அறிந்து தத்தம் வாழ்க்கை நலன்களைப் பலப்படுத்திக் கொள்வதற்காக நமது சங்கத்தின் ஆதரவில் வாசகசாலையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் புராணங்கள், நவீன நாவல்கள், ஓயாச் சிரிப்பைத் தரும் கதைகள், இல்வாழ்க்கைக்குரிய புஸ்தகங்கள், இங்கிலீஷ் புஸ்தகங்கள், செங்குந்தர் புராணங்கள் முதலியவையும் செங்குந்தமித்திரன், ஆனந்தபோதினியும், சிவநேசன் வார இதழும், தேசிய தினப் பத்திரிகைகளும், அறிவை விசாலப் படுத்துவதற்கான வேறு பல புத்தகங்களும் வாசிப்பதற்குப் பெற்றுக் கொள்ளலாம். சங்கத்தின் சந்தாதாரர்களுக்குச் சௌகரியப்படி வாசகசாலை மூலமாக ஒவ்வொருவரது வீட்டுக்கும் புத்தகங்களை வாசிக்கக் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரியப்பட்டால் நேரில் வந்து புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகையால் உடனே சங்கத்தில் சந்தாதாரராகச் சேர்ந்து நூல்களைக் கற்று இன்புறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. சமூக முன்னேற்றம் ஒன்றையே கருதிச் சந்தாத்தொகை மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது.

சந்தாதாரராகப் பதிவு செய்துகொள்ள முதலில் செலுத்தவேண்டியது அணு 4. பின் ௴-1-க்கு அணு 2. ௵ சந்தா ரூ. 1—8—0 கட்ட வேண்டும்.

வாசக சாலையில் மேற்சொல்லிய புத்தகங்களும் காங்கிரஸ் சரித்திர புத்தகங்களும், செங்குந்தத் தலைவர்கள் போட்டோ படங்களும் எப்பொழுதும் கிரையத்திற்குப் பெற்றுக் கொள்ளலாம்.

நமது சங்கத்திற்கு ஜில்லா கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார், B. A,.B. L. அவர்கள் தலைவராக உள்ளார்.

உங்கள் ஆண் பெண் மக்களை உங்களுக்கு எவ்வித குடும்ப கஷ்டங்கள் இருந்தபோதிலும் பொருட்படுத்தாது 4-வது வகுப்பு வரையிலாவது






சாவு என்ற எண்ணமே அதிக இன்னலைத் தருகின்றது. நாம் நடந்து கடந்த அந்தப் புழுவின் தேக துன்பம், ஒரு ராக்ஷசன் இறக்கும் போது ஏற்படுவதைவிட அதிகக் கடிய வேதனையாகவே இருக்கும். —ஷேக்ஸ்பியர்.

விகடத்தின் மகிமை அதைக் கேட்பவனிடத்தில் தான் இருக்கின்றதே யொழிய சொல்கின்றவனின் நாவில் இல்லை. —ஷேக்ஸ்பியர்.

ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்வதற்கும், அதனுடைய முதல் பிரேரணைக்கும் மத்தியில் உண்டாகின்ற இடை நேரமெல்லாம் பிரமையை அல்லது பயங்கரமான கனவை ஒத்திருக்கிறது. அந்த விவேகமும், நெறிப்பொறிகளும் பிறகு ஆலோசனைச் சபை கூடுகின்றன. அப்போது ஒரு மனிதனுடைய நிலையை ஒரு சிறிய இராஜ்ஜியத்தில் உண்டாகும் உள்ளூர்க் கலகத்தின் தன்மைக்கு ஒப்பிடலாம். —ஷேக்ஸ்பியர்.

வாணளை ஊறு செய்கிற அசதியை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சந்தோஷம் தரும் ஊக்கத்தை விருத்தி செய்க. —ஷேக்ஸ்பியர்.

ஒவ்வொருவனும் நன்மை செய்யவே விரும்புகின்றன்; ஆனல் நூற்றில் ஒருவன் கூட இதை அறிந்து கொள்வதில்லை........கடவுள் உலகைச் சிருஷ்டித்த நாள் முதலாக, ஒரு மனிதனும் தீமை செய்வதில் உண்மையான சந்தோஷம் அடைந்ததில்லை. —ரஸ்கின்.

தற்புகழ்ச்சி, தன் நலங்களைக் கவனியாதிருப்பது போன்ற அத்துணைப் பெரிய பாவமல்ல. —ஷேக்ஸ்பியர்.

நாம் கனவுகளைப்போல அப்பேர்ப்பட்ட தன்மையுள்ளவர்கள். நம்முடைய சிறு வாழ்க்கை தூக்கத்தால் சுற்றிலும் மூடப்பட்டிருக்கிறது. —ஷேக்ஸ்பியர்.

எவ்விடத்தில் தேனீ உறிஞ்சுகின்றதோ அவ்விடத்தில்—அப்பேர்ப்பட்ட சிறந்த இனியச் சந்தோஷமான காரியத்தில்—நான் பிரவேசிப்பேன். —ஷேக்ஸ்பியர்.

தத்துவ சாஸ்திரிகள் என்று தவறுதலாக அழைக்கப்படுகிறவர்கள் என்ன வேண்டுமாயினும் சொல்லிக் கொள்ளட்டும்; இந்த (வாழ்க்கை) நிலையில் தீமையினும் நன்மையே மேற்கொண்டு நிற்கின்றதென்பது திண்ணம். —டிக்கன்ஸ்.

மனிதர்கள் நன்ருக ஆராயின் கெட்டதிலும் சிற்சில நல்லவை உண்டு என உணர்வார்கள். —ஷேக்ஸ்பியர்.

---

(258-ம் பக்கத் தொடர்ச்சி.)

வாசிக்க அனுப்ப வேண்டுகிருேம். செல்வந்தர்கள் தங்கள் ஆண் பெண் மக்களை உயர்தரப் படிப்பிற்கு அனுப்புதல் வேண்டும்.

பிச்சை புகினும் கற்கை நன்றே
பணத்திலும் படிப்பு மேல்

ஒரே தொழிலைச் செய்வதை விடுத்துப் பல வித கைத்தொழில்களையும் கற்கவேண்டும். சாயம் தோய்க்கவும் புதிய இயந்திரத் தரிகளைக் கொண்டு காலத்திற்குத் தகுந்தபடி நூதன முறையில் தொழில் செய்யவும் கற்றுக் கொள்ளவேண்டும். மக்களை நெசவுத் தொழில் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புதல் வேண்டும். நமது குல முன்னேற்றத்திற்கான விஷயங்களைத் திரட்டிக்கொண்டு வரும் செங்குந்த மித்திரனை ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளையாகப் பாவித்துத் தருவிக்கவேண்டும். வருட சந்தா ரூ. 1—8—0 தான். எத்தனையோ வீண் செலவு செய்கிருேம். வேண்டுவோர் செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத் தெரு, சென்னை என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்நகர்ச் செங்குந்தர்கள் நம் இல்லங்களில் நடைபெறும் சுபகாரியங்களில் இயன்ற அளவு சங்கத்திற்கு நன்கொடை தரவேண்டும். ஊர்ப் பொதுப் பணம் திரட்டிப் பள்ளிக்கூடம் ஸ்தாபித்து அதில் நம் ஆண் பெண் மக்களைப் படிக்கச் செய்ய இவ்வூர்ச் செங்குந்தஜன சமூகத்தாரை மன்ருடிப் பணிவுடன் கேட்டுக்கொள்வதுடன் ஒவ்வொரு ஊரிலும் செங்குந்த பொதுக்கூட்டத்தார்களும் சில செல்வந்தர்களும் வியாபாரிகளும் பள்ளிக்கூடங்கள் நிருவி ஆண் பெண் மக்களைக் கட்டாயம் படிக்க வைத்து வருகிருர்கள் என்பதை அறிவிக்கிருேம்.

தலைவர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார்,
பி. ஏ., பி. எல்., வக்கீல், திருநெல்வேலி.
உபதலைவர் M. திருவுடையா முதலியார்,
பொக்கிஷதார் S. பிச்சாண்டி முதலியார்,
காரியதரிசிகள் } T. சங்கரபாண்டிய முதலியார்,
A. முத்துசாமி முதலியார்.

# தங்க நிர்ணயம் தடுமாறியது

தங்க நிர்ணயத்தை பிரிட்டன் கையாளுவது மிகக் கடினமெனப் பல நாட்களுக்கு முன்பே கருதப்பட்டது. ஆயினும் பிரிட்டிஷார் கஷ்டப்பட்டு அதை ஒருவாறு காப்பாற்றி வந்தார்கள். இப்பொழுது அது கவிழ்ந்து விட்டது. 1925-இல் பெருமிதமான தங்கத்தைச் சேகரித்து வைத்துக் கொண்டு பிரிட்டிஷ் சர்க்கார் தங்கத்துக்கு ஒரு நிரந்தரமான மதிப்பை ஏற்படுத்தியதுடன் வழக்கத்திலிருந்த ஸவரன் என்னும் பொன் நாணயத்தோடு புதிதாக ஸ்டர்லிங் நோட்டுக்களை உண்டாக்கிப் பரப்பினர். அது முதல் இரண்டும் சமான மதிப்புடையவையா யிருந்தன.

பிரிட்டிஷ் சர்க்கார் வைத்திருந்த தங்கம் பரபரவென்று கரைய ஆரம்பித்தது. அமெரிக்காவினிடமும் பிரான்ஸினிடமும் வாங்கியிருந்த ஏராளமான கடனுக்காகவும் வட்டிக்காகவும் ஒரு பெருந்தொகையான தங்கத்தை பிரிட்டின் செலுத்த வேண்டியதாயிற்று. ஆகவே, பிரிட்டிஷ் தங்கமெல்லாம் இவ்விரு நாடுகளிலும் குவிந்தன. இத்துடன் பிரிட்டிஷ் மந்திரி சபைக் கலைவினால் திடீரென ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அனாவசியமாக பிரிட்டனிடம் அவநம்பிக்கையும் திகிலும் கொண்ட அயல்நாடுகள் தாங்கள் பிரிட்டனிற் கொடுத்துவைத்திருந்த தொகைகளைத் துரிதமாக மீட்டுக்கொண்டன. $3\frac{1}{2}$ தினங்களில் 430 லக்ஷம் பவுன் இங்கிலாந்து பாங்கியினின்றும் வெளியேறிற்று. மிகுந்து நின்றது 1300 லக்ஷம் பவுன் தான். இச்சிறிய தொகையை வைத்துக் கொண்டு உலகத்தின் வியாபார நிரந்தரத்தை நிர்ணயித்துக் கட்டுப்படுத்துவது அசாத்தியம். ஆகவே, பிரிட்டிஷ் சர்க்கார் "தங்கத்திற்கு இனி ஒரு நிரந்தர மதிப்பு கிடையாது" என வெளியிட்டனர். இதனால் ஸவரனுக்கும் ஸ்டர்லிங் நோட்டுக்கும் வித்தியாசமேற்பட்டது.

பிரிட்டனின் தங்கம் அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் குவிந்ததும் அயல்நாட்டார் தங்கள் தங்கங்களை பிரிட்டனிடமிருந்து வாங்கிக்கொண்டதுமே இதற்குக் காரணமாகத் தோன்றினும், ஆழ்ந்து பார்க்கின் பல வருஷங்கட்கு முன்பிருந்தே பல காரணங்கள் வேலைசெய்து வந்தனவெனத் தெரியும். இவ்வாறு தங்கம் இடம் பெயர்ந்ததற்கே பல காரணங்களுண்டு. மகா யுத்தத்திற்கு முன் சுமார் நூறு வருஷங்களாகக் கைத்தொழி லபிவிருத்தி, பணச் சேகரிப்பு முதலியவற்றில் பிரிட்டனே முதன்மை ஸ்தானம் வகித்திருந்தது. உலகத்திலுள்ள பல நாடுகளுக்கும் அதுவே முக்கியமான பல சாமான்களைத் தயாரித்து அனுப்பிற்று. அயல்நாட்டாரும் அதனிடம் பெரு நம்பிக்கை கொண்டு பெரிய தொகைகளை அதனிடத்திலேயே வட்டிக்கு விட்டிருந்தனர்: இத்தகைய சம்பந்தத்தால் பிரிட்டனின் கைத்தொழிலுக்கு வேண்டிய பருத்தி முதலிய இயற்கைப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து ஏராளமாகக் கிடைத்ததுடன் அப்பொருள்களைக் கொண்டு செய்யப்படும் சாமான்களை விற்பனை செய்வதற்கும் அயல் நாடுகள் தக்க வியாபார ஸ்தலங்களாய் உபயோகப்பட்டு வந்தன. ஆகவே, உலகத்தில் செல்வம், கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றி லெல்லாம் பிரிட்டனே தலைமை பெற்று விளங்கிற்று.

ஆனால் யுத்த காலத்திலும் அதற்குப் பிறகும் இந்நிலையில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. பிரிட்டனோடு வேறு பல நாடுகள் போட்டியிட ஆரம்பித்தன. கைத்தொழில் முதலியவற்றிற்காகப் பிறநாடுகட்கு முதலுதவும் நிலைமை பிரிட்டனிடமிருந்து அமெரிக்காவுக்கு மாறிற்று. ஜப்பான் முதலிய நாடுகளின் போட்டியால் பிரிட்டனின் பருத்தியாடை வியாபாரம் தலை சாய்த்தது. மற்ற நாடுகள் சமயத்துக் கேற்றபடி கைத்தொழில் முதலியவற்றைப் புதுப்பித்துக் கொண்டு முன்னேறின. அதனால் அவற்றின் சாமான்கள் பிரிட்டனிடத்தில் வந்து குறைந்த விலைக்கு விற்க ஆரம்பித்தன. பிரிட்டனோ அவ்வளவு துரிதமாக முன்னேற வில்லை.

உதாரணமாக, 1925-29-இல் பிரான்ஸ் தேசம் தனது போலிப் பட்டுக் கைத்தொழிலை 100-க்கு 800 வீதம் விருத்தி செய்திருக்க, அதே காலத்தில் அதே கைத்தொழிலை பிரிட்டன் 100-க்கு 13 வீதமே விருத்தி செய்துள்ளது.

இக்காரணங்களால் அதன் நிலை தாழ்ந்தது; அதன் செல்வம் குறைந்தது. ஆங்காங்கு வரவு செலவு திட்டத்திலும் பணக்குறைவு அதிகமேற்பட்டது. மேலும் அதனிடம் நம்பிக்கை கொண்டு பணத்தை விட்டுவைத்திருந்த அயல்நாடுகளும் திடீரெனத் திகிலுற்றுத் தங்கள் பணத்தைத் திரும்ப வாங்கிக்கொள்ள ஆரம்பித்தன. இந்நிலையில் பிரிட்டன் எங்ஙனம் தங்க நிர்ணயத்தை நிர்வகிக்க முடியும். ஆகவே அது கைவிடப்பட்டது.

இதன்பயனாக பிரிட்டனின் பணநெருக்கடி சிறிது தளர்ந்துள்ளது. அதன் கைத்தொழில்கள் இனிச் சிறிது வளர்ந்து மற்ற நாட்டுக் கைத்தொழில்களோடு போட்டியிடக்கூடும். ஆனால் அத்தகைய நிலைமை, ஸ்டர்லிங்கின் மதிப்பைக் குறைப்பதையும் தங்கள் விலைக்கும் அயலார் விலைக்குமுள்ள வித்தியாசத்தைச் சரிப்படுத்துவதையும் பொருத்திருக்கிறது. இது பிரிட்டனுக்கு அவ்வளவு கஷ்டமான வேலையல்ல. சீக்கிரத்தில் இதைச் சரிப்படுத்த அது தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமென நம்பப்படுகிறது.

பிரிட்டனுடன் நெருங்கிய சம்பந்தமுள்ள இந்தியாவையும் இந்நெருக்கடி பெரிதும் பாதித்துளது. நமது ரூபாய் பொன்னுக்குப் பதிலாக ஸ்டர்லிங்கோடு பிணைக்கப்பட்டுள்ளது. ஸ்டர்லிங்கின் மதிப்புக் குறைவினால் நமது ரூபாயின் விகிதம் 15-பென்ஸுக்கும் குறைவாகிவிட்டது. இதனால்



நமது கைத்தொழில்கட்கு ஒருவித தூண்டுதலேற்படக்கூடும். நாம் ஏற்றுமதி செய்யும் முக்கியமான பொருள்களான சணல், பருத்தி, தேயிலை, வேர்க்கடலை, கொப்பரைத்தேங்காய் முதலியவற்றின் விலை ஏற்றமடையும். ஆனால் தற்சமயம் விலைகள் மேலும் கீழுமாக ஏறி இறங்கிக்கொண் டிருக்கும். பிரிட்டன் தவிர மற்ற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களின் விலை ஏறும். அதனால் நமது கைத்தொழில்கள் விருத்தியாகும். ரூபாய்க்கு 16 பென்ஸ் விகிதம் ஏற்படுத்தவேண்டுமென நமது வியாபாரிகள் முன்பு கூக்குரலிட்டனர். ஆனால் அது தானாகவே 16 பென்ஸுக்கும் குறைவாகிவிட்டது. சட்ட வாயிலாக அவ்வாறு குறைப்பதா லேற்படக்கூடிய சில தீமைகளும் இப்பொழு தேற்படுவதற் கிடமில்லை. மேலும் இப்பொழு திருப்பதினும் நமக்கு அதிகப் பயன்தரும் ஒரு நிலையான விகிதம் புதிதாக ஏற்படுத்தபடலாம். ஆனால் ஸ்டர்லிங்குக்கும் ஒரு பரபரப்பான கிராக்கி ஏற்படலாம். அதனால் நம்மிடமுள்ள சிறிது பொன்னும் சிதறிப்போகும். இந்த விஷயம் நமக்குத் தீமையானதே ஆகவே நம்மிடமுள்ள பொன் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்பட வேண்டும். நமது மிதமிஞ்சின செலவைக் குறைப்போமேயானால் நாம் இந்த நெருக்கடியைச் சீக்கிரம் அமைதியாக்கலாம்.

---

# கைத்தறியை ஆதரியுங்கள்

## ஏழைச் சகோதரர்களுக்குக் கஞ்சி வாருங்கள்

(திரு. சி. இராஜ கோபாலாச்சாரியார்.)

### நிலையான பெரு நன்மைக்காகத் தற்போது சிறிது கஷ்டப்படலாம்

தென்னிந்திய நெசவுக்காரர்களது திறமையைக் காங்கிரஸைக் காட்டிலும் அதிகமாக எவரும் விரும்பிப் போற்றமாட்டார்கள். இந்த நெசவுக்காரரது நன்மையைக் காங்கிரஸைக் காட்டிலும் அதிகமாக எவரும் கோரமாட்டார்கள். ஆகவே, அவர்களது தொழிலுக்கு இடையூறாயிருக்கும் எந்தக் காரியத்தையும் காங்கிரஸ் மிகுந்த மனவருத்தத்துடனேயே செய்யும். ஆனால், ஏதாவது சீர்திருத்தத்தினால் ஒரு பகுதியாருக்குத் தற்காலத்தில் கஷ்டமோ நஷ்டமோ ஏற்படுமென்பதுபற்றி இத்தேசத்தின் ஏழை மக்களது நிலையான நன்மையைக் காங்கிரஸ் கவனிக்காது பராமுகம் செய்ய முடியாது. மற்றவர்கள் குறுகிய நோக்கமுடையவர்களாக இருக்கலாம்; காங்கிரஸோ தேசமக்கள் அனைவரது நன்மைக்காகவு மிருக்கிறது. ஆகவே தேசத்துக்கு நிலையான நன்மையளிக்கும் முறைகளை அது தைரியத்துடன் கையாளாதிருக்க முடியாது.

உதாரணமாக, அது மதுபானத்தை நிறுத்த முயலுகிறது. ஆகையால், தற்போது அம்முயற்சியாலுண்டாகும் கஷ்டங்களைக் கவனிக்கிறதில்லை. குடிப்பழக்கத்தை நாளுக்கு நாள் ஆழமாக வேரூன்றிப் பொல்லாங்கு விளைக்க விடுவதினும், மரங்களை வாடகைக்கு விடுவோருக்குச் சிறிது நஷ்டமுண்டாக்குவதே மேல் எனக் கருதுகிறது. குடியைப் பல குடும்பங்களைப் பாழாக்க விட்டுத் துரைத்தனத்தையும் தனது வரும்படிக்காகக் குடிகாரர்களை எதிர்பார்த்திருக்கச் செய்வதை விட, சர்க்காரின் வரும்படியைக் குறைத்து, அது உத்தியோகஸ்தரது சம்பளங்களைக் குறைக்குமாறு செய்வதே மேலென எண்ணுகிறது.

அதேமாதிரியாக, விதேசித் துணியினால் ஒரு பெருமிதமான தொகை நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுத்துச் சுதேசித் துணியைப் புகுத்தப் பாடுபடுகிறது. அன்னிய நூல், துணிகளின் வியாபாரத்திற் றலையிட்டுள்ள சிலருக்கு நஷ்டமேற்படுகிற தென்பது பற்றி அது இச் சீர்திருத்தத்தைக் கைவிடமுடியாது. இத்தகைய விதேசி நூல், துணி வியாபாரத்தில் ஏதாவதொரு துறையில் தங்கள் பொருளையும் திறமையையும் செலவிட்டிருக்கும் வியாபாரிகளைக் கஷ்டப்படுத்துவதில் காங்கிரஸுக்கு ஒருவிதத் திருப்தியுமில்லை. ஆனால் நாட்டின் நிலையான நன்மைக்கும் இதே வியாபாரிகளது நன்மைக்கும் அத்தகைய செய்கை இன்றியமையாததாகிறது. நோயாளியின் உயிரைக் காப்பதற்காக இரண வைத்தியர் காயங்களும் கஷ்டமும் உண்டாக்குவதுடன் சில சமயங்களில் உடலின் பாகங்களையும் கருணையின்றி அறுத்தெடுத்து விடுகிறாரல்லவா?

### முரட்டு ஆடையே போதும்

ஒரு காலத்தில் இந்தியா மிக நுட்பமான ஆடை நெய்து அணிந்துவந்தது. அத்தகைய ஆடைகளை வாங்குவோரது பணம் நூற்றலிலும் நெய்தலிலும் ஒப்பற்ற திறமை வாய்ந்த நம்மவரது குடும்பங்கட்கு உதவிற்று. ஆனால், இக்காலத்தில் நுட்ப ஆடை அணிவதால் அயல் நாட்டு நூலையும் துணியையும் ஆதரித்து நம் நாட்டிலுள்ள பெருமிதமான நூற்போரையும் கைத்தறி நெசவாளரையும் தொழிலின்றி அல்லாட விடவேண்டியதா யிருக்கிறது. நம் நாட்டிலும் நுட்பமான நூல் சிறிது நூற்கப்படுகிறது. ஆனால் அது சொற்பக் கைத்தறிகளாலும் அநேகமாக மில்களாலும் நெய்யப்படுகின்றது. இந்தச் சிறுபான்மையான துணிகள் மிக உயர்ந்த விலையாவதுடன், நுட்பமான ஆடையில் நமக்குள்ள விருப்பத்தை வளர்த்து அதனால் அவ்

வாறு நுட்பம் வாய்ந்த விதேசி நூல் துணிகளைப் பெருமிதமாக இறக்குமதி செய்யத் தூண்டுகிறது.

அந்நிய ஜவுளி வியாபாரத்தை நிருத்த விரும்பினுல் முரட்டு ஆடையே தற்காலத்தில் நமக்குப் போதும் என்னும் உணர்ச்சியை நாம் பரப்பவேண்டும். நமது கைத்தறி நெசவாளர்களைச் சுதேசி நூலையே உபயோகிக்கும்படித் தூண்டவேண்டும். மெல்லிய ஆடைகளுக்குக் கிராக்கி அதிகமாயிருப்பதாற்றுன் அவர்களும் அதிக நம்பருள்ள விதேசி நூலை நெய்கிருர்கள். உயர்ந்த நம்பருள்ள ஆடையை நாம் விலக்கினுல் அவர்களும் குறைந்த நம்பருள்ள சுதேசி நூலை நெய்வார்கள்; விதேசி நூலும் துணியும் விழுங்கும் பெருந்தொகையும் மிச்சமாகும்.

## 40-க்குக் கீழும் 20-க்கு மேலும்

40-ஆம் நெம்பரும் அதற்குக் கீழானதுமுள்ள நூல்களை நெசவாளர் உபயோகிப்பாராயின் அத்தகைய நூல் எவ்வளவு கைத்தரிகட்கு வேண்டுமானுலும் அளிக்கக்கூடிய அளவு தென்னிந்தியாவில் நூற்கப்படுகிறது. முதலில் சில கஷ்டங்களேற்படலாம். ஆனுல் இதுதான் நமது தாய்நாட்டின் பொருட் குறைவையும் அடிமைத்தனத்தையும் ஒழித்து, வேலையின்றித் திண்டாடும் பலருக்கு ஜீவனமளிக்கும் வழியாகும்.

சர்க்காவில் நூற்கப்பட்டுக் கைத்தறிகளில் நெய்யப்படும் முரட்டுத் துணியாகிய காதியை ஆதரிக்கும்படி காங்கிரஸ் ஓயாது முறையிட்டுக்கொண்டேயருக்கிறது. இந்தத் தெய்வீகப் பசுவைத்தான் நாம் இப்போது காப்பாற்ற வேண்டும். காதி இயக்கத்தாற் போதிய ஊதியம் பெருத கைத்தரியாளர் 20-க்கு மேற்பட்டு 40-க்குக் குறைந்த நம்பருள்ள மில் நூலை நெய்யலாம். இது நல்ல நூலாயிருப்பதுடன் போதிய அளவு கிடைக்கும். இதனுலான ஆடைகள் துரிதமாகவும் விற்கும். விதேசித் துணியைப் பகிஷ்கரித்து இதைப் பெருக்கக் காங்கிரஸ் எத்தகைய உதவியும் செய்யச் சித்தமாயிருக்கிறது.

ஆனுல் 20-க்குக் கீழ்ப்பட்ட மில்நூலைக் கைத்தரியாளர் நெய்யக்கூடாது, அப்படிச் நெய்தால் காதி ஓங்காது. அப்படிச் செய்வதால் அவர்கள் காங்கிரஸால் ஏற்பட்ட வசதியைக் கொண்டு தாங்கள் பணம் சம்பாதித்துக் கொண்டு காங்கிரஸின் நோக்கத்திற்கே முட்டுக்கட்டை போடுகிருர்கள். இது இருவகையில் குற்றமாகும். ஆகவே, சுத்த கதர் நெய்யாத கைத்தரியாளரை மெல்லிய நூலையும் அன்னிய நூலையும் கைவிடுமாறும், 20-ஆம் நெம்பருக்குக் கீழேபோகாமலும் 40-க்கு மேற்படாமலும் நெய்யுமாறும் காங்கிரஸ் வேண்டிக்கொள்ளுகிறது. அப்பொழுதுதான் காங்கிரஸூம், மகாத்மாவும், அவரால் செலுத்தப்படும் தேச முழுமையும் கைத்தரியாளர்களை முழுமனதுடன் ஆதரித்து, விதேசித் துணிகளும் மில் துணிகளும் அவர்கள் வாயடிப்பதைத் தடுப்பார்கள். கைத்தரியாளனுக்கு இங்லிஷ், ஜப்பானிய, இந்திய மில் துணியெல்லாம் ஒன்றே. எந்த மில் துணியாயிருந்தாலும் அவனது அமைதியான, நெடுநாளதான குடிசைக் கைத்தொழிலைக் கெடுக்கிறது. மற்றத் துணிகளைக் காட்டிலும் கைநெசவுத் துணிகட்கே நாம் ஆதரவு அதிகமளிக்க வேண்டும். ஆனுல் கைத்தரியாளரும் விதேசி நூலையொழிக்க வேண்டும்.

நமது கைத்தரியைப் பாழ்படுத்தி நம் நாட்டுப் பொருளையெல்லாம் உறிஞ்சுவதற்குச் சரசமான முரட்டு ஜப்பான் துணியாகிய பூதம் புறப்பட்டிருக்கிறது. அது நம் நாட்டில் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டு நமது (அதிலும் நமது பெண்களது) விருப்பத்தைக் கவருமாறு பலவிதமாக வர்ணங்களிடப்பட்டு அச்சடிக்கப்படுகிறது. தேசாபிமானம் சிறிதேனுமுள்ள எந்த வியாபாரியும் இத்துணியில் தனது பொருளையும், திறமையையும் செலவழித்து நமது சகோதர நெசவுக்காரர்கள் கஞ்சியின்றிக் கதறுவதைப் பார்க்கத் துணியான் என நம்புகிறேன்.

---


# புதிதாகக் கணிக்கப்பட்ட இந்திய ஜனசங்கியை

| | |
|---|---|
| இந்தியாவிலுள்ள மொத்த ஜனங்களின் தொகை | 352,986,876 |
| ஆண்கள்மட்டும்: | 181,921,914 |
| பெண்கள்மட்டும்: | 171,064,962 |
| இந்தியாவிலுள்ள மொத்த இந்துக்களின் தொகை: | 238,330,912 |
| மகமதியரின் தொகை: | 77,743,928 |
| சீக்கியரின் தொகை: | 4,366,442 |
| கிறிஸ்துவரின் தொகை: | 5,961,794 |

இதன் பிரகாரம் 1921-இல் (பத்து வருடங்கட்கு முன்) இருந்ததைவிட இப்பொழுது நூற்றுக்கு 10·6 வீதம் ஜனத்தொகை பெருகியிருக்கிறதாகத் தெரிகிறது.

---






மெக்ஸிகோவில் விஷமற்ற ஒரு வகைப் பாம்புகளை எலி பிடிப்பதற்காக உபயோகிக்கிருர்கள்.

* *

மேனுட்டுப் பெண்கள் தங்கள் தொப்பிகளில் சூரியகிரணங்களைக் கிரகிக்கும் கண்ணுடிகளை அணிகிருர்களாம். அதனுல் சரீர சௌக்கியம் அதிகரிக்கிறதாம்.

* *

ஆப்பிரிக்காவில் ஒரு அதிசயமான மரமுண்டு. உயரம் 2 அடி; சுற்றளவு 4 அடி. அதற்கு இரண்டே கொம்புகளும் கொம்பொன்றுக்கு இரண்டு இலைகளுமே யுண்டு.

* *

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையேயுள்ள கடலில் மட்டும் சுமார் 8 கோடி பொன் பெறுமான தங்கமும் நகைகளும் அமிழ்ந்துகிடக்கின்றனவாம்.

* *

இதாலியில் பிரம்மாசாரிகளிடமிருந்து வசூலிக்கும் வரி மட்டும் வருஷத்துக்கு 5 லக்ஷம் பொன்னுகிறது. பெரிய குடும்பங்கள் விசேஷப் பரிசு பெறுகின்றன.

* *

உலகக் கோடீஸ்வரர்களில் பேர்பெற்ற திரு ஜான். டி. ராக்பெல்லர் தமது 19-வது வயதில் வாரம் 3 ஷிலிங் சம்பளத்துக்கு வேலையில் அமர்ந்தாராம். அவருக்கு இப்பொழுது வயது 93.

* *

நியூயார்க்கில் ராக்ஸி நடன சூலையிலுள்ள ரத்னகம்பளம் 2டன் நிறையுள்ளது. அதை 36 பேர் இராப்பகலாய்த் தயாரித்தனராம். வால் டார்ப் ஹோட்டலிலுள்ள ஒரு ரத்னகம்பளம் அதைவிடப் பெரியதாம். அது 70 அடி நீளமும் 50 அடி அகலமுமுள்ளது. அதை 30 நிபுணர்கள் 10 மாதங்களிற் தயாரித்தனராம்.

* *

ஈரோடுக்கருகிலுள்ள காகம் என்னும் கிராமத்தில் ஒரு கோழிமுட்டையிலிருந்து 1-தலை 4-வாய்கள் 4-இரக்கைகளுடைய குஞ்சொன்று வெளிப்பட்டு உடனே இறந்தது. அத்துடன் இடப்பட்ட மற்ற முட்டைகளிருந்து சாதாரண குஞ்சுகளே வெளிப்பட்டன.

* *

ஷெப்பீல்டில் செயற்கைப் பொன் தயாரிக்கப்படுகிறது. அதை வெள்ளைச் செம்பு விலைக்கு விற்கக் கூடுமாம். அது அலுமினியம், செம்பு இவற்றின் கலப்பால் செய்யப்படுகிறது. தீமையற்றது; சுத்தம் செய்யக்கூடியது; கடினமானது.

* *

உடையாத கண்ணுடியைத் தற்போது காலிபோர்னியாவில் கண்டுபிடித்துள்ளார்கள். அது நன்ருக வளைகிறது. அது வெள்ளியைச் சூடாக்கும் வழியால் செய்யப்படுகிறது. மரச் சத்திலிருந்து செய்யப்படும் மற்ஞெரு விதக் கண்ணுடி பார்வையிலும் உபயோகத்திலும் சாதாரணக் கண்ணுடிபோலவே யுள்ளது. ஆனுல் அதைக் காகிதம்போல் மடித்துச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொள்ளலாம்.

* *

சுமாத்ரா தீவில் 'கிரைடி' இலை என ஒரு இலையிருக்கிறதாம். ஒரு செடிக்கு ஒரே இலை. அது சுமார் 2 ஆள் உயரமும் ஒரு ஆள் அகலமும் உள்ளது.

* *

சொல்வது பொய்யா மெய்யா எனக் கண்டுபிடிக்கும் யந்திரமொன்று லண்டனில் இருக்கிறதாம். திருடர்கள் பொய் சொல்லுகிருர்களா என்றறியப் போலீசார் இதை உபயோகிக்கிருர்களாம்.

* *

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் என்னுமிடத்தில் ஏராளமான முதலைகளை உற்பத்தி செய்து வியாபாரம் செய்கிருர்கள்.

* *

லண்டனில் சுமார் 40 வருஷங்களாகத் தபால் பியூனுக இருந்த ஸ்ரீ ஹானகூக் என்பவர் தமது ஓய்வு நேரங்களில் சித்திரம் எழுதப் பழகிவந்ததால் ஒரு பெரிய சித்திரக்காரராய் இப்பொழுது விளங்குகிருராம்.

* *

ஒருதபால் கடிதம் 120 நாட்களில் உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் சுற்றிவந்துவிடுமாம்.

* *

மை ஒழுகாத பௌன்டன் பேனுவைக் கண்டுபிடித்ததற்காக திரு. ஜே. வில்பென் என்னும் ஆங்கிலேயர் 250,000 பொன் சன்மானம் பெற்ருராம்.

* *

எரிமலைகள் கக்கும் தூசு காற்றின்வழியே சுமார் 500 மைல் வரை செல்லுமாம்.

# காந்தியார் படலம்

வழிமுடிய ஜனங்கள் தம்மீது தூவிய புகழ்ச்சி மலர்களுடனும், கணக்கில்லாது அனுப்பிய மங்களவாழ்த்துக்களுடனும், குதூகலத்தோடு அனுப்பிய பணமுடிப்புக்களுடனும், அடிகளார் செப்டம்பர் 12-ந்தேதி லண்டன் போய்ச் சேர்ந்தார். அங்கு அவரை, ராஜதந்திரிகளும், பத்திரிகாசிரியர்களும், சாஸ்திர வல்லுநரும் தேனை மொய்க்கும் எறும்புகள்போன்று சூழ்ந்துகொண்டனர். அங்கும் அவர் ஏழைமக்களது தெய்வமாக விளங்குகிறார். அவர்கள் "எங்களது காந்தி, நல்ல தாத்தா!" எனப் பலவாறு கனிவுடன் கூறுகின்றனர். அவரது வசீகரமான முகமும், இணையற்ற ஒழுக்கமும், எளிய ஆடையும், வாக்குவன்மையும், ஏதோ சில உணர்ச்சியற்ற மரத்துண்டுகளைத் தவிர, மற்றவரது மனங்களைக் கொள்ளை கொண்டுவிட்டன. இங்கிலாந்திலும் "வந்தேமாதரம்", "காந்திக்கு ஜே" என்னும் கோஷங்கள் முழங்க ஆரம்பித்துவிட்டன. கிங்ஸ்லி ஹாலிலிருந்தே அவர் ஒலிபரப்பும் கருவி வாயிலாக இந்தியா மேற்கொண்டுள்ள சாத்வீகப்போரின் பெருமையைப்பற்றி அமெரிக்காவோடு பேசினார். அமெரிக்கர் அவர் ஆங்கிலமொழியி லடைந்துள்ள தேர்ச்சியைக் கண்டு பிரமை கொண்டனர்.

அவ்வப்போது தாம் நிகழ்த்திய அரிய சொற்பொழிவுகளில் அடிகளார் தமது கோரிக்கையைத் தெளிவுபட எடுத்துக் காட்டியுள்ளார். இந்தியாவுக்குச் சாந்தியளிக்க பிரிட்டன் தியாகம் செய்யாதிருக்க முடியாது என்றும், காங்கிரஸின் தீர்மானமான பூரண சுயேச்சையை நிறைவேற்றி வைப்பதற்கே அவர் முயல்கிறார் என்றும், அத்தகைய பூரண சுயேச்சையாவது இங்கிலாந்தையும் இந்தியாவையும் சமரசமாகக் கைகுலுக்கச் செய்வதேயென்றும், இந்தியாவை வாள்முனையில் ஆளும் சக்தி இங்கிலாந்துக்கு இருக்குமாயினும், இரண்டும் அன்பென்னும் பட்டுக்கயிற்றினால் இன்புறக் கட்டுப்படுவதுதான் உலக சமாதானத்துக்கே ஏதுவா யிருக்கு மென்றும் விளக்கியுள்ளார்.

வட்டமேஜை மகாநாட்டின் உப்பு சப்பற்ற ஆடம்பரப் பேச்சைக் கண்டு, ஒரு அவசரமான மிக முக்கியமான காரியத்திற்காகக் கூட்டப்பட்ட மகாநாடு காரியத்தை மறந்துவிட்டு மாணவர்களது கூட்டம் போல வீண்விதண்டாவாதங்கள் பேசிக்காலங்கழிப்பது மிகவும் வருத்தத்துக் கிடந்தருகிறது என்று அவர் எச்சரிக்கை செய்துள்ளார். ஒட்டுரிமை, பணக்காரன் ஏழை, படித்தவன் பாமரன் என்னும் வித்தியாசமின்றி வழங்கப்படவேண்டு மென்றும், அனைவரும் கல்வியில் தேர்ச்சியடையவேண்டுமென்பது அவர் விருப்பமாயினும் அந்த ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்க முடியாதென்றும், இந்தியாவிலுள்ள ஐரோப்பியர் துரைத்தனத்தின் செல்வப்பிள்ளைகளா யில்லாது இந்தியரோடே கலந்துகொண்டால் வித்தியாசமின்றி ஆதரவளிக்கப் படுவார்களென்றும், சட்டசபைகளில் சில அங்கத்தினரைத் துரைத்தனத்தார் நியமிப்பது கூடாதென்றும், அப்படி யாராவது அறிவுக்கடலாயிருந்தால் அவர் யோசனைமட்டும் கூறி அதோடு வாயை அடக்கிக் கொள்ளவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் கொள்கையை மூடு மந்திரமாக வைத்துக்கொண்டு வண்டைக்காய்க் குழம்பு காய்ச்சுவதில் வெகு சமர்த்தர்களாக இருக்கிறார்களென்றறிந்து மகாத்மா "சர்க்கார் கல்பிள்ளையாரைப்போல் அசையாது கிடக்கிறது; மகாநாடோ நத்தைபோல் நகருகிறது." "இனி பொறுக்க மாட்டேன்" என்று கூறிவிட்டார். இந்தியா வேண்டும் சுயராஜ்யத்தைப் பார்லமெண்ட் கொடுத்தால், இந்தியாவின் நன்மைக்கு விரோதமில்லாமல் பிரிட்டன் சரக்குகட்குச் சலுகை காட்ட முடியும் என்றுரைத்துள்ளார்.

ஐந்து அல்லது பத்து வருடங்கட்குள் பாப்பராக்க கூடியதொரு துரைத்தனத்தை நடத்துவதைக்காட்டிலும் கட்டுப்பாட்டுக்கும் அடிமைத்தனத்துக்கு முட்பட்டு ஒரு கலகக்காரராக இருந்துவரவே விரும்புவதாகவும், சத்தியாக்கிரஹ முறையில் தமது உயிரையும் அர்ப்பணம் செய்யத் தயாராயிருப்பதாகவும், சிறையிலிடப்பட்டுத் தடிகளால் நையப் புடைக்கப் பட்டாலும் தமது உறுதியை விட்டு அடிமைவாழ்வை ஏற்று வாழாரென்பதாகவும் மகாத்மா பார்லமெண்டில் கர்ஜித்தார்.

அடிகளாரது திருவவதார தினத்தைக் கொண்டாடுவதற்காக கில்ட் ஹவுஸில் கூடிய இந்தியர்கள் கூட்டத்தில் அவர் "நானும் வேறு இந்தியப் பிரதிநிதிகளும் இங்கு வந்தது வேடிக்கைப் பார்த்துக் காலத்தை வீணுகக் கழித்துச் செல்வதற்கல்ல. பிரிட்டிஷ் சர்க்கார் சீக்கிரத்தில் திட்டமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு பரபரப்புடன் உருவான வேலையில் தலையிடா விட்டால் நான் உடனே இந்தியாவுக்குத் திரும்பி விடுவேன்" என்றார்.

அதே நாளில் சேவாசங்கத்தில் நடந்த வேறொரு கூட்டத்தில் "பிரிட்டிஷ் சிப்பாய்கள் விலகிக் கொண்டால் இந்தியாவின் கதி என்னவாகும்?" என்று ஒருவர் கேட்டாராம். அதற்கு மகாத்மா, "நாங்கள் எங்களைப் பயிற்சி செய்து கொண்டு காத்துக் கொள்ளக் கூடும். அமெரிக்கர், ஜர்மனியர், பிரென்சுக்காரர், ஜப்பானியர் ஆகிய அந்நிய நாட்டாரும் எங்களுக்கு விருப்புடன் உதவிபுரிவர் என நம்புகிறோம். அப்படி எங்களுக்குச் சக்தியில்லை, பிறருதவியும் எங்களுக்குக் கிடைக்கவில்லை என வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது எங்களது கோழைத்தனத்துக் கேற்ற கதியை நாங்கள் ஏற்கத் தயார். தைரியமில்லையேல், நாங்கள் அழியப் பின்வாங்க மாட்டோம். இங்கிலாந்துக்கு நாங்கள் ஒரு பாரமா யிருப்பதைவிடச் சாவதே மேல்.



சிறுவயதில் நான் இருளையும் நிழலையும் கண்டு பயந்தேன். ஆனால் இப்பொழுது அப்பயமெல்லாம் எங்கேயோ பறந்தது. நாட்டுச் சரித்திரங்களும் அத்தன்மையனவே" என வீரத் தொனியுடனும் தீரப் புன்னகையுடனும் உத்தர மிறுத்தார்.

ஜயந்தி கொண்டாட்டத்திற்காக வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனையில் நடந்த கூட்டத்தில் காந்திஜி புகன்ற வீரமொழிகளாவன :—

"வானம் இருள் மயமாயிருக்கிறது. ஆயினும் நாங்கள் மீண்டும் போர் புரியத் தயாரா யிருக்கிறோம். அவசியமாயின், கங்காநதி போன்று பெருக்கெடுத்தோடும் உதிரத்தைச் சிந்தவும் நாங்கள் தயார். ஆனால் எங்கள் எதிரிகளை நாங்கள் ஒரு துளியும் காயப்படுத்த மாட்டோம்."

மகாநாட்டின் போக்கையும், மகாத்மா இந்தியாவினின்றும் காலெடுத்து வைத்த உடனே இந்தியச் சர்க்கார் நடந்து கொள்ளும் முறையையும் கண்ட சர்தார் வல்லபாய் கூறுவதாவது:—

.........பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் நிலைநாட்டவே சர்க்காரார் விரும்புகிறார்கள். பொது ஜனங்களின் கோரிக்கைகளை அசட்டை செய்து அவற்றிற்கு விரோதமாகத் தாங்கள் நடக்கக் கூடுமென்ற அகங்காரத்தையே அவர்கள் காட்டுகிறார்கள்.

அதிகார வர்க்கத்துடன் போர்புரிய நாம் எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். ஆனால் நமது ஒப்பற்ற ஆயுதம் அஹிம்சையே என்பதைச் சிறிதும் மறக்கலாகாது. சத்தியத்தையும் அஹிம்சையையும் கைவிடாது உறுதியாகப் பிடிக்கவேண்டும்.

சுதந்தரப் போர் நெருங்கிக்கொண்டே இருக்கிறது போர் முரசின் முழக்கம் வெகு தூரத்திலிருந்து கேட்கின்றது. மறுபடியும் போர் ஆரம்பிக்கலாம். அப்பேரொலி பல்லாயிரக் கணக்கான மைல்களுக் கப்பாலிருந்து கடல்கள் கடந்து வந்து காதுகளைத் துளைக்கிறதே! அந்தப் போரைக் கடைசி வரை நடத்த நாம் தயாராக வேண்டும். அதில் நமது தேசத் தாயின் திருவடிகட்கே அனைத்தையும் அற்பணம் செய்வோமாக.

## சோதியின் சுடர்கள்

நமது மகாத்மாவாகிய காந்தி சூரியனது கிரணங்கள் உலகமெங்கும் பரவிப் பேரொளி பரப்பி வருகின்றது. ஆங்காங்கே மகாத்மா பொழியும் பிரசங்கங்களி லமைந்த அரிய உபதேசங்கள் உலக மக்களைத் தூய்மைப் படுத்திக்கொண்டு வருகின்றன. லண்டனில் அவரது புகழொளியைக் கண்டு அளவிலாது ஆச்சரியமுறும் அறிஞர்கள் அவரிடத்துப் பெருமதிப்புக் காட்டி அவரைப் பலபடி போற்றுகிறார்கள். அங்கு இச் சாந்த சூரியனது கிரணங்கள் நடத்தும் வேடிக்கைகளுட் சிலவற்றைப் பார்ப்போம்.

கப்பலில் பரம தாதா குழந்தைகளோடு குதூகலமாக விளையாடிக்கொண்டு சென்றா ரல்லவா? லண்டனிலும் அவரது களங்கமற்ற குழந்தை மனது குழந்தைகளைக் காந்தம்போ லிழுத்துப் பிணிக்கின்றது. அவர் குழந்தைகளின் தாதாவாக விளங்குகிறார். மகாத்மா வெளியிற் புறப்பட்டால் உடனே சிறுவர்கள் "அதோ காந்தி" என்ற ஆரவாரத்துடன் புற்றீசல் போலப் புறப்பட்டுக் குழுமி வேடிக்கை பார்க்க வந்துவிடுகிறார்கள்.

வயதானவர்கட்கும் காந்தி பித்தம் ஏறி யிருக்கிறது. அவரது உருவம் திகழும் பத்திரிகைகள் லண்டனில் பரபர வென்று விலையாகின்றன. பத்திரிகை விற்கும் பையன்களுங் கூட "இதில் காந்தி சமாசாரம் இருக்கிறது சார்" என்று கூவுகிறார்கள். காந்திப் பாட்டுப் பாட வேண்டுமென்னும் அவாவும் அங்கே கிளம்பிவிட்டது.

லண்டனில் அவருக்கு ஏற்படுத்தி யிருக்கும் சௌகரியங்கள் அம்மக்கள் அவர்பால் கொண்டுள்ள அபிமானத்தையும் மதிப்பையும் காட்டுகின்றன. அவர் கிங்ஸ்லிஹாலில் தங்கியிருக்கையில் அங்கிருந்து மகாநாடு நடக்கும் ஜேம்ஸ் மாளிகைக்கு வரச் சுமார் ஒரு மணியாகும். இடையில் வண்டி போக்கு வரவை ஒழுங்கு படுத்துவதால் வேறு தாமதமேற்படும். அதை யொழிப்பதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. காந்திஜீயின் மோட்டாருக்கு முன் ஒரு போலீஸ் மோட்டார் மணியடித்துக்கொண்டே செல்லும். அதைக் கேட்டவுடன் மற்ற மோட்டார்கள் வழி விலகிவிட வேண்டும். சாதாரணமாக வண்டிகள் இடது பக்கமே போகவேண்டு மல்லவா? காந்திஜியின் மோட்டார், அவசியமாயின், வலது பக்கமாகவும் போகலாம்.

மகாத்மாஜீக்குப் பல விருந்துகள் அளிக்கப் பட்டன. அவற்றில் அவர் உட்கொண்டது ஒரு கோப்பை ஆட்டுப்பால்தான். அவற்றில் ஒன்றில் அவருக்கொரு இராட்டினம் அளிக்கப்பட்டது. அவ்விருந்தில் பழங்கள் மட்டுமே வழங்கப்பட்டன.

உலகப் பிரசித்திபெற்ற கனவான்களுள் ஒருவராகிய ஹாஸ்ய ராஜா சார்லி சாப்ளின் காந்திஜியைப் பார்க்கவேண்டும் என்ற அவாவுக்காகவே அவரைக்கண்டு சுமார் ஒருமணி நேரம் அவருடன் அளவளாவினார். அப்பொழுது அவர் அன்பு மிகுதியோடு நடந்துகொண்டார். மகாத்மாவின் பக்கத்தில் அவர் முழங்காலிட்டு அவரது கருணை ததும்பும் கண்களைக் கனிவொடு நோக்கி இன்புற்றாராம்.

மகாத்மாவுக்குப் பல காணிக்கைகள் வழங்கப்படுகின்றன. பணப்பைகள் பல சேருகின்றன. ஒருவர் ஒரு உப்புப் பொட்டலத்தைக் காணிக்கையாக வைத்தாராம்.

காந்திஜிக்கு வரும் பல அன்புக் கடிதங்கள் அந்நிய நாட்டார் அவரிடம் கொண்டுள்ள பேரன்பை விளக்குகின்றன. 50 பவுன் செக்குடன் ஒருவர் அனுப்பிய கடிதமாவது: "யூஸ்டன்ரோட்டிலுள்ள நண்பர் கூடுமிடத்தில் தாங்கள் செய்த பிரசங்கத்தையும், ஒலிபரப்பி மூலம் அமெரிக்காவுக்குச் செய்த உபதேசத்தையும் வாசித்தேன். இவ்வரிய உபதேசங்களை வாசித்து உலகமக்கள் பெரும்பயன்

அடைவாரென நம்புகிறேன். தங்கள் கோரிக்கைகளை அவர்கள் ஈடேற்றுவரென வெண்ணுகிறேன். தங்களிடமும் தங்கள் உபதேசத்தினிடமும் யான் கொண்டுள்ள பக்திக்கறிகுறியாக இந்தச் செக்கை அனுப்புகிறேன். விருப்பமான வழியில் உபயோகிக்கவும்.

அடிகளார் லங்காஷயருக்குச் சென்றபொழுது அவருக்குப் பாதுகாப்பாக ஒரு போலீஸ் சைனியம் அனுப்பப்பட்டது. அம்மக்களது பருத்தித் தொழிலுக்கு அவரது இயக்கத்தாலேயே ஊறு நேரிட்டுள்ளதல்லவா? அப்படியிருந்தும் அவர்கள் நமது மகான் வசப்பட்டனர். அங்குள்ள தொழிற் தலைவர்கள் அவரை மரியாதையுடன் உபசரித்துப் பேரன்பு காட்டினர். தொழிலாளர்களும் "எங்கள் ஏழ்மையைப் போக்க வழி சொல்லுங்களேன்" என்று இரங்கினர். அவர்கட்கு அடிகள், "உங்கள் நிலைமை என்னுள்ளத்தில் ஊடுறுவிப் பாய்கின்றது. ஆனால் ஐயோ! எங்கள் நாட்டு மக்கள் இன்னுங் கேவலமாக அரைவயிற்றுக் கஞ்சிக்கும் முழத்துண்டு ஆடைக்கும் கதியற்றுக் கதறுகிறார்களே" எனக் கனிவுடன் பதில் மொழிந்தார்.

"லங்காஷயுரிலிருந்து கிடைத்த கணக்கற்ற கடிதங்களுள் ஒன்றில் கீழ்வருமாறு எழுதியிருந்தது:- "லங்காஷயர் பருத்தித் தொழிற்காரரில் யான் ஒருவன். காங்கிரஸ் தலைவர்களது வேலை எங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமளித்துள்ளது. ஆயினும் நான் தங்களிடம் அளவிலா அன்பு கொண்டுள்ளேன். லங்காஷயர் தொழிலாளர் பலரும் தங்கள் மேன்மையைப் பாராட்டுகிறார்கள்."

மற்றொன்று:—

"எங்களது அநியாயமான கள் வியாபாரத்தினால் நைந்து கிடக்கும் இந்தியக் குடிகளில் மாபெருந் தலைவராகத் தங்களைக் கடவுள் படைத்துள்ளார். ஆனால் தாங்கள் எங்களுடைய தலைவரே. தாங்கள் தான் சரியான கிறஸ்து தர்மத்தை அனுஷ்டிப்பவர். ஏனெனில் மற்றவர்கள் சாராயத் தெய்வங்களையே கட்டியழுகிறார்கள். நான் மதுவிலக்கில் பேருக்கமுள்ளவன். எந்தக் கூட்டத்தின் முடிவிலும் நான் மதுவிலக்குப் பிரசாரம் செயயாதிரேன். இவ்வுலகின் உண்மையான கொள்கைகளுடன் உழைத்து வருபவர் தாங்கள் ஒருவரே என்றும் எங்களது கொடியைத் தாங்களே வீரத்துடன் உயர்த்திப் பிடிக்கிறீரென்றும் நான் ஜனங்கட்கு உபதேசம் செய்வதைத் தாங்களே ராச்டேலுக்கு வரின் நேரிற் காணலாம். தங்களது பாதரக்ஷைகளைத் தொடவும் நான் அருகனல்ல. குடியால் குட்டிச்சுவராகும் இத்தேசத்தில் தாங்கள் குடியால் விளையும் அபரிமிதமான இன்னல்களை நன்கு விளக்குவீரென நம்புகிறேன்.

"தங்கட்கும் தங்களது புதல்வர், நன்பர்கள், சீடர்கள் அனைவர்க்கும் கருணைபுரியக் கடவுளை வேண்டுகிறேன். இப்பாழுங் குடியை இந்நாட்டில் ஒழிக்கத் தாங்கள் செய்யும் ஒப்பற்ற முயற்சிக்காக இங்கிலாந்து தங்கட்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இங்கும் இந்தியாவிலும் குடி ஒழிந்தால் இருதேசத்தினரும் கைகோத்து ஆனந்தக்களிப்புப் பாடி யாடலாம்."

---

## விளம்பரம்

### சித்தோடு கிராமம் மு—மணியகாரர்

இதுகாறும் ஈரோடு தாலூக்கா சித்தோடு கிராம மணியகாரராக இருந்தவர் மணியம் வேலையை விட்டுவிட, அவ்வூர் வாசியும் செங்குந்த குலாபிமானியும் புகையிலைப் பிரபல வர்த்தகரும் முதல் மகாநாட்டு நன்கொடையாளிகளில் ஒருவருமாகிய திரு. செ. பொன் சடைய முதலியார் அவர்கள் செல்வப் புதல்வர் திரு. சுப்பராயன் என்பவரை அரசாங்கத்தார் ஷை கிராம மு. மணியகாரராக நியமித்ததைக் கேட்டுப் பெரிதும் மகிழ்வடைகிறோம்.

---

### திருச்செங்கோடு போர்டு ஹைஸ்கூல் அட்வைஸரி கமிட்டி தலைவர்

நமது முதலாவது வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புத் தலைவராகிய திருச்செங்கோடு காலஞ்சென்ற ஸ்ரீமான் T. R. கந்தப்ப முதலியார் அவர்களின் சகோதரரும் பிரபல வியாபாரியுமான ஸ்ரீமான் T. R. வையாபுரி முதலியாரவர்கள், திருச்செங்கோடு போர்டு ஹைஸ்கூல் அட்வைஸரி கமிட்டி தலைவராகவும், பஞ்சாயத்துக் கோர்ட்டு அங்கத்தினராகவும், சேலம் ஜில்லா முனிசிபல் கவுன்சிலர் அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டிருப்பதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம்.

---



# கி ள ர் ச் சி

## சென்னை ஜில்லா

### திருமயிலைச் செங்குந்த வாலிபர் சங்கம்

ஷை சங்க ஆதரவில் 1-8-31ந்தேதி மாலை 6-மணிக்கு ஷை சங்கவாசகசாலையில் திருவாளர். P. C. சம்பந்த முதலியார் தலைமையில் திருவாளர்கள். M. மோஹனசுந்தர முதலியார், மு. சுந்தரவடிவேலு முதலியார் அவர்கள் "ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகளின் உண்மை வரலாறு" என்னும் விஷயத்தை ஆராய்ச்சி முகத்தான் பலபடச் சொற்பொழிவாற்ற, தலைவர் முடிவுரை கூறப்பட்டு இரவு 8 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

மு. சுந்தரவடிவேலன், காரியதரிசி.

---

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சீபுரம் அய்யங்கார்பாளையம் செங்குந்தர் சத்தியநெறி இளைஞர் சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் 11-7-31 மாலை 7-மணிக்கு ஸ்ரீபணாமணீஸ்வரர் ஆலயத்தில் திரு. M. அன்னப்ப முதலியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் தாய்மொழி, விடாமுயற்சி, வித்தை விரும்பு இந்தியாவில் வறுமையைப் பெறுக்கும் காரணங்கள் முதலியவைகளைப் பற்றி முறையே திருவாளர்கள் M. கோவிந்தராஜன், R. குப்புசாமி, T. பூங்காவனம், R. வீரபத்திரன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின், வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது கலைந்தது.

மேற்படி ஆலயத்தில் 18-7-31 மாலை $7\frac{1}{2}$ மணிக்குத் திரு. K. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் நன்றி மறவேல் உண்மையின் உயர்வு, புத்திரர் கடமை, வீரம் கைவிடேல் முதலியவைகளைப்பற்றி முறையே திருவாளர் T. பூங்காவனம், K. கந்தசாமி, R. குப்புசாமி, S. கண்ணப்பன் அவர்கள் பேசினார்கள். தலைவர் பின்னுரையின் பின் கூட்டம் வந்தனோபசாரத்துடன் இனிது கலைந்தது.

1-8-31 மாலை $7\frac{1}{2}$ மணிக்குத் திருவாளர் S. V. கோபால அய்யங்கார் தலைமையில் கூடிய கூட்டத்தில் கடவுள் வணக்கம் பாடப்பெற்றதும் திரு. A. பெருமாள் "கல்வி" என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசிய பின்பு திரு. R. வீரபத்திரன் அவர்கள் மேற்படி விஷயத்தைப் பற்றிப் பின் தொடர்ந்து பேசினார். தலைவர் முடிவுரையின் பின் இரவு $9\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

15-8-31 மாலை 7 மணிக்குத் திரு. R. வீரபத்திரன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் கற்று, குலம், செல்வம் முதலியவைகளைப் பற்றி முறையே M. சண்முகசுந்திரம், M. கோவிந்தராஜன் A. பெருமாள் அவர்கள் பேசினார்கள். தலைவர் தம் முடிவுரையில் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசிய பிறகு, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது கலைந்தது.

22-8-31 மாலை 7 மணிக்குத் திருவாளர். M. அன்னப்ப முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகித்த கூட்டத்தில் திரு. R. வீரபத்திரன் அவர்கள் "கற்பு" எனும் விஷயத்தைப்பற்றி விரிவாகப் பேசிய பிறகு திரு. M. கோவிந்தராஜன் அவர்கள் "ஒற்றுமை" என்பதைப்பற்றிப் பிரசங்கித்தார். அக்கிராசனர் தம் முடிவுரையில் ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினதும், காரியதரிசியால் வந்தனோபசாரங் கூறப்பட்டு இரவு 9 மணிக்கு 'ஜே" கோஷத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

12-9-31 மாலை 7 மணிக்குத் திரு. R. வீரபத்திரன் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில், கல்வி, வீதிவிடங்கன் சரித்திரம், நட்பு, மித்திரபேதம் முதலியவைகளைப் பற்றி முறையே திருவாளர்கள் M. சண்முகசுந்திரம், S. கண்ணப்பன், K. கந்தசாமி, A. பெருமாள் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் தமது முடிவுரையில் கல்வியின் அவசியத்தைப்பற்றி விரிவாகப் பேசியபிறகு காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்றதும் இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

26-9-31 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மேற்படி சங்கத்தின் ஆதரவில் மேற்படி சங்கத் தலைவர் திரு. ம. அன்னப்ப முதலியார் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் கூடியது. கடவுள் வணக்கம் திரு. R. வீரபத்திரனால் பாடப்பெற்றதும் காரியதரிசியால் சென்ற கூட்டத்தின் குறிப்பு வாசிக்கப்பெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் காரியதரிசியவர்கள் ஓர் சிறிய சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு தீர்மானங்கள் நிறைவேறியதும் கூட்டம் $8\frac{1}{2}$-மணிக்கு இனிது கலைந்தது.

R. வீரபத்திரன், காரியதரிசி.

---

## வடாற்காடு ஜில்லாவில்

### தலைச்சங்கப் பிரசாரம்

சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரகர் திரு. பி. செ. மாணிக்க வாசக முதலியார் 18-8-31-ந் தேதி சென்னையினின்றும் புறப்பட்டு வடாற்காடு ஜில்லாவின் பல முக்கிய இடங்களில் குலப் பிரசாரம் சந்தா வசூல் ஆகிய வற்றின் நிமித்தம் சுற்றுப் பிரயாணஞ் செய்தனர். இவ்வாறு செய்த சுற்றுப்பிரயாணத்தின் போது 31-8-31-ந் தேதி செலந்தம்பள்ளியிலும், 3-9-31-ந் தேதி காங்கேய நல்லூரிலும், 12-9-31-ல் முள்ளிப்பட்டிலும், 13-9-31-ந் தேதி ஆரணி சைதாப்பேட்டையிலும் குலப் பிரசாரம் புரிந்தனர்.

செலந்தம் பள்ளியில் பிரசாரகர் தலைமை வகித்து மறியல்களால் செங்குந்தர்களடையும் நன்மைகளை விளக்கிக் கூறினர். அச்சமயம் தலைவர் தடுத்தும் கேளாமல் ஓரன்பர் அன்று வாங்கிய புதிய விதேசித் துணியைத் தீக்கிரையாக்கினர். பின்னர் தலைவர் கருத்திற் கிணங்க திருப்பூர் ராஜம் அவர்கள் சொற்பொழி வாற்றினர்.

1-9-31-ந் தேதி கஸ்பா ஆமூர் அடைந்த போது இளைஞர்கள் ஓர் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்தனர். கூட்டத்திற்குப் பெரியவர்கள் வரவில்லை. பிரசாரகரிடம் பகலில் ஊக்கங் காட்டிய பெரியவர்களும் வராததால் பிரசாரகர் உபந்யசிக்க மறுத்து விட்டனர். இது இளைஞர்கட்கு வருத்தந் தரத்தக்க தாயினும் பெரியவர்கள் கூற்று பிரசாரகருக்கு அளவிறந்த துன்பந் தந்ததென்பதை அவர்கள் உணர்ந்து சாந்தி யுறுவார்களாக. அவ்வூரில் நடைபெறும் சுபாசுப காரியங்களில் தலைச் சங்கத்திற்கென வசூலிக்கப் பெற்றுள்ள நன்கொடைகளை விரைவில் அனுப்புவதாக ஆங்குள்ளார் வாக்களித்தனர்.

காங்கேய நல்லூரை யடைந்தபோது அனைவரும் உபசரித்து ஆலயத்தில் ஓர் பொதுக் கழகம் கூட்டினர் அதில் பிரசாரகர் "கல்வியும் ஒழுக்கமும்" என்பதுபற்றி உபந்யசித்தார்.

முள்ளிப்பட்டு கிராமச் செங்குந்தப் பெருமக்கள் காட்டிய அன்பு அளவு கடந்தது. 12-9-31-ந் தேதி பெருங் கூட்டத்தில் பிரசாரகர் "முன்னேற்ற முறைகள்" என்பது பற்றி உபந்யசித்ததன் பயனாய்ச் செல்வ விநாயகர் செங்குந்தர் சங்கம் என ஓர் கிளைச் சங்கம் நிறுவப்பட்டுத் தலைச் சங்கத்தோடு இணைக்கவும் தீர்மானிக்கப் பெற்றது.

மறுநாள் சைதாப்பேட்டையில் கூடிய கூட்டத்தில் "குடியினால் வருங் கேடு" என்பது பற்றிப் பிரசாரகர் சொற்பொழி வாற்றினர். அவ்வூர்ச் செங்குந்தர்கள் குடிக்கக் கூடாதெனச் சாதிக் கட்டுப்பாடு செய்திருப்பது பாராட்டத் தக்கது.

பிரசாரகரை ஆங்காங்குள்ள குலாபிமானப் பெரியார்கள் வரவேற்று உபசரித்து வேண்டிய ஒத்தாசை புரிந்தமைக்குத் தலைச் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

---

## தென்னார்க்காடு ஜில்லா

### விழுப்புரம் தாலுக்கா தென்பேர் மதுரா புதுப்பாளையம் கிராமம்

### ஸ்ரீ காந்தி ஜயந்தி காங்கிரஸ் கொடியேற்று விழா

2-10-31 வெள்ளிக்கிழமை இரவு சுமார் 7 மணிக்கு ஷை யூர் திருவாளர் மு. அ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களுடைய ஆதரவின் கீழ் ஸ்ரீ மகாத்மா காந்தி ஜயந்தியின் திருநாளை யொட்டி ஷை யூர் ஸ்ரீ வாகீஸ பக்தஜன சபா கோஷ்டிகளுடனும் இன்னும் சில பிரமுகர்களுடனும் சுதேசிக் கொடி தாங்கி ஸ்ரீ மகாதமாவின் பிரதிபிம்பத்துடன் ஷை வாகீஸ பக்தஜன சபா மடாலயத்திலிருந்து சுதேசிக் கீத கோஷத்துடன் வீதி வலம் வந்து ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்தின் முன்புள்ள பொதுமைதான மந்தைகரையில் கொடியேற்றுவிழா செய்து யாவரும் ஜே கோஷத்துடன் கொடி வணக்கஞ் செய்து அங்குள்ள பெரிய கூட்டத்தினிடையே ஷை திரு. மு. அ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்த் திரு. ஜி. முனிசாமி முதலியார் அவர்களால் ஸ்ரீ மகாத்மா காந்தியடிகளின் அவதார வைபவங்களைப் பற்றியும் அவரால் உலக நன்மையின் பொருட்டு நியமிக்கப்பட்ட காங்கிரஸின் சட்டதிட்டங்கப் பின்பற்றி நாம் நடக்கவேண்டிய அம்சங்களைப் பற்றியும், திரு. எஸ். குப்புராவ் அவர்களால் நமது இந்தியாவில் பிரிட்டிஷ் சர்க்கார் பணக்கொள்ளை கொண்டு போகும் சூக்ஷமங்களைப் பற்றியும் திரு. ஆ. சு. வைத்திலிங்க முதலியார் அவர்களால் கத்தர் இயக்கம் தோன்றிய காரணங்களைப் பற்றியும் கத்தர் அணிவதால் நம் தேயத்திற்கு உண்டாகும் நன்மைகளைப் பற்றியும் நெசவுத் தொழிலாளர் ஆகிய நாம் அனைவரும் நாமே நூல் நூற்றும் கிரயத்திற்குக் கத்தர் நூல் வாங்கியும் நெசவு நெய்து போராத துணிகளை விலைக்கு வாங்கி வருகிர தீபாவளி பண்டிகை ஆரம்பத்திலிருந்தே அவசியம் கத்தர் அணிய வேண்டுமெனவும் திரு. ச. வை. துரைசாமி முதலியார் அவர்களால் கள், சாராயம் அருந்துவதால் விளையும் தீங்குகளைப் பற்றியும் அருந்தாவிடின் நாம் புனிதராகி பொருள் மீதமாவதோடு சுகவாழ் வெய்தலா மென்றும், இனி யாரும் கள் சாராயம் குடியாதிருக்குமாறு மிகவும் பணிவுடன் சொற்பொழிவு நிகழ்த்தினர். திரு. சு. குப்புசாமி ஆச்சாரி அவர்கள் ஒற்றுமை யென்பது யாவற்றிற்கும் மிகவும் அவசியம் என்பதைப்பற்றி விரிவாக எடுத்துரைத்து இரவு சுமார் $11\frac{1}{2}$ மணிக்கு ஜே கோஷத்தினிடையே கூட்டம் இனிது முடிந்தது.

---

## சிதம்பரம்

### செங்குந்தர் கழகத் திறப்பு விழா

9-9-31 மாலை 5 மணிக்குச் செங்குந்த விநாயகர் கோயில் தெருவிலிருக்கும் பெண் பாடசாலையில் தொடங்கப் பெற்றது. அவ்வமயம் அண்ணாமலைப் பல கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் ஸ்ரீமான் P. R. சேதுப் பிள்ளை B. A., B. L., அவர்கள் மேளவாத்தியத்துடன் வரவேற்றார்கள். பின்பு தலைவரை ஸ்தானத்தில் அமரச் செய்தார்கள். அதற்குப் பின் உயர்திரு. க. முருகேச முதலியார் அவர்கள் தலைவருக்கு வந்தனோபசாரங் கூறி இச் சங்கம் நிறுவவேண்டியது அவசியமென்றும் இதற்கு ஒற்றுமை அவசியம் என்றும் சுமார் முக்கால் மணி நேரம் வெகு அழகாகப் பேசினார்.

பின்பு தலைவரவர்கள் தாங்கள் செங்குந்த மரபின ரல்லாதவரா யிருந்தும் இச்செங்குந்த கழகத் திறப்பு விழாவிற்குத் தலைமை யேற்று இச்சங்கத்



# மதிப்புரை

## உடற்பயிற்சி

தேக சௌக்கியத்தைக் காற்றிற் பறக்கவிட்டுச் சுவரில்லாது சித்திரமெழுத வெண்ணியிருந்த நாம் இப்பொழுதாவது விழித்தெழுந்து "ஐயோ சுவர் இடிந்து பாழாய்க் கிடக்கிறதே. நமது அழகிய சித்திரத்தை எதிற் றீட்டுவது" எனக் கேள்வி கேட்கவாரம்பித்திருக்கிறோம் என்பது மகிழ்வுக் கிடந்தருகிறது. அத்துறையில் அனுபவ முதிர்ந்த ஆசிரியர்கள் முன்வந் துழைக்கிறார்கள் என்பது நமது மகிழ்ச்சியைப் பன்மடங்காக்குகிறது. திரு. லெ. சோமசுந்தரன் அவர்கள் அத்தகைய ஆசிரியர்களி லொருவர். அவர் அவ்வப்போது அனுபவத்திற் கண்டவற்றை நூல்கள் வாயிலாக வெளியிடுகிறார். அத்தகைய நூல்களுளொன்றாய "உடற் பயிற்சி" என்பது அவற்றுள் தலைசிறந்ததென நம்புகிறோம். அதிற் சுமார் 30 தேகாப்பியாசங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன. அவற்றை நன்குணருமாறு அவற்றை விளக்கும் புகைப்படங்களும் சுமார் 50 திகழ்கின்றன. இந்நூலின் முதற் பகுதியிற் பொதுவாகச் சுகவாழ்வனுபவித்திற்கு வேண்டிய முக்கிய விதிகள் விவரிக்கப்பட்டுள்ளன. வழவழப்பான அழகிய காகிதத்தில் பல அழகிய படங்களுடன் அச்சிடகபட்டுக் கலிகோ கட்டடமும் பெற்றுள்ள இப் புத்தகம் தமிழில் தேகப் பயிற்சி பற்றிய நூல்களை வெளியிடும் முறையில் மேனாட்டாரது வழக்கத்தை யொட்டிய ஒரு புதுமையைப் புகுத்துகிறது.

பிள்ளைகளே பிற்காலப் பிரஜைகளாகையால், இதைச் சிறப்பாக மாணவர் உபயோகத்துக்காகத் தயாரித்த ஆசிரியரது நோக்கம் சால்புடைத்தேயாம். மாணவரும் மற்றையோரும் இதை வாசித்து இதிலடங்கியவற்றை அனுபவத்திற் கொண்டு நற்சுக மடைவதே அவருக்குத் திருப்தி யளிப்பதுடன் நன்றியுமாற்றும்.

கிடைக்குமிடம்:—பிலிகல் கல்சர் ஹால் கீழச் சிவர்பட்டி, இராமநாதபுரம் ஜில்லா.

---

## உடற்பயிற்சி விளக்கம்

இந்திய மக்களது உடல் வன்மையை வளர்ப்பதின் அத்தியாவசியத்தை யுணர்ந்து அதற்கேற்ற உண்மைகளை உபதேசித்து உழைத்துவரும் தேகப் பயிற்சி ஆசிரியருள் ஒருவரான ஆவி. சித. சொக்கலிங்கன் அவர்களும் முன்சொன்ன சோமசுந்தரனாரது குழுவைச் சார்ந்தவர். அவர் ஆக்கிய இப் புத்புத்தகம் உடல் வன்மையின் அவசியத்தையும், அதை யடையும் மார்க்கங்களையும், அதற் கிடையூறாயுள்ள நோய், தீய பழக்கங்கள் முதலியவற்றினாலுண்டாம் தீமைகளையும், அவற்றை யொழிக்க வேண்டிய அவசியத்தையும் அரிய மேற்கோள்களுடன் செவ்விய நடையில் விரிவுற விளக்குகின்றது. இதற்குப் பல அறிஞர்கள் நல்லபிப்பிராய மளித்துள்ளதே இதன் தன்மையை நன்கு விளக்கும். இது தேகசுகம் நாடும் மக்கட்குப் பெரிதும் பயன்படுமென நம்புகிறோம். விலை அணா 6

ஆசிரியர் விலாசம்: வலம்புரி பொன்னமராவதி போஸ்டு.

---

## ஆஸ்திக நாஸ்திக ஸம்வாதம்

கிருஷ்ணகிரி உண்மை விரும்பி என்னும் பெயர் பூண்டவரால் பலவாண்டுகட்கு முன் இயற்றப் பெற்றுச் சமதர்ம நாத்திகர் C. K. குப்புசாமி அவர்களால் ஆர்வத்துடன் வெளியிடப்பெற்ற இந்நூலின் தன்மையைச் சுயஞானி திரு. M. V. கோபாலகிருஷ்ணன் என்பாரது மதிப்புரை நன்கு எடுத்துக் கூறுகிறது. ஒரு ஆத்திகர்க்கும் ஒரு நாத்திகர்க்கும் தத்தம் கொள்கைகளைப் பற்றிய விவாதம் ஆரம்பிக்கிறது. அது தொடர்ந்து செல்ல இறுதியில் கடவுள் சமயம் எனக் கலங்கி விழுவதெல்லாம் கண்மூடித்தனத்தால் விளையும் கேடே யென முடிவு கட்டப்படுகிறது. "ஐயையோ! எத்தனையோ காலமாய் என்னென்னவோ பாடுபட்டுச் சம்பாதித்ததை..........நாசப்படுத்தினீரே" என்று ஆரம்பத்தில் நாத்திகர் மீது வெகுண்டெழுந்த ஆத்திகர், "என்னப்பனே! ஒப்பிலா அருந்துணையே! அஞ்ஞானமென்னும் படுகுழியினின்றும் மேலேற்றிய மெய்ஞ்ஞான வொளியே!........அபயமென் றடுத்தவென்னை உபயகரத்தானு மடித்தவன் போன்ற கடவுள் என்னுமப் பரம பாதகனை........" என்று கூறும் நிலைக்கு வந்துவிடுகிறார். இந்நூல் இருதிறத்தார்க்கும் மூளை வேலை யளிக்க வல்லது. காஞ்சிபுரத்தில் வெளியிட்டோரிடம் இஃது அடக்க விலையாகிய ஆறணாவுக்குக் கிடைக்கும்.

---

## தெய்வ தற்சொரூபன்

பிண்ட்லே பிரைஸுக்காக (Findlay Prize) எழுதப்பட்டு முதற் பரிசுபெற்ற இந்நூல் G. V. ஜாப் எம்.எ., எல்.டி., என்னும் சென்ட் கொலம்பிய உயர்தர கலாசாலைத் தலைமையாசிரியரால் இயற்றப்பட்டது. ஆசிரியர் இதிற் கிறிஸ்துநாதரின் வாழ்க்கையையும், அரிய உபதேசங்களையும் ஆயத்த காண்டம், ஊழிய காண்டம், வெற்றி காண்டம், உபதேச காண்டம் என்னும் நான்கு காண்டங்களில் இனிய தமிழ் நடையிற் செவ்விதின் விளக்குகின்றார். கிறிஸ்து நாதரது உபதேசங்கள் உயர்வான உண்மைக ளென்பதற்கு அவை மற்ற மதத்தாரது கொள்கைகளிலும் கலந்து மற்ற மதத்தாராலும் போற்றப்படுகின்றன என்பதே சான்றாகும். "இயேசு நாதரது உண்மைச் சரிதத்தினையும் உயர்ந்த உபதேசங்களையும் நன்கெடுத்துக் கூறும் நூல் தமிழ் மொழியி லில்லையே" என்பாரது பெருங் குறையை இந்நூல் தீர்க்கும் என எண்ணுகிறோம். விலை ரூ. 1—0—0. விலாசம்:—கிறிஸ்தியன் லிடெடரி சொஸையடி, சென்னை, அலகாபாத், கொழும்பு.

## சசிவன்ன போதம்

தமிழுலகம் நன்கறிந்த இப் பண்டைய சமயநூலை தருக்க வேதாந்த போதகாசிரியர் காஞ்சி ஆ. செங்கல்வராய முதலியார் தத்துவப் பிரகாசிகை யென்னும்இனிய நடை வாய்ந்த விளக்கமான தமிழுரையுடன் வெளியிட்டுள்ளார். தமது உரைக்கு ஆதாரமாக ஆங்காங்கே வேத சுருதிகள் முதலிய பல பெரு நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாண்டுள்ளார். சமய விசாரத்தில் தலையிட்டுள்ளார்க்கே யன்றி ஏனையோர்க்கும் விளங்குமாறு இஃதியற்றப்பெற் றுள்ளது. இதன் விலை ரூ. 1-0-0.

---

## "விவேக சக்தி"

இப் பெயரிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் முதல் இதழ், தமிழ்நாடு ஜைன வாலிபர் சங்கத்தினின்றும் வரப்பெற்றோம். இவ்விதழில் சிறப்பாக ஜைனர்களுக்கும், பொதுவாக எல்லாத் தமிழர்களுக்கும் உபயோகமான பல வியாசங்கள் எழுதப்பட் டிருக்கின்றன. தமிழணங்குக்கு எழிலுண்டாக்கிய சமண சமயத்தில், மாதப் பத்திரிகை வெளியாக வேண்டியது இன்றியமையாததே. சமண முனிவர்கள் இயற்றிய அநேக அரிய நூல்கள் இன்னும் வெளிவராமல் அவர்களிடையே ஒளிந்து கிடக்கின்றன. அவைகளை இப்பத்திரிகை வெளிப்படுத்த முயற்சிக்கு மென்று நம்புகின்றோம்.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜைனர்களும் பிறரும் இப்பத்திரிகையை ஆதரிப்பார்களாக. இதன் வருடச் சந்தா ரூ. 1-0-0 வேண்டுவோர் "விவேக சக்தி" ஆபீ, குழப்பலூர் போஸ்டு, ஆரணி மார்க்கம் என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## பஞ்சாயத்து கைட்

கிராமப் பஞ்சாயத்துக்களின் உபயோகத்துக்கென்று எழுதப்பட்டது இந்நூல். இதில் கிராமப் புனருத்தாரணத்துக்கான விஷயங்களும், 1930 வருஷத்திய லோகல் போர்டு திருத்தச் சட்டத்தில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வேண்டிய சட்டப் பகுதிகளும் அடங்கி யிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்து மெம்பர்களுக்கும் பிரசிடெண்டுகளுக்கும் பஞ்சாயத்து ஆர்கனைஸர்களுக்கும் பஞ்சாயத்து நிர்வாகத்தில் ஒரு வழிகாட்டியைப்போ லிருந்து உதவி செய்யும். இதன் விலை ரூ. 1—0—0 வேண்டுவோர் இதன் ஆசிரியர் C. பாஸ்கர அய்யர், திருவத்திபுரம் போஸ்டு என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

(கிளர்ச்சி 268-வது பக்கத் தொடர்ச்சி)

தை நிறுவவேண்டி யதற்குரிய காரணங்களை எடுத்துக் காட்டியும் நமது குலத் தொழிலாகிய காரணங்களை எடுத்துக் காட்டியும் நமது குலத் தொழிலாகிய நெசவுத் தொழிலைப் பற்றியும் ஆசிரியர் திருவள்ளுவனார்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று கூறியதற்குச் சான்றாக நம்மரபினர் செய்ய நன்றி மறவாதவர்கள் என்று எடுத்துக்காட்டியும் இச்சங்கம் நடக்க வேண்டியதற்குறிய வழிகளையும், நம் மாணவர்களுக்குக் கல்வி அவசியம் வேண்டுமென்றும் சுமார் 2 மணி நேரம் அமிழ்தினுமினிய தமிழ் மொழியிலுள்ள செம்மை சான்ற சொற்களால் எடுத்துரைத்துக் கழகத்தைத் திறந்து வைத்தார்கள். பின்பு தலைவர் தேர்தலில் பகவான் முதலியார் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

பின் வை. நடராஜ முதலியார் அவர்களைக் காரியதரிசியாக தேர்ந்தெடுத்தார்கள். மற்றுமுள்ள அங்கத்தினர்களை அடுத்த கூட்டத்தில் தேர்ந்தெடுப்பதாக முடிவு செய்யப்பட்டது. பின் வந்தனோபசாரங் கூறி வாழ்த்து பாடப்பெற்றது. சந்தன தாம்பூல கற்கண்டு முதலியன வழங்கியபின் சுமார் 9-மணிக்கு கூட்டம் கலைந்தது.

---

## வட ஆற்காடு ஜில்லா

### செல்வ விநாயகர் செங்குந்தர் சங்கம் முள்ளிப்பட்டு

ஆவணி௴ 26௳ ஆரணி ஜாகீர் முள்ளிப்பட்டு கிராமத்திற்கு விஜயம் செய்த தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர் உயர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரை இவ்வூர் குலாபிமானிகள் அன்புடன் வரவேற்று உபசரித்தனர். பின்னர் பொதுஜனக் கூட்டம் ஒன்று செல்வ விநாயகர் கோயிலில் கூடி அக்கூட்டத்தில் பொது ஜனங்களின் சார்பாகவும் சிறப்பாகச் செங்குந்தர்களின் சார்பாகவும், இவ்வூர் தமிழபிமானி திரு. ச. பூபால முதலியார் பிரசாரகரை யாவருக்கும் அறிமுகப்படுத்திப் பூமாலை யிட்டுப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

பின்னர் உயர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரைப் பற்றிய சரித்திரத்தில் சிலவற்றையும் அப்படிப்பட்ட நமது மரபில் கல்வி குறைந்து இருக்கும் வருத்தத்தையும் கூறி அவசியம் யாவரும்கல்வி கற்க வேண்டும் என்றும், குடி மாமிசம் இவை யறவே ஒழிய வேண்டுமென்றும் ஒழிந்த அன்றே நம் சமூகம் முன்னுக்கு வருமென்றும், அதிலும் பெண்களுக்கு அவசியம் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும் இவ்வூரில் செங்குந்தர் இளைச்சங்க அவசியத்தைப் பற்றியும் கூறி முடித்தார். பின்பு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.



பி. ரா. குப்புசாமி முதலியார், தலைவர்.
ச. பூபால முதலியார், உபதலைவர்.
A. R. N. சோமசுந்தர முதலியார், அமைச்சர்.
A. சொக்கலிங்க முதலியார், } துணை அமைச்சர்கள்.
பு. சு. குப்புசாமி முதலியார், }
A. குருநாத முதலியார், பொருட்காப்பாளர்.
மற்றும் 15 மெம்பர்களும் சேர்ந்தனர்.

---

## சேலம் ஜில்லா

### மஹாத்மா காந்தி தேசீய வாலிபர் சங்கம் அம்மாபேட்டை

19-9-31 மாலை 7 மணிக்குச் சுந்தரமூர்த்தி மடாலயத்தில் 9-வது கூட்டம் கூடிற்று. அவ்வமயம் தலைவர் ச. கந்தசாமி முதலியார் அவர்கள் அக்ராசனம் வகித்தனர். தலைவர் முகவுரைக்குப் பின் R. முருகேச முதலியார் அவர்கள் பக்தியை பற்றியும், திரு. P.S. அர்த்தனாரி முதலியார் தேச பக்தியைப் பற்றியும், திருவாளர்கள். S. K. A. மாரிமுத்து முதலியார், V. கந்தசாமி முதலியார், P. செங்கோட முதலியார், K. V. நாகலிங்க முதலியார் ஆகியோர் காந்தியாரது பலதுறைப் பக்தியைப் பற்றியும் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

26-9-31 மாலை 6-15-க்கு 10-வது கூட்டம் கூடிற்று. அவ்வமயம் தலைவர் ச. கந்தசாமி முதலியார் அக்ராசனம் வகித்தார். தலைவர் முகவுரைக்குப் பின் திருவாளர்கள். S. பெருமாள் முதலியார், P. S. அர்த்தனாரி முதலியார் விதி, மதி, பகுத்தறிவு, ஆராய்ச்சி, விடாமுயற்சி, கல்வி, தொழில், ஆங்கிலேயர்களின் ஆராய்ச்சி மனிதனுக்கு மதிதான் முக்கிய காரணம். முடிவாக விதியே மனிதனுக்கு பெரிது என்பதாகவும் பேசினார். திருவாளர்கள். M. சுப்ரமண்ய முதலியார், S. அர்த்தனாரி முதலியார், S. K. A. நாகரத்ன முதலியார், A. அப்பாவு முதலியார் மதி பெரியது என்றும் மதியினால் அநேக மகான்கள் மேல் பதவி அடைந்தார்களென்றும் பேசினார்கள். திருவாளர்கள். T. R. அருணாஜல முதலியார், S. K. A. மாரிமுத்து முதலியார் விதி, மதி என்னும் விஷயத்தில் நாம் நமது காரியத்திலேயே கண்ணும் கருத்தாக இருக்க வேண்டும் எனறார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின்பு வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு 9-மணிக்குக் கலையப்பெற்றது.

S. அர்த்தனாரி முதலியார், உபயகாரியதரிசி.

### அசனமாபேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

11-9-31 ஆகிய இன்று இரவு 8 மணிக்கு மேல் இராமநாதீஸ்வரர் ஆலயமண்டபத்தில் சங்கம் கூடியது. அது சமயம் புதுப்பேட்டை ம-ா-ா-ஸ்ரீ த. மு. ரத்தின முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். வாலிபர் திரு. V. ஆரிமுத்து ஆண்டுவிழாவின் அவசியத்தைப் பற்றி, உபந்யசித்தார். பின்னர் அடியிற் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

#### தீர்மானங்கள்

1. டை சங்கத்துக்குக் காரியதரிசி ஸ்தானம் ஒன்று காலியா யிருந்தமையால், அந்த ஸ்தானத்திற்குத் திரு. கோ. குள்ளப்ப முதலியார் அவர்களைக் காரியதரிசியாக நியமிக்க V. ஆரிமுத்து பிரரேபிக்க எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2. சங்கத்தின் ஆண்டுநிறைவு விழா நடத்த திரு. மே. தி. பொற்பாத முதலியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. தலைவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு, அக்டோபர்௴ 17, 18௳ களில் முதலாவது ஆண்டு நிறைவு விழா நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

4. டை விழாவை நிருவாக சபை மெம்பர்கள் புக்தப்படி நடத்த வேண்டியதென தீர்மானிக்கப்பட்டது.

இத்துடன் தலைவர் அவர்களுக்கும் விஜயஞ் செய்திருந்த பெரியோர்களுக்கும் வந்தனோபசாரங் கூறப்பட்டு இனிது முடிந்தது.

---

## கோயமுத்தூர் ஜில்லா

### செங்குந்த வாலிபர் சங்கத்தின் இரண்டாவது சீர்திருத்தக் கூட்டம். தாண்டாம்பாளையம் காமாக்ஷி தமிழ்ச் சங்கம்

டை சங்கத்தின் சீர்திருத்தக் கூட்டம் V. S. செங்கோட்டையா முதலியார் தலைமையில் 6-9-31 ஞாயிறன்று காலை 9-மணிக்குக் கூடியது. தாண்டாம்பாளையத்தில் சமூக ஊக்கமும், பொதுநல நோக்கமுமிகுந்த ஸ்ரீ ஆறுமுக முதலியார் அவர்கள் அனைவருக்கும் ஏற்ற வரவேற்பு அளித்துத் தலைவர்க்கு வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் நிகழ்ச்சிக் குறிப்பிற் கண்டவாறு சொற்பொழிவுகள் பலவும் நடைபெற்றன.

அவ்வூரில் நம்மவருக்குள் சிறு மனஸ்தாபமும் ஒற்றுமைக் குறைவுமிருந்ததை அறிந்து குலப் பிரமுகர்கள் திருவாளர்கள் க. பெருமாள் முதலியார், E. V. துரைசாமி முதலியார், வ. மு. மொட்டையப்ப முதலியார் முதலியவர்கள் விரோதித்துக் கொண்டிருந்தவர்கள் இல்லங்களுக்குச் சென்று அவர்களை அழைத்துக்கொண்டுவந்து அவர்களுக்குள்ளிருந்த மனஸ்தாபங்களை நீக்கி ஒற்றுமைப்படுத்தினபின்னர் தலைவர் முன்னேற்றத்திற்கான பல விஷயங்களையும் எடுத்துப் போதித்தபின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. பகற்போஜனத்தில் விரோதிகளாயிருந்த கனவான்களும் ஒற்றுமைக்கறிகுறியாகக் கூட்டத்

தில் போஜனமுண்டனர். தலைவர்கள் புகைப்படமொன்று பிடிக்கப்பட்டது.

## இரண்டாவது ஆண்டின் முதல் கிராமக் கூட்டம் (சிவகிரி 5—9—31)

மேற்படி கூட்டம் சென்ற ஆவணி 20-ம்தேதி சனிக்கிழமை மாலை 4-மணிக்குச் சிவகிரி யென்னும் கிராமத்தில் சிவகிரிச் செங்குந்த சன்மார்க்க சங்கத்தின் சார்பில் கூடிற்று. அப்போது திரு. வா. செ. செங்கோட்டையா முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர்களின் ஊர்வலத்திற்குப் பிறகு கூட்டம் தொடங்கிற்று. தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்த பின்பு, ஜில்லா சங்கத்தின் அறிக்கை படிக்கப்பட்டு தலைவர் முன்னுரையான பின்னர், செங்குந்தப்பெண். மக்களின் நிலைமை என்பதைப்பற்றி வடவழி திரு வ. பெ. மாரியப்ப முதலியாரும், 'காந்தியடிகளும், திருவள்ளுவரும்' என்பதைக்குறித்துக் கோவை திரு. சுப்பையா முதலியார் அவர்களும் கிருஷ்ண பரமாத்மாவின் உபதேச மொழிகள்' என்பதைக் குறித்துத் திரு. ஈ. வே. சிங்காரவேலு முதலியார் அவர்களும், 'நம்மவர் கடமை' என்பதைக் குறித்து ஈரோடு திரு. வி. எம். மொட்டையப்ப முதலியார் அவர்களும், 'மதுவிலக்கின் அவசியம்' என்பதைக் குறித்து, கோவை திரு. கே. பெருமாள் முதலியார் அவர்களும்; 'தெய்வ வழிபாடும், நமது சமூகமும்' என்பதைப்பற்றி மூலத்துறை திரு. ஈ. வே. துரைசாமி முதலியார் அவர்களும், விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். சிவகிரி சங்கத்தின் சட்டதிட்டங்கள் வாசிக்கப்பட்டன. பின்பு அவ்வூரில் நம்மவரிடையிருந்த மனஸ்தாபத்தையும், ஒற்றுமைக் குறைவையும் பற்றிப்பேசி அவற்றை நீக்கினார்கள். தலைவர்களின் புகைப்படமும் எடுக்கப்பட்டது. பின்னர் தலைவர் பெரும் கரகோஷத்தினிடையே எழுந்து கக்ஷியொழித்து ஒற்றுமைபூணல், கல்வி, கைத்தொழில்களில் விருத்தியடைதல் முதலியவற்றிற்கேற்ற முறைகளைப்பற்றி ஓர் அருஞ்சொற்பொழிவு நிகழ்த்தினார். ஜில்லா சங்கக்காரியதரிசி யாவருக்கும், வந்தனத்தை செலுத்தின பின்னர் கூட்டம் இனிது கலைந்தது.

---

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம்

### இரண்டாம் வருடப் பூர்த்தி விழா

இச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா சென்ற 27-9-31 ஞாயிறன்று மாலை 3-மணிக்குச் சங்க வாசகசாலைக்கு எதிரிலுள்ள திரு. சின்னகொண்டா, சு. பா. பாலகிருஷ்ணய்யர் மண்டபத்தில் மாஜி நகரசபை அங்கத்தினரும் மதுரை தாலூகா தேவஸ்தான கமிட்டி உபதலைவருமான உயர். திரு. S. சாலை முதலியார் அவர்களின் அவைத்தலைமையின்கீழ் நடைபெற்றது.

கடவுள் வணக்கத்திற்குப்பின் தலைவர் முன்னுரை கூறுகையில் இச்சங்கத்தினர் நம் சமூகமுன்னேற்றங் கருதிப் பல கூட்டங்களைக் கூட்டுவிக்கும்பொருட்டு இலவச வாசகசாலை ஒன்றை திறம்பட நடாத்தியும், தக்க அபிவிருத்தி காட்டியுள்ளனரென்றும், நம் சமூக பூர்வீகத் தொழிலாகிய நெசவுத்தொழில் நாளுக்குநாள் க்ஷீணித்து வருகிறதென்றும் தற்காலப்போக்கை யநுசரித்து கதர், சுதேசி மில் நூல்களைக் கொண்டு ஆடைகளை தயாரித்தல் வேண்டுமெனவும், வியாபாரிகளும் அன்னிய ஆடைகளுக்குப் பதிலாகச் சுதேசி ஆடைகளையே வாங்கி வியாபாரம் செய்யவேண்டுமெனவும், மதுவை விலக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். அடுத்தாற் போல் வந்திருந்தவர்கள் யாவருக்கும் சிற்றுண்டி வழங்கப் பெற்றது.

பின் கூட்டுக் காரியதரிசி திரு. வீ வீரபத்திரன் சங்க வருடாந்தர அறிக்கையை வாசித்தார். அறிக்கையில் இவ்விரண்டாம் ஆண்டில் ஏழு கூட்டங்கள் நடைபெற முடிந்ததென்றும், நமது வாசக சாலையின் அபிவிருத்திக் கென ஓர் லாட்டரிச் சீட்டு. நடாத்தி அதை இனிது முற்றுப் பெறச் செய்வதில் முழு கவனத்தையும் காலத்தையும் செலவழிக்க நேரிட்டதால் சங்க நிர்வாகிகளால் அதிகப்படியான கூட்டங்கள் நடாத்த முடியவில்லை என்றும் இவ்வருடத்தில் நம் இளைஞர் திலகம் கு. ஹாலயம், மு. அங்குசாமி அவர்கள் காலஞ் சென்றதை குறித்து வருந்துவதோடு அவ்வுத்தமத் தொண்டரின் ஞாபகார்த்தமாக அவரது நண்பர்களால் சங்கத்திற்கு பரிசளிக்கப்பட்ட திருவுருவப் படமொன்று மிக்க வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்துடன் வாசக சாலை என்னும் தலைப்பில் பல புதிய நாவல்கள் கதைப் புத்தகங்கள் பத்திரிகைகள் வரவழைக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப் பெற்றிருந்தது. இவ்வருடத்தில் வாசகசாலைக்கு விஜயம் செய்து பத்திரிகைகளும் நூல்களும் வாசித்தவர்களின் தொகை 6650.

பின்னர் "சமூக முன்னேற்றம்" "சங்கத்தின் அவசியம்" என்பவை பற்றி முறையே திருவாளர்கள் P. V. முத்துக்கருப்ப முதலியார், S. மாணிக்க முதலியார் பேசினர். பிறகு திரு. S. கூடலிங்கம் பிள்ளை அவர்கள் "வாசக சாலையின் அவசியம்" என்பது குறித்து விரிவுரை நிகழ்த்தினர்.

தலைவர் தம் முடிவுரையில் முன் பேசியவர்களைத் தழுவிச் சில முக்கிய குறிப்புக்களை மட்டிலும் எடுத்துக்காட்டிச் சங்கம் விசேஷஅபிவிருத்தியடையவேண்டுமெனத் தாம் விரும்புவதாகக் கூறிமுடித்தார்.

புது வருடத்திற்குக் கீழ் வருவபவர்களை அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. திருவாளர்கள். நா. ப. பழனிக்குமாரு முதலியார், தலைவர். இராமசாமி முதலியார், P. V முத்துக்கருப்ப முதலியார், உபதலைவர்கள், க. சண்முகவேலு, செ. வீ. சபாபதி முதலியார் காரியதரிசிகள். கு. மயிலப்ப முதலியார் பொக்கிஷதார். ச. மாணிக்க முதலியார் வாசகசாலைநிர்வாகி. எஸ. சாலை முதலியார், வீ. வீரபத்திரன், எஸ்.செ சண்பக முதலியார், கே. வி. ராமசாமி முதலியார், நா. சண்முகவேலு முதலியார், சி. பொன்னம்பல முதலியார், எஸ். பழணியப்ப முதலியார், நிர்வாக அங்கத்தினர்கள்.

சண்முகவேலு முதலியார், காரியதரிசி.

158902

Registered No. M. 1514

ஐயா,   ராசிப்பாளையம் கிராமம்

மின்சார ரசம் வாங்கி 4½-வருஷமாக இருந்த விப்புருதி 10-நாட்களுக்குள் புண் ஆரிப் போனபடியால் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி அனுப்புங்கள்.

த. அ. அங்கப்ப தேவர், சூலூர் போஸ்டு.

12-9-29   செம்மணுப்பட்டி,

ஐயா, ** மின்சார ரசத்தை எருமை வெண்ணெயில் கலந்து சாப்பிட்டதில் வெள்ளை, வெட்டை சவுகரியமாய் விட்டது. தயவு செய்து 3-புட்டி அனுப்புங்கள்.

தோத்தி செட்டியார், வாடிபட்டி போஸ்டு.

## மின்சார ரசம்

சகல ரோகங்களுக்கும் தேவாமிர்தம் போன்றதென ஜகப்பிரசித்தி பெற்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

புட்டி 1-க்கு ரு. 2. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:— கேட்லாக் இனாம்.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்

ஐயா,   ஆரணி 21-5-29

** 6-வேளை மின்சார ரசம் மருந்தில் கால் வீழ்ந்து கிடந்த நோய் தீர்ந்தது. இன்னும் 2-பாட்டல் அனுப்புங்கள்.

M. A. ஆளவந்தார் பாகவதர், பிந்சல் தெரு.

ஐயா,   Champion Reafs. 27-1-30

என் மனைவிக்கு 7 வருஷ காலமாக என்னால் இயன்ற வரை ஏராளமான பணத்தைச் செலவு செய்து தீராமலிருந்த வியாதித் தங்கள் மின்சார ரசத்தினால் சௌக்கியமாய் விட்டது. இன்னும் ஒரு பாட்டல் அனுப்புங்கள்.

R. V. Kattaari G. Block, 53rd Line

# "பல் ஜாக்கிரதை"

தங்கள் விலாசம் தெரிவித்தால்

## கல்நார் பற்பொடி

இனாமாக அனுப்புவோம்.

விலாசம் :— **A. N.** காதர் அவுலியா,

வலங்கைமான்,

தஞ்சை ஜில்லா.

ஒன்றரை ரூபாய்க்கு ஒரு பெரும் பொக்கிஷம்

## "செங்குந்த மித்திரன்"

உடனே வாங்குங்கள்!   உயர்வடையுங்கள்!

உள்நாடு ரு. **1—8—0.**   வெளிநாடு ரு. **2—0—0.**

தனிப் பிரதி **0—2—6.**

**This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.**